Registered as a News Paper in Sri lanka


விலை : ரூபா 20.00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 19 செவ்வாய்க்கிழமை (04.08.2015) பக்கங்கள் 20 ஓசை – 307




# வடக்கில் நடந்தது இனப்படுகொலையா?



## பதில் சொல்லவேண்டும் கூட்டமைப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் முள்ளிவாய்க்கால் அவலம் வரை இடம்பெற்ற கொடூரங்கள் இனவழிப்புப்படு கொலைகளா? இல்லையா? இவ்விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்பதை சுமந்திரன் இப்போதாவது தமிழ் மக்களுக்குத் தெளிவான சொற்களில் வெளிப்படுத்துவாரா? இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கின்றார் மூத்த ஊடகவியலாளரும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் இணைப் பாளருமான என்.வித்தியாதரன்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் சிலந்திச் சின்னத்தில் சுயேட்சைக் குழுவாக களம் இறங்கியிருக்கும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைமை வேட்பாளரான அவர், இவ்விடயத்தை ஒட்டி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு,

ஈழத் தமிழர்களின் பல நூற்றாண்டு கால வரலாற்றில் மிகக் கோரமான மிகக் கொடூரமான மிக மோசமான அவலமாக அரங்கேறிய இனவழிப்புப் படுகொலையின் தொடர் நடவடிக்கையே முள்ளிவாய்க் காலில் ஓரங்கமாக முடிவுற்றது.

19 ஆம் பக்கம் பார்க்க

## படை அதிகாரிகளுக்கு புதிய கட்டுப்பாடுகள்

(கொழும்பு)

மீரிஹானவில் இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்த வெள்ளை வான் ஒன்று பொலிஸாரிடம் அகப்பட்டதை அடுத்து, பிரிகேடியர் மற்றும் அதற்கு மேற்பட்ட பதவிகளில் உள்ள இராணுவ அதிகாரிகள் வாகனங்களைப் பயன்படுத்துவது குறித்து புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வா

19 ஆம் பக்கம் பார்க்க

## தபால்மூல வாக்களிப்பு நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை ஆசிரியர்கள், பொலிஸ் அதிகாரிகளுக்கான தபால மூல வாக்களிப்பு நேற்று யாழ். மாவட்டத்தில் இடம் பெற்றது. இதன்படி பொலிஸ் நிலையங்களிலும் வலய அல்லது கோட்டக் கல்வி அலுவலகங்களிலும் நேற்று தபால்மூல வாக்கெடுப்பு சுமூகமாக நடைபெற்றது.

குறித்த தபால் மூல வாக்களிப்பை முன்னிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தது. யாழ்.மாவட்டத்தில் வாக்களிக்க விண்ணப்பித்தவர்களுக்காக 24

19 ஆம் பக்கம் பார்க்க

## அரச வாகனங்களை ஒப்படைக்க பணிப்பு

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது உத்தியோக பூர்வ அரச வாகனங்களை உடனடியாக கையளிக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்

19 ஆம் பக்கம் பார்க்க

# பொருளாதார முன்னேற்றமும் அபிவிருத்தியுமே எமது இலக்கு

## மக்கள் சந்திப்பில் டக்ளஸ்

(கிளிநொச்சி)

எமது மக்களைப் பாதுகாத்துக் கொண்டு அபிவிருத்தியுடனான முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வதே எமது நிலைப்பாடாகுமென ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் நேற்றைய தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், நான் அமைச்சராக இருந்த


19 ஆம் பக்கம் பார்க்க







ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)



மானிப்பாய் பொலிஸார் பாடசாலைகள் தோறும் போதைப் பொருள் விழிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்தி வருகின்றனர். அதன் ஒரு கட்டமாக அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடாத்தப்பட்டபோது...

# சுபீட்சமான எதிர்காலத்திற்காய் ஈ.பி.டி.பி.யிற்கே எம் ஆதரவு

## பரப்புரைக்கூட்டத்தில் செட்டிகுளம் மக்கள் உறுதி



(செட்டிகுளம்)

வளமான எதிர்காலத்திற்காகவும் சுபீட்சமான எமது வாழ்விற்காகவும் நாம் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வெற்றியை உறுதிசெய்ய திடசங்கற்பம் பூண்டுள்ளோம் என செட்டிக்குளம் மக்கள் தெரிவித்துள்ளனர். வன்னி தேர்தல் மாவட்டம் (வவுனியா) நேற்று முன்தினம் சூறாவளி தேர்தல் பரப்புரையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு தேடும் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர். இதன்போது கடந்தகாலங்களில் நாம் அற்ப சலுகைகளுக்காகவும் நடைமுறைச்சாத்தியமாகாத பொய் வாக்குறுதிகளையும் நம்பி தேர்தலில் வாக்களித்திருந்தோம். இதன்பயனாக நாம் எமது வாக்குகளால் தமக்கென வெற்றியைப் பெற்றுக் கொண்ட அரசியல்வாதிகள் எம்மிடம் வந்து எமது குறைநிறைகள் தொடர்பில் நேரில் வந்து கேட்டதுமில்லை எம்மீது அக்கறை செலுத்தியதுமில்லை.

அந்தவகையில் மீண்டுமொரு நாடாளுமன்ற தேர்தலை நாம் எதிர்வரும் 17 ஆம் திகதி சந்திக்கவுள்ளோம். இந்த தேர்தலில் ஏனையோருக்கு வாக்களிப்பதை நிராகரித்து எமது வளமான எதிர்காலத்திற்காகவும் சுபீட்சமான நல்வாழ்வுக்காகவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினருக்கு நாம் எமது முழுமையான வாக்குப்பலத்தை வழங்கி அவர்களுக்கு அரசியல் பலத்தை கொடுக்க வேண்டுமென நாம் அனைவரும் திட சங்கற்பம் பூண்டுள்ளோம் என்றும் மக்கள் சுட்டிக்காட்டினர்.

இதில் கருத்துத் தெரிவித்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நாம் தேர்தல் காலங்களிலும் சரி ஏனைய காலங்களிலும் சரி நடைமுறைச்சாத்தியமற்ற விடயங்களையும் பொய்யான வாக்குறுதிகளையும் தேர்தல் வெற்றிக்காக மக்களிடம் சென்று வாக்கு கேட்பவர்களல்ல"மாறாக எமது மக்களின் வாழ்வாதார பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கை கொண்டதாகவே எமக்கு ஆதரவு வழங்கச் சொல்லி நாம் கேட்கின்றோம்.

நாம் மக்களோடு நின்று மக்களுக்காக பணிசெய்பவர்களே அன்றி ஏனையவர்களைப் போன்று மக்களை விட்டு தமது சுயலாபங்களுக்காக ஓடிப்போனவர்களல்ல. மக்கள் துன்ப துயரங்களையெல்லாம் அனுபவிக்கும் போதெல்லாம் அவர்களோடு நின்று அவர்களிற்கு ஆதரவுக்கரங்களை நீட்டி அவர்களை தேற்றுவோராகவே செயற்படுகின்றோம். எதிர்காலத்தில் அவ்வாறே தொடர்வோம் என்றும் சுட்டிக்காட்டினார். இதனிடையே இச் சூறாவளி தேர்தல் பிரசாரத்தில் வவுனியா மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களுக்கும் விஜயம் மேற்கொண்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் மற்றும வேட்பாளர்கள் மக்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளதுடன் அவர்களது தேவைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டனர்.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

தேர்தல் மாவட்டம் - வன்னி



அன்ரனி அருள்ராஜசேகர்

(சாந்தன்)

மாவட்ட இணைப்பாளர் வவுனியா



X 1

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


## குளோபல் மெட்ரோ முன்பள்ளியின் விளையாட்டு விழா



குளோபல் மெட்ரோ கம்பஸ் முன்பள்ளி விளையாட்டு விழா நேற்றுப் பிற்பகல் மாலுசந்தி மைக்கல் விளையாட்டு கழக மைதானத்தில் 2.30 மணியளவில் நடைபெற்றது. முன்பதாக விருந்தினர்கள் பாண்ட் வாத்தியக் குழுவினரால் வரவேற்கப்பட்டனர்.

தொடர்ந்து பிரதம விருந்தினர் மங்கள விளக்கேற்றி தேசியக்கொடி ஏற்றியதை தொடர்ந்து விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வைத்ததை அடுத்து நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் முரளி, சிறப்பு விருந்தினர்களாக ஜே 377 கிராம அலுவலர் ரதீசன், மாவட்ட பொறுப்பதிகாரி, சிறுவர் நிதியம் ஜெகதீபன், வேள்ட் விஷன் நிறுவனத்தின் முன்னாள் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் பகீரதராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் பெற்றோரும் பெரும் எண்ணிக்கையிலான ப்ர்வையாளர்களும் நிகழ்வுகளைக் கண்டு களித்தனர்.

# தாவடி இந்துவின் நூல் வெளியீடு

(தாவடி)

தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் நூற்று நாற்பதாவது ஆண்டு நிறைவு நிகழ்வையொட்டி கடந்த சனிக்கிழமை "தாவடி இந்து" எனும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

பாடசாலை வளாகத்தில் அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் நூலினை வெளியிட்டு வைக்க பழைய மாணவனும் ஐக்கிய ராஜ்சியத்தின் வைத்திய கலாநிதியுமான பொ.ஆறுமுகராசா பெற்றுக் கொண்டார்.

நூலின் அறிமுக உரையை யாழ். பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் பீட பேராசிரியர் க. தேவராசா நிகழ்த்தியதுடன் மதிப்பீட்டுரையை இணுவில் இந்துக் கல்லூரியின் ஆசிரியர் த. சசீதரன் நிகழ்த்தினார்.

# மோட்டார் சைக்கிள் விபத்து; இருவர் காயம்

(நெல்லியடி)

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் மற்றும் வயோதிபப் பெண் ஒவரும் காயமடைந்துள்ளனர்.

நெல்லியடி சந்தியில் கடந்த சனியன்று இடம்பெற்ற இவ் விபத்தில் கரவெட்டியைச் சேர்ந்த ப. விதுசன் (வயது-23), செ. யோகேஸ்வரி (வயது - 67) ஆகியோரே காயமடைந்து மந்திகை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

காயங்களுக்குள்ளான இளைஞர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(அ.18)

—— மாற்றுவலுவுள்ளோர் என்பதால் ——

# போதைப்பொருள் குற்றவாளிக்கு பிணை வழங்குவதற்கு மறுப்பு

## நீதிபதி இளஞ்செழியன் தெரிவிப்பு



கிளிநொச்சியில் போதைப் பொருளாகிய கஞ்சா விற்பனை செய்தார், மற்றும் உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ள வலுவிழந்த ஒருவருக்கு, அவருடைய இயலாமைககாகப் பிணை வழங்கினால், அது அவர களுக்கு மேலும் மேலும் குற்றம் புரிவதற்கு அனுமதி வழங் கியதாகிவிடும் என கூறி நீதிபதி இளஞ்செழியன் பிணை வழங்க மறுத்துள்ளார்.

போதைப் பொருள் கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப் பட்ட வலது குறைந்த ஒருவர் கிளிநொச்சி மாவட்ட நீதிமன் றத்தின் கட்டளைக்கமைவாக விளக்கமறியலில் இருந்து வருகின்றார்.

இவரைப் பிணையில் வெளி யில் எடுப்பதற்கான பிணை மனுவொன்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு வைத் தாக்கல் செய்த சட்டத் தரணி, நீதிமன்றத்தில் முன் வைத்த விண்ணப்பத்தின்போது தெரிவித்ததாவது:

போதைப் பொருள் சட்டமா னது, விதிவிலக்கான சந்தர்ப் பத்தில் மட்டும், போதைப் பொருள் சம்பந்தப்பட்ட வழக் கொன்றில் மேல் நீதிமன்றம் பிணை வழங்கலாம் என்று பரிந் துரை செய்திருக்கின்றது. இதற்கு அமைவாக இந்தப் பிணை மனு தாக்கல் செய்யப்படுகின்றது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட வர் வலுவிழந்த ஒரு நபர். அத னால், அவர் இயலாதவராக இருக்கின்றார். அவருடைய இய லாமை காரணமாக அனுராதபுரம் சிறைச்சாலையில் சொல்லொ ணாத சிரமங்களுக்கும் கஷ்டங் களுக்கும் ஆளாகியிருக்கின் றார். அவருடைய மனைவி குழந்தைகள் உணவுக்கு வழி யின்றி சிரமப்படுகின்றார்கள். எனவே, அவர்களின் கஷ்ட நிலை மையைக் கருத்திற் கொண்டு, போதைப் பொருள் சட்டத்தின் 83 ஆம் பிரிவின் கீழ் பரிந்து ரைக்கப்பட்டவாறு, வலுவிழந் தவர் என்ற ரீதியில் அவருடைய இயலாமையை விதிவிலக்கான காரணமாகக் கொண்டு அவருக் குப் பிணை வழங்க வேண்டும் என கோரினார்.

• நீதிமன்றத்தில் அப்போது முன்னிலையாகியிருந்த அரச சட்டத்தரணி, போதைப் பொருள் குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் அந்த நபருக்குப் பிணை வழங்கக் கூடாது என ஆட்சேபனை தெரிவித்தார். அத துடன், தனது ஆட்சேபனையை எழுத்து வடிவில் ஒரு மனுவாக நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற் கான கால அவகாசத்தையும் தவணையையும் கோரினார்.

இதனையடுத்து, நீதிபதி இளஞ்செழியன் பிணை மனு தாக்கல் செய்த சட்டத்தரணியை நோக்கிச் சில வினாக்களை வினவினார்.


போதைப் பொருள் குற்றம் புரிபவர்களுக்கு அங்கவீனம் என் பது பிணை விடுவதற்கு ஒரு சலுகையா அல்லது தகைமையா? விதிவிலக்கான காரணம் என இதனை ஒரு தகுதியாகக்கொள்ள முடியுமா? அங்கவீனமுடைய ஒரு வர் போதைப்பொருள் குற்றம் புரிந்து இன்னுமொரு நபரை அங் கவீனராக ஆக்கலாமா? ஏனென் றால், போதைப் பொருளினால் கண்கள் தெரியாமல் போகின்றன. உடற் பாகங்கள் வலுவிழக்கின் றன. மூளை செயலிழக்கின்றது. இறுதியில் மரணம் சம்பவிக்கின் றது. எனவே. அங்கவீனர் என்ற காரணத்திற்காக போதைப் பொருள் உடைமையில் வைத்தி ருந்தார் என்ற, குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள இந்த நப ருக்கு சட்டப்படி பிணை வழங்க முடியுமா? இதைத்தானா விதி விலக்கான சந்தர்ப்பம் அல்லது விதிவிலக்கான காரணம் என்று சட்டம் பரிந்துரை செய்கின் றது? என நீதிபதி வினவினார்.

அத்துடன், கிளிநொச்சியில் போதைப்பொருள் மற்றும் கசிப்பு விற்பனை, கசிப்பு உற்பத்தி சமூக விரோதக் குற்றச் செயல்கள் அதி கரித்திருக்கின்றன. அவற்றை அடியோடு ஒழிக்கும் நடவடிக் கையில் பொலிஸார் ஈடுபட்டி ருக்கின்றனர். அதற்காக அத்த கைய குற்றச் செயல்களில் ஈடு படுபவர்களை அவர்கள் கைது செய்து சட்டரீதியாக நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், விளக்கம றியலில உள்ள ஒருவருக்கு பிணை வழஙகுவதற்கு அவருடைய அங் கவீனத்தை ஒரு சலுகையா அல்லது தகைமையாக எவ்வாறு கொள்ள முடியும்? என நீதிபதி இளஞ் செழியன் வினவினார்.

அப்போது அந்த அங்கவீன நபருக்காக ஆஜராகியிருந்த சட் டத்தரணி, அங்கவீனம் காரண மாக அவரால் சிறை வாழ்க்கை வாழ முடியாதுள்ளது. அவர் பல வேதனைகளை அங்கு அனுப வித்து வருகின்றார். அவருடைய மனைவியும் குழந்தைகளும் நீதி மன்றத்திற்கு வந்துள்ளார்கள். நாளாந்த சீவியத்திற்கு வழி யின்றி அவர்கள் கஷ்டப்படுகின் றார்கள். எனவே, அங்கவீனம் கார ணமாக அந்த நபர் சிறையில் படும் கஷ்டங்கள் அதேபோன்று அவருடைய மனைவி பிள்ளைக ளின் நிலைமை என்பவற்றைக் கருத்திற் கொண்டு பிணை வழங்க வேண்டும் என்று மீண்டும் நீதிப தியிடம் விண்ணப்பம் செய்தார்.

சந்தேக நபருக்காக நீதிமன் றத்தில் முன்வைக்கப்பட்ட விண் ணப்பத்தையும், அரச சட்டத் தரணி முன்வைத்த கால அவகாச கோரிக்கையையும் பரிசீலனை செய்த நீதிபதி இளஞ்செழியன், இந்த பிணை மனு தொடர்பான விசாரணைகள் செப்ரெம்பர் மாதம 16 ஆம் திகதி நடைபெறும் எனக கூறி வழக்கை ஒத்தி வைத்தார்.

# சாரணர் அணித் தலைவர்களுக்கு மூன்று நாட்கள் பயிற்சிப் பாசறை



மன்னார் வலய கல்வித் திணைக்களம் மன்னார் மாவட்ட சாரண சங்கத்துடன் இணைந்து மன்னார் கல்வி வலய சாரண அணித்தலைவர்களுக்கான 03 நாள் வதிவிட தலைமைத்துவ பயிற்சிப் பாசறையை மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல் லூரி மைதானத்தில் கடந்த வெள ளிக்கிழமை முதல் நேற்றுமுன் தினம் வரை மிகவும் சிறப்பாக நடாத்தி முடித்தது.

இதில் சாரணர் படையணி இயங்கும் 25 பாடசாலைகளில் இருந்து தலா 04 சாரண அணித் தலைவர்கள் வீதம் தெரிவுசெய் யப்பட்ட 100 சாரண அணித் தலைவர்கள் பங்குபற்றினர்.

இப்பயிற்சிப் பாசறையானது மன்னார் வலய கல்விப்பணிப் பாளர் எம்.எம் சியானின் வழி காட்டலிலும் நெறிப்படுத்தலி லும் வலய உதவிக்கல் விப்பணிப பாளரும் மன்னார் மாவட்ட சார ணர் சங்க மாவட்ட ஆணையா ளருமாகிய ப.ஞானராஜால் முன் னெடுக்கப்பட்டது.

இப்பயிற்சிப் பாசறையில் இலங்கை சாரணர் சங்க (ALT) தரமுடைய வளவாளர்கள் இரு வரும் (wood badgejuKil a) வளவாளர்கள் மூவரும் அடங் கலாக பத்து வளவாளர்கள் பங் குபற்றி சிறப்பான பயிற்சியை வழங்கினர். அத்துடன் பயிற்சி யின் நிறைவில் 37 சாரணர்க ளுக்குச் சின்னம் சூட்டும் நிகழ் வும் நடைபெற்றது.

# துவிச்சக்கர வண்டி அன்பளிப்பு



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினரால் நேற்று முன்தினம் கிளிநொச்சி தொண் டமான்நகர் கிராமத்தில் பொரு ளாதார நலிவுற்ற குடும்பம் ஒன்றைச் சேர்ந்த கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தரம் 10இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவ னுக்கு துவிச்சக்கர வண்டி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள் ளது.

இவ்வமைப்பு யாழ்ப்பாணத் தில் பல்வேறு பிரதேசங்களிலும் பல சமூகப் பணிகளை மேற் கொண்டு வருகிறது. குறிப்பாக கல்விக்கு அதிக உதவிகளை மேற்கொண்டு வருகின்றது.

ஒரு இளைஞர் சமூகம் தற் காலத்தில் இவ்வாறு செயற்படு வது உண்மையிலேயே பாராட் டிற்குரியது. (29)

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
(தேர்தல் மாவட்டம் வன்னி)

அ.ஜெயராஜ்

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

இயற்கை இயல்பறிந்து வேலை எடு
வியர்வை ஆறும் முதல் கூலி கொடு
-அன்புவழியூர்க் கவிராயர்-

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

இல:373, பிரதானி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## எந்தக் கிரகத்துச் சர்வதேசம்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசார ஆரம்பக் கூட்டத்தில், 2016 ஜூன் மாதத்தில் தீர்வு நிச்சயம் என்று அதன் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் அடித்து விட்டபோது, நமக்கு அது வழக்கமான 'குண்டு'தான் என்ற அனுபவமிருந்ததால் அதிர்ச்சியொன்றும் ஏற்படவில்லை.

ஆனால், கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களும், ஆதரவாளர்களும், கூட்டமைப்பைத் தவிர்ந்த ஏனைய கட்சிகள் எல்லாம் துரோகக் கட்சிகளே என்று விடாமல் மக்களுக்கு அறிவித்துக் கொண்டிருக்கும் கூட்டமைப்பு சார் ஊடகக்காரர்களும் சற்று அதிர்ந்துதான் போனார்கள்.

"இது கொஞ்சம் ஓவரல்லவா... இன்னும் கொஞ்சம் திகதிக் கணக்கைத் தள்ளி வைத்தாவது தலைவர் இந்தக் குண்டைப் போட்டிருக்கக் கூடாதா... நமக்கே திருப்பிச் சொல்வதற்குத் தயக்கமாக இருக்கிறதே..." என்றெல்லாம் வெளிப்படையாகவே விசனப்பட்டுக் கொண்டவர்கள் இருந்தார்கள்.

"தமிழர்கள் வழக்கம் போல் ஒற்றுமையைக் காட்டினால் சர்வதேசம் வரும், அழுத்தம் வரும், சிங்கள அரசு அலறியடித்து எங்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டி வரும், தீர்வைத் தரவேண்டி வரும் என்று சொல்வதுடன் நிறுத்திக் கொண்டிருக்கலாமே...

பிறகு, நாங்கள் போய் பேச்சுவார்த்தை மேசையில் சமஷ்டி என்று ஒரு சொல்லை எறிந்துவிட்டு என்ன சொல்கிறீர்கள் என்று நிமிர்ந்து பார்க்க, அவர்கள் மிரண்டு போய்ப் பதற...

சிங்கள அரசுகள் ஒருபோதும் தீர்வைத் தரப் போவதில்லை, அடுத்த தேர்தலிலும் ஒற்றுமையைக் காட்டி சர்வதேசத்தை அழைத்து... என்று போய்க் கொண்டிருந்திருக்கலாமே... இந்தாள் ஏன் அவசரப்பட்டுத் திகதியைச் சொன்னது..." என்றே அவர்கள் நினைத்தார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தலைவருக்கு நெருக்கமானவருமான ஆபிரகாம் மதியாபரணம் சுமந்திரனும் அப்படித்தான் கவலைப்பட்டுக் கொண்டிருந்திருப்பார் போலும்!

இப்போது தலைவரின் அந்தக் கூற்றுக்கான தனது பொழிப்புரையில், "மூக்கால் சாப்பிடுவோம் என்று சொன்னால் ஏன் மூக்கென்று எடுத்துக் கொள்கிறீர்கள்... மூக்குக்குக் கொஞ்சம் கீழே வாயால் சாப்பிடலாம்தானே..." என்று சமாளித்திருக்கிறார்.

"தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு திடீரென உதிக்கப் போவதில்லை. ஆனால், தீர்வொன்றை அடைவதற்கான சூழலை தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆன வழிகளில் உருவாக்கியிருக்கின்றது" என்று அவர் கூறியிருக்கின்றார்.

ஆன வழிகளில் உருவாகியிருக்கும் அந்த சூழல் என்ன, அதன்மூலம் எப்போதைக்குத் தீர்வு காணலாம், என்ன மாதிரியான வழியில் அந்தத் தீர்வு வரும் என்று வழக்கம்போல அவர் சொல்லவில்லை.

பின்வருமாறு சுத்துகிறார்: "இந்தச் சூழியல் மாற்றங்கள் தீர்க்கமானவையாக இல்லாத போதும் நிச்சயமாக சாதகமானவையே." – மாற்றங்கள் தீர்க்கமாக இல்லாமல் சாதகமாக அமைவது எப்படி? அது என்ன சாதகம் என்பதை விளக்கத் தேவையில்லையா?

தலைவரின் குண்டை மறுத்துவிட்டுத் தலைவரை விடப் பெரிய குண்டைப் போடுகிறார் சுமந்திரன்: "நாம் நீண்ட காலமாக சமஷ்டியைக் கோரி வந்திருக்கிறோம். இன்று அதற்குச் சர்வதேச ஆதரவு இருக்கின்றது." என்று போடாகப் போடுகிறார்.

எந்தச் சர்வதேசம் சமஷ்டி பற்றிக் கூறியிருக்கிறது. அந்த நம்பிக்கை வார்த்தைகளைச் சொன்னவரை மக்களும் தெரிந்து கொள்வதற்குக் காட்ட வேண்டாமா?

மக்கள் யாருக்கும் தெரியாமல் எந்தச் சர்வதேசத்துடன் நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? எந்தக் கிரகத்தில் அது இருக்கிறது சுமந்திரன் அவர்களே?

- ஆசிரியர்

# விசன் 2020 திட்டத்தின் கீழ்

# வட,கிழக்கில் கண் சத்திர சிகிச்சை

## – சுகாதார அமைச்சு தீர்மானம். –

(கொழும்பு)

சுகாதார அமைச்சின் (Vision) விசன் 2020 திட்டத்தின் கீழ் வடக்கு, கிழக்கு மக்களுக்கு கண்பரிசோதனை மற்றும் கண் சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் கண் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் 130 பேருக்கு (Cataract) சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. இவர்களுக்கான இச் சத்திரசிகிச்சையினை முன்னெடுப்பதற்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியர் டி.ஜே.தாஸ் முன் வந்துள்ளார். என சுகாதார அமைச்சின் பேச்சாளர் எஸ்.எம். குமாரி தெரிவித்தார்.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட கண் பரிசோதனையின் மூலம் முல்லைத்தீவு மாவட்டத்தில் 300 நோயாளர்களும் வவுனியா மாவட்டத்தில் 77 நோயாளர்களும் இனம்காணப்பட்டுள்ளனர்.

விசன் 2020 திட்டத்தின் கீழ் நாடு பூராகவும் முன்னெடுக்கப்படும் இக் கண் பரிசோதனையின் மூலம் இனங்காணப்படும் நோயாளர்களில் 100 பேருக்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஐ.ம.சு. முன்னணி படுதோல்வியடையும்

## கூறுகிறார் ராஜித

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்த தலைமையில் செயற்பட்டு வரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி படுதோல்வியடையும் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி படுதோல்வி அடையும்.

கட்சியினால் ஒரு கொள்கைக்கு ஏற்பட செயற்பட முடிவில்லை என்றால் கட்சிக்காரர்களுக்கு கட்சி குறித்து தெளிவில்லை என அர்த்தப்படும்.

எனவே நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்த தலைமையில் செயற்பட்டு வரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி படுதோல்வியடையும் என்பது நிதர்சனமான உண்மை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்ப்பு தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

# இலங்கையில் உதயமானது பெண்களுக்கான தொழிற்சங்கம்

(கொழும்பு)

இலங்கையில் தொழில் ரீதியாக பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் நோக்குடன், முதல் முறையாக பெண்களுக்காக, பெண்களால் நடத்தப்படும் தொழிற்சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அது விரைவில் உரிய முறையில் பதிவு செய்யப்படும் என பெண்கள் ஒற்றுமை ஒன்றியம் எனப்படும் இந்த தொழிற்சங்கத்தை ஏற்படுத்தியுள்ளவர்களில் ஒருவரான பத்மினி விஜயசூரிய பி.பி.சி.யிடம் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள ஏனைய தொழிற்சங்கங்கள் பெண்களின் தொழில்சார் உரிமைகளை பெரிய அளவில் கண்டு கொள்ளாத காரணத்தாலேயே பெண்களுக்கு என்று தனியான தொழிற்சங்கத்தை தொடங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பாரம்பரியமாகச் செயற்படும் தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் பொதுவான அல்லது பிரதான பிரச்சினைகள் தொடர்பில் போராட்டங்களை நடத்துகின்றன. ஆனால் அவை தொழில புரியும் பெண்களின் உரிமை தொடர்பில் பெரிதாக கருத்திற்கொள்வதில்லை என பத்மினி விஜயசூரிய கூறினார்.

குறிப்பாக, தொழில் செய்யும் பெண்களில் பலர் பாலியல் பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதோடு, தொழில் புரியும் இடங்களில் அடக்கு முறைகளையும் எதிர்கொள்கின்றனர் என அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு தமது இந்த முயற்சி பிற தொழிற்சங்கங்களை பலவீனப்படுத்துவதற்காக அல்ல என தெரிவித்த அவர், தொழில் ரீதியாக பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதே இதன் நோக்கம் எனக் கூறினார்.

இந்நடவடிக்கையின் முதற்கட்டமாக ஏற்றுமதிக்காகவே அமைக்கப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக வலயத்திலுள்ள ஆயத்த ஆடைத் தொழிற்சாலைகளில் தொழில் புரியும் பெண்கள் மற்றும் தோட்டத்துறையில் தொழில் புரியும் பெண்களுக்கு குரல் கொடுப்பது தமது பிரதான இலக்காக இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை வீட்டு வேலை செய்யும் பெண்கள் மற்றும் வெளிநாடுகளில் பணி புரியும் போது பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் பெண்கள் தொடர்பிலும் தாம் கவனம் செலுத்தவுள்ளதாக பத்மினி விஜேசூரிய கூறினார்.

இந்த புதிய தொழிற்சங்கத்தினூடாக தொழில் புரியும் பெண்கள் அதிக நன்மையடைவர் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

# அசம்பாவிதங்கள் நிகழ்ந்தால் வாக்கெடுப்பு உடன் இரத்து

## — தேர்தல்கள் ஆணையாளர் எச்சரிக்கை —

தபால் மூல வாக்களிப்பு நேற்று ஆரம்பமான நிலையில், வாக்களிப்பு நிலையத்தினருகில் ஏதேனும் அசம்பாவிதங்கள் நேர்ந்தால், வாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்டு அல்லது வற்புறுத்தப்பட்டால் குறித்த இடத்தின் வாக்கெடுப்பு உடன் இரத்துச் செய்யப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வாக்களிப்பு நிலையத்திற்கு அருகில் வேட்பாளர்களின் பதாதைகளை காட்சிப்படுத்தல் உள்ளிட்ட செயற்பாடுகள் தேர்தல் சட்ட விதிகளை மீறும் செயலாகும் என தெரிவித்துள்ள தேர்தல்கள் ஆணையாளர், வாக்களிப்பு சுமூகமாக நடைபெறுவதற்கு கட்சிகள், ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்களை ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

வாக்காளர்கள் எவ்வித அச்சமும் சிரமமும் இன்றி சுதந்திரமாக தமது வாக்குகளை அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வீதி விபத்தில் இருவர் படுகாயம்

மோட்டார் சைக்கிளும் முச்சக்கரவண்டியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளனா.

நேற்றுமுன்தினம் நெல்லியடி நகரில் இடம்பெற்ற இந்த விபத்தின் போது அப்பகுதியைச் சேர்ந்த குவின்தன் (வயது - 20), குமரன் (வயது - 26) ஆகிய இருவரும் காயத்துக்குள்ளாகி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்துச் சம்பவம் குறித்து நெல்லியடி போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ,18)

# வடமாகாண முதலமைச்சர் அறநெறியிலும் மற்றும் நன்னடத்தையிலும் ஆட்சி அமைக்கப் பொருத்தமானவரா?



முத்துக்கிருஷ்ணா சர்வானந்தன் கட்டுரையிலிருந்து

**முதலமைச்சர் விக்னேஸ்வரன் மற்றும் மீள் குடியேற்ற மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் திரு. டி.எம்.சுவாமிநாதன் உட்பட பிரேமானந்தாவின் சீடர்கள் காலஞ்சென்ற பிரேமானந்தாவுக்கு அஞ்சலிக் கூட்டம் ஒன்றினை மார்ச் 2015இல் கொழும்பிலுள்ள பாண்ஸ் பிளேசில் நடத்தியிருக்கிறார்கள். அரசியல்வாதிகள் தாங்கள் பிரதிநிதித்துவப் படுத்தும் பிரஜைகளுக்கு முன் மாதிரியாகத் திகழவேண்டுமே அல்லாது பாலியல் வன்கொடுமை புரிபவர்களையோ அல்லது கொலைகாரர்களையோ ஆதரிக்கக் கூடாது என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

வட மாகாண முதலமைச்சரான திரு.கனகசபாபதி விஸ்வலிங்கம் விக்னேஸ்வரன் நவம்பர் 2014 இல் இந்தியாவுக்கு ஒரு தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டிருந்தார். சென்னையில் ஒரு ஞாபகார்த்த சொற் பொழிவை நிகழ்த்திய பின்னர் திரு.விக்னேஸ்வரன் புதுடில்லியில் நடைபெற்ற பௌத்தம் மற்றும் இந்து மத உலக காங்கிரஸ் மாநாட்டிலும் கலந்து கொண்டார், அதில் மற்றவர்களுடன் தலாய்லாமாவும் அதிதியாக கலந்து சிறப்பித்திருந்தார்.

பௌத்தம் மற்றும் இந்துமத உலக காங்கிரஸ் மாநாட்டின்போது திரு.விக்னேஸ்வரன் இலங்கையில் இந்து ஆலயங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுவதையும் மற்றும் அவை அழிக்கப்படுவதைப் பற்றியும் தலாய்லாமாவிடம் புகார் தெரிவித்தார். அது உண்மைதான் அந்த நேரத்தில் முன்னாள் ராஜபக்ஷவின் ஆட்சியின் கீழ் சிறுபான்மை மதத்தவரின் வணக்கத் தலங்கள் ஆளும் குழாமின் மறைமுக ஆதரவுடன் கூடிய பாதுகாவலைக் கொண்டுள்ள மத வெறியர்களால் அடிக்கடி தாக்குதலுக்கு இலக்காகியது. உண்மையில் ஒரு விஷயத்தைச் சொல்வதானால் அந்தச் சமயத்தில் இந்துக் கோவில்களைக் காட்டிலும் அநேக கிறீஸ்தவ தேவாலயங்களும் மற்றும் மசூதிகளுமே அதிகம் தாக்குதலுக்கு இலக்காகின. இந்தச் சூழ்நிலையில் முதலமைச்சர் இந்துக கோவில்கள் தாக்கப்படுவதைப் பற்றிச் சொன்ன புகார் அவரது குறுகிய பார்வையுடனான கட்சிச் சார்பு நிலையை வெளிக்காட்டுகிறது.

பல்வேறு மதங்களைக் கொண்டுள்ள ஒரு மாகாணத்தின் முதலமைச்சர் தலாய்லாமாவிடம் இந்து ஆலயங்கள் மீதான தாக்குதல்களை மட்டும் பிரதானப் படுத்திக் காண்பித்தது அவரது தகுதிக்கு ஏற்புடையது அல்ல. 2012ஆம ஆண்டு நடத்தப்பட்ட குடிசன மதிப்பு புள்ளி விபரங்களின்படி வட மாகாணத்தின் மொத்த சனத்தொகையில் கிறிஸ்தவர்களின் சனத்தொகை 20 விகிதமாகவும் மற்றும் இஸ்லாமியர்களின் சனத்தொகை மூன்று விகிதத்தையும் கொண்டுள்ளது என்பதை முதலமைச்சர் அறிந்திருக்க வேண்டும்.

மேலும், திரு. விக்னேஸ்வரன் இந்தியாவில் மேற்கொண்ட வேறு இரண்டு விஜயங்களும் அறநெறி வகையிலும் மற்றும் நெறிமுறை ரீதியாகவும் கண்டிக்கத் தக்கவை.

அவற்றில் ஒன்று தமிழ்நாடு திருச்சியில் உள்ள காலஞ்சென்ற சுவாமி பிரேமானந்தாவின் ஆசிரமம். பிரேமானந்தா இலங்கை மாத்தளையில் பிறந்தவர், ஆனால் 1983 கலவரங்களுக்குப் பின்னர் திருச்சிக்கு இடம்பெயர்ந்து அங்கு ஒரு ஆசிரமத்தை அமைத்துக் கொண்டார். ஆசிரமத்தில் இருந்த சில பெண் சீடர்கள் மீதான பாலியல் வல்லுறவு மற்றும் கொலை தொடர்பாக அவர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு, குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டு 1990 இல் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. அவர் 21 பெப்ரவரி 2011 இல் சிறையிலேயே மரணமடைந்தார்.

தனது சொந்த மாகாணத்தில் பெண்களுக்கு எதிராக பாலியல் வல்லுறவு உட்பட வன்முறைகள் பரவலாக இடம் பெறும்போது, அதற்கு காரணமானவர்கள் என்று பாதுகாப்பு படையினரை திரு. விக்னேஸ்வரன் அடிக்கடி குற்றம் சாட்டிவரும் ஒரு சந்தர்ப்பத்தில், ஒரு பாலியல் வன்கொடுமை புரிந்தவனும் கொலைகாரனுமான ஒருவனுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் சென்றது மிகவும் இழிவான ஒரு செயல். மரணமான ஒரு குற்றவாளியின் ஆசிரமத்துக்கு அவர் மேற்கொண்ட விஜயம், அவரது மாகாணத்தில் ஆண்களை விட அதிகமாக உள்ள பெண்களுக்கு ஒரு அவமானமாகவே கருதவேண்டும், அந்தப் பெண்கள் நீண்ட காலமாக இடம் பெற்ற உள்நாட்டுப் போரில் எண்ணற்ற துன்ப துயரங்களை அனுபவித்தவர்கள். இவை எல்லாவற்றையும் விட மிக மோசமான ஒன்றாக ஏப்ரல் 2015ல் திரு. விக்னேஸ்வரன், இந்தியப் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில், அந்த பாலியல் வல்லுறவு மற்றும் கொலை வழக்குகளில் கூட்டுக் குற்றவாளிகளாகக் காணப்பட்டு தமிழ்நாட்டு சிறைகளில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் பிரேமானந்தாவின் சீடர்களின் குடும்ப அங்கத்தவர்கள் சார்பாக மன்றாடியுள்ளார்.

இதில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய மற்றொரு விடயம், முதலமைச்சர் விக்னேஸ்வரன் மற்றும் மீள் குடியேற்ற மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் திரு. டி.எம்.சுவாமிநாதன் உட்பட பிரேமானந்தாவின் சீடர்கள் காலஞ்சென்ற பிரேமானந்தாவுக்கு அஞ்சலிக் கூட்டம் ஒன்றினை மார்ச் 2015ல் கொழும்பிலுள்ள பாண்ஸ் பிளேசில் நடத்தியிருக்கிறார்கள். முதலமைச்சர் "கௌரவ நீதியரசர் சிவி விக்னேஸ்வரன்" (வட மாகாணசபை இணையத் தளத்தில் குறிப்பிட்டுள்ளபடி www.np.gov.lk) அவர்களுக்கும் மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் அவர்களுக்கும் ஒரு பாலியல் வல்லுறவு புரிந்தவனும் கொலைகாரனுமாகிய ஒருவனை வழிபடுவது மிகப் பெரும் அவமானம். அரசியல்வாதிகள் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரஜைகளுக்கு முன் மாதிரியாகத் திகழவேண்டுமே அல்லாது பாலியல் வன்கொடுமை புரிபவர்களையோ அல்லது கொலைகாரர்களையோ ஆதரிக்கக் கூடாது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு.விக்னேஸ்வரன் பெண்களுக்கு எதிராகப் பகிரங்கமாக அடிக்கடி ஆபாச இழுக்குகளை ஏற்படுத்துவதில்கூட மோசமானவராக கருதப்பட்டார். அப்படியான ஒரு சம்பவம் முன்னாள் வட மாகாண தலைமைச் செயலாளரான திருமதி ரமேஷ் விஜயலெச்சுமிக்கு (நாட்டில் முதலாவதாக நியமிக்கப்பட்ட பெண் தலைமைச் செயலாளர் மற்றும் ஒரு விதவை) எதிராக நிகழ்த்தப்பட்டது. முதலமைச்சருக்கும் மற்றும் தலைமைச் செயலாளருக்கும் இடையில் என்னதான் அரசியல் வேறுபாடுகள் இருந்தாலும் முன்னாள் தலைமைச் செயலாளருக்கு எதிராக 2014ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட மறைமுகமான ஆபாசத் தன்மையான எதிர்ப்பு ஒரு பெண்ணுக்கு குறிப்பாக ஒரு விதவைக்கு இழைக்கப்பட்ட அவமரியாதை. வழக்கத்துக்கு மாறாக வட மாகாணத்தில் அதிக எண்ணிக்கையிலான (முப்பதாயிரத்துக்கும் நாற்பதாயிரத்துக்கும் இடைப்பட்ட தொகை) விதவைகள் உள்ளனர். நீண்ட காலமாக இழுபட்ட உள்நாட்டு யுத்தத்தின் விளைவாக இந்த நிலை ஏற்பட்டது, வட மாகாணத்தில் உள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மாகாண நிருவாகத்தால் அவர்களின் நிலை அலட்சியப்படுத்தப்படுகிறது. முதலமைச்சர் விக்னேஸ்வரன் (அல்லது நீதியரசர் விக்னேஸ்வரன்) பகிரங்க அறிவிப்புகளை மேற்கொள்ளும்போது அதில் தொழில்முறை மரியாதை இருக்க வேண்டும்.

நவம்பர் 2014இல் புதுடில்லியில் வைத்து முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆர்.எஸ்.எஸ் தலைவரையும் சந்தித்த தாக இந்த எழுத்தாளர் மேலும் அறிந்தார். ஆர்.எஸ்.எஸ் ஒரு இந்து பேரினவாத அமைப்பு. மகாத்மா காந்தி கொலையில் படுபயங்கரமாக பிரபலமான அமைப்பு. மற்றும் அடிக்கடி இந்தியாவிலுள்ள சிறுபான்மை கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கும் மற்றும் அவர்களது வழிபாட்டுத் தலங்களுக்கும் எதிராக சுதந்திரம் பெற்ற நாள் முதல் இன்று வரை படுகொலைகளையும் மற்றும் தாக்குதல்களையும் நடத்தி வருகின்றது. ஆர்.எஸ்.எஸ் தலைவருடன் தான் நடத்திய சந்திப்பின் நோக்கம் என்ன என்பதை வட மாகாண முதலமைச்சர் வட மாகாண மக்களுக்கு விளக்க வேண்டும். மேலும் திரு. விக்னேஸ்வரன் ஆர்.எஸ்.எஸ் க்கும் மற்றும் சிறுபான்மை மதத்தினருக்கு எதிராக வெறுப்பை ஏற்படுத்த முற்சிப்பதாக அவர் அடிக்கடி கடிந்து கொள்ளும், இலங்கையில் உள்ள பௌத்த பேரினவாத அமைப்பான பொது பல சேனாவுக்கும் இடையில் உள்ள வித்தியாசங்கள் (ஏதாவது இருந்தால்) என்ன என்பதை விளக்க வேண்டும்.

அதற்கு மேலாக வட மாகாண முதலமைச்சர் வெளிநாட்டிலும் மற்றும் உள்நாட்டிலும் இருந்து வரும் பயனுள்ள நபர்களுடனான சந்திப்புக்களை மேற்கொள்ளாமல் தட்டிக்கழிப்பது போலத் தோன்றுகிறது. இந்தியா மற்றும் தெற்காசிய நாடுகளின் உட்கட்டமைப்புக்கான அமைச்சரவை அந்தஸ்துள்ள மலேசிய விசேட தூதுவரான திரு. சாமி வேலு (மலேசிய இந்திய காங்கிரசில் நீண்டகாலம் பணியாற்றிய முன்னாள் தலைவரும் மற்றும் மலேசியாவில் நீண்டகாலம் அமைச்சராக உள்ளவருமாவார்), மார்ச் 2015 இல் இலங்கைக்கு வந்தபோது முதலீட்டு வாய்ப்புக்களை பெருக்குவதற்காக வடமாகாண முதலமைச்சரைச் சந்திக்க விரும்பினார், ஆனால் கூட்டம் ஒன்றுக்கான வேண்டுகோளுக்கு முதலமைச்சர் பதிலளிக்கவில்லை. மலேசியர்கள் இலங்கையின் மிகப் பெரிய முதலீட்டாளர்களில் ஒருவரும் மற்றும் வடமாகாணம் முன்னெச்சரிக்கையாக மலேசியாவிலிருந்து தனியார் அல்லது அரச துறைகள் மூலமாக நேரடி அந்நிய முதலீட்டை தேட வேண்டியது அவசியம் என்பதையும் முதலமைச்சர் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும். வட மாகாணசபையின் சில அங்கத்தவர்கள் கூட, மாகாண அலுவல்கள் தொடர்பாக முதலமைச்சரை சந்திக்க முடியாமலுள்ளது என்று கடந்த வருடம் பகிரங்கமாக முறைப்பாடு செய்திருந்தார்கள்.

மேற்கூறிய அனைத்தும் ஸ்ரீலங்கா உச்ச நீதி மன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசரான வட மாகாண முதலமைச்சரின் பக்கத்தில் நீதிக்குத் தீவிர தட்டுப்பாடு நிலவுவதை அடையாளப் படுத்துகின்றன.

வட மாகாணத்தில் உள்ள யுத்தத்தால் சீரழிந்த மக்கள், மடத்தனமானவரும், மதவெறியருமான முதலமைச்சர் திரு. விக்னேஸ்வரனைக் காட்டிலும் மிகவும் திறமையான ஒருவரைப் பெறுவதற்கே தகுதியானவர்கள்.

# பாதாள உலக குழுவினருடன் வேட்பாளருக்கு தொடர்புள்ளதா?

## விசாரணைக்கு உத்தரவு

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு, பாதாள உலகக் குழுவினருடன் தொடர்புள்ளதா என்பது குறித்து விசாரணை நடத்துமாறு பிரதமர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அண்மையில் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவின் தேர்தல் பிரசார கூட்டத்தில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், குறித்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்திற்கும் பாதாள உலகக் குழுவினருக்கும் தொடர்புள்ளதாக பரவலாக பேசப்பட்டு வருகின்றது.

கடந்த ஜனவரி 8ஆம் திகதிக்குப் பின்னர் நாட்டிற்குள் நுழைந்த பாதாள உலகக் குழுவினரே இந்தத் தாக்குதல் சம்பவத்தில் தொடர்புபட்டிருப்பதாக அண்மையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே இது குறித்து விசாரணை செய்து விரைவில் தம்மிடம் அறிக்கை சமர்ப்பிக்குமாறு, பொலிஸ்மா அதிபர் என்.கே.இளங்ககோனுக்கு பிரதமர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அத்துடன், குறித்த சம்பவம் தொடர்பில் டிலான் பெரேராவிடம் வாக்குமூலம் பதிவுசெய்யுமாறு தாம் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளதாக அமைச்சர் ஜோன் அமரதுங்க குறிப்பிட்டிருந்தார்.

எனினும், அவர் அவ்வாறு உத்தரவு பிறப்பிக்கவில்லையெனவும், அவ்வாறே விசாரணை செய்தாலும் தாம் அத்தனை விடயங்களையும் நிரூபிக்கத் தயாரென டிலான் பெரேரா தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.



# கௌரவமான பிரியாவிடைக்கு தயாராக இல்லை மகிந்த

## — தெளிவுபடுத்தும் பேச்சாளர் —

(கொழும்பு)

தேர்தலின் பின்னர் கௌரவமான பிரியாவிடையினை ஏற்படுத்தித் தருமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியிடம் கோரியதாக ஊடகங்களில் வெளியாகிய செய்திகளை நிராகரிப்பதாக முன்னாள் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ரோஹான் வெலிவிட்ட தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், முன்னாள் ஜனாதிபதிக்கு வாக்களிப்பதற்கு எதிர்பார்த்துள்ள வாக்காளர்களிடையே நம்பிக்கையற்ற தன்மையை ஏற்படுத்தும் நோக்கத்திலே இவ்வாறு போலியான ஊடக பிரசாரம் மேற்கொள்ளப்படுகின்றது.

அவ்வாறான கோரிக்கை முன்வைப்பதற்கான எவ்வித அவசியமும் இல்லை. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் வெற்றி பெறுவது உறுதி.

நிச்சயமாக முன்னாள் ஜனாதிபதி பிரதமராவார் என முன்னாள் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ரோஹான் வெலிவிட்ட மேலும் தெரிவித்துள்ளார்.

# சாதாரண மக்களுக்கு செல்லாத ராஜபக்ஷவினரின் அபிவிருத்தி

## கூறுகிறார் எரான்

(கொழும்பு)


நாடு பூராகவும் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் ராஜபக்ஷர்களின் அபிவிருத்திகள் சாதாரண மக்களுக்கு நன்மையை ஏற்படுத்தவில்லை என பிரதி அமைச்சர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

பிரசார நடவடிக்கைகளின் போது புளூமெண்டல் பகுதியில் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலககாகி உயிரிழந்த சித்தி நசீமாவின் கணவரின் கருத்தில் நாடு பூராகவும் ராஜபக்ஷக்கள் செயற படுத்திய அபிவிருத்தித் திட்டங்கள் சாதாரண மக்களுக்கு நன்மை ஏற்படுத்தவில்லை என்பது உறுதியாகியுள்ளது.

சித்தி நசீமாவின் கணவர் பிரதமரை சந்தித்து வெளியிட்ட கருததுக்களின் மூலம் இவை உறுதியாகின.

தாங்கள் வாழ்வது மற்றவர்களின் வீட்டில், அங்கும் குறைந்த அளவிலான வசதிகள் மாத்திரமே காணப்படுவதாகவும் இந்நபர் பிரதமரிடம் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, கடந்த காலத்தினுள் கொழும்பு - சொர்க்கம் என மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோத்தாபய ராஜபக்ஷ வெளியிட்ட கருத்துக்கள் அப்பட்டமான பொய்கள் இதன் மூலம் அம்பலமாகியுள்ளதென பிரதி அமைச்சர் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# புதிய அரசிலும் மனித உரிமை மீறல் கவலை கொள்ளும் அரசாங்கம்

## அரச வட்டாரங்கள் தெரிவிப்பு

இலங்கையில் புதிய அரசாங்கம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றபின்னரும் மனித உரிமை மீறல்கள் தொடர்வதாக சர்வதேச உண்மை மற்றும் நீதி திட்டம் என்ற சர்வதேசமனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளமை குறித்து அரசாங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

குறிப்பிட்ட அமைப்புகள் போன்றவை தங்களிடம் உள்ள தகவல்களையும் ஆதாரங்களையும் அரசாங்கத்துடன் பகிர்ந்து கொண்டால் சிறப்பாக இருக்கும் என அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குறிப்பிட்ட அறிக்கையில் இடம்பெற்றுள்ள விடயங்களை ஆராய்ந்தால், அதில் தெரிவிக்கப்படும் விடயங்கள் விசாரணைகளை மேற்கொள்வதற்கு போதுமானவையல்ல என்பது புரியும் என அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
(தேர்தல் மாவட்டம் வன்னி)



அந்தோனிமுத்து அனஸ்ரின்




ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


# கொழும்பு துப்பாக்கிச் சூடு மற்றுமொருவர் மரணம்

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு – புளூமெண்டல் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த புளச்சிங்கள நிரோஷன் சம்பத் என்ற நபர் உயிரிழந்துள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலை அறிவித்துள்ளது.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் ஆதரவாளர்கள் மீது இனந்தெரியாத குழு மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் 12 பேர் படுகாயமடைந்ததுடன் பெண் ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.



# போர்க்குற்ற அறிக்கை பீரிஸ் கூறுவது பொய்

## என்கிறார் அஜித் பெரேரா

(கொழும்பு)

இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பில் வெளியானதாக கூறப்படும் அறிக்கை குறித்து முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பொய்கூறுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வெளியுறவுத்துறை பிரதியமைச்சர் அஜித் பி.பெரேரா இந்தக்குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

போர்க்குற்ற அறிக்கை தசிந்ததாக கூறப்படுவதில் உண்மையில்லை. இந்தநிலையில் ஜி.எல். பீரிஸ் அதனை எங்கிருந்து பெற்றார் என்பதை ஊடகங்களுக்கு அறிவிக்க வேண்டும்.

தேர்தல் ஒன்றுக்கான பிரசாரமாக அவர் அதனை பயன்படுத்தக்கூடாது என்றும் பெரேரா கோரிக்கை விடுத்துள்ளார்.

போர்க்குற்றம் தொடர்பிலான உள்நாட்டு விசாரணையின் போது வெளிநாட்டு தலையீடும் இருக்கும் என்று பீரிஸ் குறிப்பிட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.



## முரசின் இன்றைய பலன்

04.08.2015 செவ்வாய்க்கிழமை

மன்மத வருஷம் ஆடி மாதம் 19 ஆம் திகதி.
அமிர்த சித்த யோகம் / சதுர்த்தி திதி
உத்தரட்டாதி நட்சத்திரம் பிற்பகல் - 3.58 வரை பின் ரேவதி
இராகுகாலம் 3.04 - 4.34 வரை சுப நேரம் 10.34 - 12.04 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** – திட்டமிட்டிருந்த வெளியூர் பயணத்தில் தடை தாமதம் ஏற்படலாம்

**ரிஷபம்** – இல்லறத் துணைவியின் உடல் நலத்தில் கவனமெடுத்தல் வேண்டும்

**மிதுனம்** – உங்களுக்கு தொடர்பில்லாத விடயத்தில் தலையிட வேண்டாம்

**கடகம்** – பாதுகாப்பற்ற இடங்களுக்கு சென்று அல்லற்படவேண்டும்

**சிம்மம்** – வெளியூர் மணமகனைத் திருமணம் செய்ய முற்படுகையில் நன்கு விசாரிக்கவும்

**கன்னி** – வாய்ச் சம்பிரதாய மூலம் காரியங்களை சாதித்துக் கொள்ளல்

**துலாம்** – பழைய பகைமை மீண்டும் முளைவிடத் தொடங்கலாம்

**விருச்சிகம்** – உடன்பிறந்தவர்களுடன் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக பிரச்சினை உருவாகும்

**தனுசு** – நீண்ட நாட்களாக மனதில் தேங்கியிருந்த கவலை நீங்கிவிடும்

**மகரம்** – அறிமுகம் இல்லாதவர்களுக்கு வீடு,வாகனத்தில் இடம் கொடுக்க வேண்டாம்

**கும்பம்** – நோயைக் குணப்படுத்த ஆயுர வேத மருத்துவத்தை நாட எண்ணம் பிறக்கும்

**மீனம்** – புதிய முயற்சிகளில் கால்பதிக்கும் போது பண பலத்தையும் பாருங்கள்

# பாவனைக்குதவாத நிலையில் சமளங்குளம் பிரதான வீதி

## திருத்தப்படுமா என மக்கள் கேள்வி



(வவுனியா)

வவுனியா சமளங்குளத்திலிருந்து கண்டி வீதியை இணைக்கும் சமளங்குளம் பிரதான வீதியின் அவல நிலையால் இவ் வீதியைப் பயன்படுத்துவோர் பெரும் இன்னல்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

நீண்ட காலமாக இவ் வீதி திருத்தப்படாத நிலையில் இவ் வீதியிலுள்ள இருபாலங்களும் உடைந்துள்ளமையால் கனரக வாகனங்கள் செல்ல முடியாத நிலையில் 5 கிலோ மீற்றர் தூரம் சுற்றியே செல்கின்றன. சமளங்குளம் கிராமத்தை அண்டிய பகுதியும், மூன்று முறிப்பு கிராமத்தை அண்டிய பகுதி வீதி புனரமைக்கப்பட்டுள்ள போதிலும் ஒரு கிலோ மீற்றர் வரையான பகுதி பத்து ஆண்டுகளுக்கு மேலாகவும் திருத்தப்படவில்லை. இவ் வீதியிலுள்ள பாலம் இடிந்து பெரும் கிடங்காக மாறியுள்ளது நிலையில் இவ் வீதியால் பயணிப்போர் பெரும் விபத்துக்களை எதிர் கொண்டுள்ளனர்.

சமளங்குளம் கிராமத்தை பிரதிபலிக்கும் மாகாண சபையில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் இருந்தும் இவ் வீதி அவர்ளின் கண்களுக்குப் புலப்படாதது ஏன்?

வாக்களித்த மக்களின் தேவைகளை நிவர்த்திக்கும் வகையில் மாகாண சபை உறுப்பினர்கள் செயற்படவில்லை எனவும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

விரைவில் இந்த வீதியை புனரமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ)

# வவுனியா வாக்காளர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம்




வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் காலை கபே அமைப்பு ஏற்பாடு செய்த வாக்காளர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் நடைபெற்றது.

வன்னி மாவட்ட தேர்தல் தொகுதிக்கான வாக்காளர்கள நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் போது, சட்டங்களை மதிப்பவர், இலஞ்ச ஊழல்களில் ஈடபடாதவர், சமூக விரோத செயல்களில் ஈடுபடாதவர், குற்றவாளி அல்லாதவர், தேர்தல் சட்டங்களை மதிக்கும் ஒருவரையே வாக்காளர்கள் தெரிவு செய்யவேண்டும்.

விழிப்புணர்வு கையெழுத்து நடவடிக்கையினை கபே அமைபபுடன் இணைந்து சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் ஏற்பாடு செய்திருந்தது. இந்த விழிப்புணர்வு நடவடிக்கையில் சமயத் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டு கையெழுத திட்டனர். கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பமான இந்நிகழ்ச்சித்திட்டம் வவுனியா, மதவாச்சி, அனுராதபுரம் சென்று கொழும்பை நோக்கிச் செல்லவுள்ளதாக கபே அமைப்பின் வவுனியா மாவட்ட ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர். (70)

# பெரியகட்டு அந்தோனியார் திருநாள் திருப்பலி



வவுனியா செட்டிகுளம் பிரதேசத்தின் வரலாற்றுச்சிறப்பு மிக்க பெரியகட்டு அந்தோனியார் ஆலையத்தின் திருநாள் நேற்று முன்தினம் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் விக்ரர்சோசை தலைமையில் கூட்டு திருப்பலியாக நடைபெற்றது.

300 ஆண்டுகளுக்கு முன் புனித யோசவ்வாஸால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயம் வவுனியா மறைக்கோட்டத்தின் பழமை வாய்ந்ததும் யாத்திரிகர்கள் 9 நாட்கள் தங்கியிருந்து வழிபாடு நடாத்தும் ஒரேயொரு ஆலயமாக விளங்குகின்றது

பெரியகட்டு அந்தோனியார் ஆலயத்தின் திருநாள் 1949 ஆம் ஆண்டு வர்த்தகமானியின் அறிவித்தலின்படி 8 ஆம் மாதம் 2ஆம் திகதியில் கொண்டாடப்படுகிறது இவ்வாலயத்திற்கு பல்லாயிரக்கணக் கான பக்தர்கள் வவுனியா,மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் என பல மாவட்டங்களில் இருந்து வருகை தருவது குறிப்பிடத்தக்கது. (70)

# வீதியை கடக்க முயன்ற முதியவரின் கால் முறிவு

மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளான முதியவர் கால் முறிவடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நெல்லியடி குஞ்சர் கடை பகுதியில் நேற்று முன்தினம் தனது துவிச்சக்கர வண்டியுடன் வீதியை கடக்க முயன்ற முதியவரே மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானார்.

இந்த விபத்துச் சம்பவத்தில், அப்பகுதியைச்சேர்ந்த 70 வயதான செ.சூரியமூர்த்தி என்பவரே கால் முறிவடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் காயமடைந்த நிலையில், மந்திகை ஆதார வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வேகமாக வந்த இம் மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ,18)

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

(தேர்தல் மாவட்டம் - வன்னி)




குலசிங்கம் திலீபன்
முதன்மை வேட்பாளர்




ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)





சிறுநீரக நோய் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் விளம்பரத் தூதுவர்களாக கிரிக்கெட் வீரர்களான முத்தையா முரளீதரன் மற்றும் டில்ஷான் ஆகியோர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் கடந்த சனிக்கிழமை நியமனம் செய்யப்பட்ட போது...

# இலங்கையுடனான தொடர் சவால் என்கிறார் ஹோலி

விராட்ஹோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது. எதிர்வரும் 12ஆம்திகதி முதல் டெஸ்ட் தொடங்குகிறது.

இலங்கைத் தொடர் குறித்து கப்டன் விராட்ஹோலி நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,



வங்காளதேச தொடர் போல் இல்லாமல் இலங்கை டெஸ்ட் தொடர் முழுமை பெற்றது. பரபரப்பான இந்தப் போட்டித் தொடரை மிகவும் ஆவலுடன் எதிர்நோக்கி இருக்கிறோம்.

வங்காளதேசத்தில் ஒரு டெஸ்டில் ஆடினோம். அதுவும் மழையால் பாதிக்கப்பட்டது. தற்போது இலங்கையுடன் 3 டெஸ்டில் விளையாடுகிறோம். இதனால் அணியை திட்டமிட்டு இயக்க வாய்ப்புக் கிடைத்துள்ளது. ஆனால் இந்த டெஸ்ட் தொடர் மிகப்பெரிய சவாலாக இருக்கும.

இந்த டெஸ்ட் தொடரில் ஆக்ரோஷமான அணுகுமுறை உத்வேகம் அளிப்பதற்கு உதவியாக இருக்கும். பரபரப்பான ஆட்டத்துக்கும் உதவியாக அமையும். இதனால் ஆக்ரோஷம் இருக்கும்.

20 விக்கெட்டுகளை கைப்பற்றுவது அவசியமானது. இதனால் பந்து வீச்சாளர்களுக்கு வாய்ப்பு வழங்குவதை சிறந்ததாக கருதுகிறேன். 5 பந்து வீச்சாளர்களுடன் களம் இறங்குவோம். அஸ்வின், புவனேஸ்வர்குமார், ஹர்பஜன்சிங் ஆகியோரால் துடுப்பாட்டத்திலும் பங்களிப்பை வெளிப்படுத்த இயலும்.

பந்துவீச்சில் வலிமை இருந்தால் தான் டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற முடியும்.

ரோகித்சர்மா தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய துடுப்பாட்ட வீரர் ஒருநாள் போட்டியில் அவர் தொடக்க வீரராக விளையாடுகிறார். ஆனால் டெஸ்ட் போட்டி முற்றிலும் மாறுபட்டது. அவர் 6 ஆவது வரிசையில் ஆடுகிறார். முன்வரிசையில் அவரை களம் இறக்குவது பற்றி இன்னும் சிந்திக்கவில்லை.

இந்திய ஏ அணியில் விளையாடிய போது ராகுல் ராவிட பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். கடந்த 5 தினங்கள் அவரது ஆலோசனை உதவியாக இருந்தது. இதற்காக அவரை பாராட்டுகிறேன்.

கப்டன் பதவியால் எனது துடுப்பாட்டத்திறன் பாதிக்காது என்றே கருதுகிறேன்.

ஆதாயம் தரும் இரட்டை பதவி தொடர்பாக கிரிக்கெட் சபை பிறப்பித்த உத்தரவு பற்றி விவாதமோ அல்லது கருத்தோ தெரிவிக்க இயலாது. ஆனால் வீரர்களின் நலன் கருதி தான் கிரிக்கெட் சபை இந்த முடிவை எடுத்துள்ளது. இது வரவேற்கத்தக்க ஒன்றாகும் என மேலும் தெரிவித்தார்.

# ஷம்பர்க் ஓப்பன் ரென்னிஸ் சம்பியனானார் நடால்



ஹம்பர்க் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் ஒற்றையர் இறுதிப் போட்டியில், முன்னணி வீரர் ரபெல் நடால், பேபியோ போக்னினி-ஐ கடும் போராட்டத்திற்குப்பின் வீழ்த்தி சம்பியன் பட்டத்தை சுவிகரித்தார்.

இப் போட்டி, ஜெர்மனியில் நேற்று நடைப்பெற்றது.

நடால், இத்தாலியைச் சேர்ந்த பேபியோ போக்னினி-ஐ எதிர்கொண்டார் இதில் கடும் போராட்டத்திற்குப்பின் நடால் 7-5, 7-5 என நேர்செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார்.

முதல் சுற்றில் இருந்தே போக்னினி, நடாலுக்கு கடும் நெருக்கடி கொடுத்து வந்தார். இருவரும் மாறிமாறி ஆட்த்தினை கைப்பற்றிக்கொண்டிருந்தனர். நடால் 6-5 என்று முன்னிலையில் இருக்கும்போது போக்னினி சேர்வீஸ் செய்தார். அதை திறமையாக முறியடித்த நடால் செட்டை 7-5 என கைப் பற்றினார்.

2ஆவது செட்டில் போக்னினி ஒரு கட்டத்தில் 4-3 என முன்னிலையில் இருந்தார். ஆனால், அதன்பின் நடால் சிறப்பாக விளையாடி அந்த செட்டையும் 7-5 எனக் கைப்பற்றி சம்பியன் பட்டம் வென்றார்.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

(தேர்தல் மாவட்டம்—வன்னி)



பொ.குணபாலா





ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


# சிம்பாப்வேயுடன் ஒருநாள் தொடர் எர்வினால் வீழ்ந்த நியூசிலாந்து

(ஹரோரே)

நியூசிலாந்து மற்றும் சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான முதலாவது ஒரு நாள் போட்டியில், 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் நியூசிலாந்தை வீழ்த்தி வெற்றியை தனதாக்கியது சிம்பாப்வே அணி.

இப்போட்டியானது ஹரோரே மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற, சிம்பாப்வே அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி, சிறப்பாக துடுப்பெடுத்தாடி 4 விக்கெட் இழப்புக்கு 303 ஓட்டங்களை குவித்தது.

அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ரெய்லர் 112 . வில்லியம்சன் 97 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் பன்னியங்கரா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதைத்தொடர்ந்து பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி, சிறப்பாக செயற்பட்டு 50 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து, 304 ஓட்டங்களைப் பெற்று வெற்றி வாகை சூடியது.



அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, எரிவின் 130 ஓட்டங்களையும், மசகட்சா 84 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் நெதன் மக்கலம் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். போட்டியின் ஆட்ட நாயகனாக சிம்பாப்வே அணியின் கன்னி சதத்தினை பூர்த்தி செய்த எர்வின் தெரிவு செய்யப்பட்டார்.

# விளையாடியது மழை

தென்ஆபிரிக்க வங்காள தேச அணிகள் மோதிய 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி மிர்பூரில் நடந்தது. வங்காளதேசம் முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 246 ஓட்டங்கள் எடுத்தது.

2ஆவது, 3ஆவது, 4ஆவது நாள் ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது.

நேற்றைய 5ஆவது மற்றும் கடைசி நாள் ஆட்டமும் மழையால் இரத்துச் செய்யப்பட்டது. இதனால் இந்த டெஸ்ட் சமநிலை ஆனது.

ஏற்கனவே முதல் டெஸ்டும் மழையால் சமநிலை ஆகி இருந்தது.

20 ஓவர் தொடரை தென்னாபிரிக்கா 2:0 என்ற கணக்கில் கைப்பற்றி இருந்தது. ஆனால் ஒருநாள் தொடரை வங்காளதேசம் 2:1 என்ற கணக்கில் கைப்பற்றி அதிர்ச்சி கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# குருத்துவ நிறைவுக்கிண்ணத்தை கைப்பற்றியது இருதயராஜா



(தீவகம்)

அருட்பணி சாள்ஸ் கொலின்ஸ் அடிகளாரின் 25 ஆவது குருத்துவ நிறைவை முன்னிட்டு நடாத்தப் பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது

ஊர்காவற்றுறை சென்.ஜேம்ஸ் சனசமூக நிலையமும், சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழகமும் இணைந்து தீவக உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் குறித்த போட்டி நடாத்தப்பட்டு கடந்த சனிக்கிழமை இறுதிப் போட்டி மாலை 5 மணியளவில் இடம் பெற்றது.

தீவகத்தின் சிறந்த அணிக ளான துறையூர் ஐயனார் விளை யாட்டுக்கழகஅணியும் மெலிஞ்சி முனை இருதயராஜா விளையாட் டுக்கழகமும் இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றன.

முதலாவது அரை யிறுதி ஆட்டத்தில் துறையூர் ஐயனார் அணி சாவற்காடு மகாத்மா காந்தி அணியை எதிர்கொண்டு மோதியது. இதில் துறையூர் ஐயனார் அணி முதலாவது ஆட்ட நேரத்தில் ஒரு கோலைப் போட்டது.

இரண்டாவது நேர ஆட் டத்தில் மகாத்மா காந்தி அணி ஒரு கோலைப்போட்டது.

1:1 என சமநிலையில் போட்டி முடிவுற்றது. பின்னர் தண்ட உதை மூலம் 2:4 என்ற கோல் கணக்கில் துறையூர் ஐயனார் அணி வெற்றிபெற்றது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்டு நாரந் தனை அண்ணா விளையாட்டுக் கழகம் மோதியது இதில் 4:1 என்ற கோல்கணக்கில் மெலிஞ்சி முனை இருதயராஜா விளையாட டுக்கழகம் வெற்றிகொண்டது.

இறுதி ஆட்டத்தில் மோதிய மெலிஞ்சிமுனை இருதயராஜா அணியும் துறையூர் ஐயனார் அணியும் மோதிய போட்டி மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்றது. முதலாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் எந்தவித கோல்களையும் போடவில்லை.

இரண்டாவது ஆட்ட நேர முடிவில் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணி ஒரு கோலினைப் போட்டு சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

இதில் முதலாம் இடத்தைப் பெற்ற அணிக்கு 10 ஆயிரம் ரூபா பணப்பரிசும், கேடயமும் வழங்கப்பட்டது. இரண்டாம் இடத்தைப் பெற்ற அணிக்கு ஐயாயிரம் ரூபா பணப்பரிசிலும் கேடயமும் வழங்கப்பட்டது. விளையாடிய வீரர்களுக்கு பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

சிறந்த கோல்காப்பாளராக ஐயனார் விளையாட்டுக்கழ கத்தைச் சேர்ந்த சி.தயாளன் தெரிவுசெய்யப்பட்டார். சிறந்த கழகமாக நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழகம் தெரிவு செய்யப்பட்டது. (21)

## தேசிய மட்ட கோலூன்றிப் பாய்தல் மகாஜன மாணவனுக்கு பாராட்டு

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட 93 ஆவது தேசிய மெய்வல்லுநர் போட்டிகளில் ஆண்க ளுக்கான கோலூன்றிப் பாய்தலில் தெல்லிப் பளை மகாஜன கல்லூரி மாணவன் எஸ். டிலக்சன் தனது அதிசிறந்த உயரப் பெறுதியைப் பதிவு செய்து அனைவரினதும் பாராட்டைப் பெற்றார்

படைத்தரப்பினருடன் போட்டி யிட்ட பாடசாலை மாணவனும் 18 வயதுகூட நிரம்பாதவருமான டிலக்சன் 4.40 மீற்றர் உயரத்தைத் தாவியபோது அனைவரும் பிரமித்துப் போயினர். தேசிய சாதனையாளரான எம். எச். ஐ. சந்தருவன் (விமானப்படை) 4.75 மீற்றர் உயரமே தாவி தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார். அகில இலங்கை பாடசாலைகள் மெய் வல்லுநர் போட்டிகளில் 2013இல் முதற் தடவையாக பங்குபற்றிய டிலக்ஷன், ஆண்களுக்கான 17 வயதுக்குட்பட்ட கோலூன்றிப் பாய்தலில் 3.80 மீற்றர் உயரம் தாவி தங்கப் பதக்கத்தை வென் றார். அடுத்த வருடம் இதே வயதுப் பிரிவில் சீரற்ற கால நிலைக்கு மத்தியில் 3.90 மீற்றர் உயரம் தாவி வெள்ளிப் பதக்கம் வென்றார்.

இவ் வருடம் நடைபெற்ற கனிஷ்ட தேசிய மெய்வல்லுநர் போட்டிகளில் ஆண்களுக்கான 18 வயதுக்குட்பட்ட பிரிவில் 4.20 மீற்றர் உயரம் தாவிய டிலக்சன், புதிய சாதனையை நெப்தலின் ஜொய்சனுடன் பகிர்ந்துகொண் டார்.

## நெற்கொழு கழுகுகள் உதைபந்து வெற்றியுடன் தொடங்கியது யங்கம்பன்ஸ்





பருத்தித்துறை உதை பந்தாட்ட அனுமதியுடன் நெற் கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகத்தின் வடமாகாண ரீதியான மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் தொடக்க ஆட் டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் வெற்றி பெற்றது.

கடந்த சனிக்கிழமை கழுகு கள் விளையாட்டுக் கழகத் தலைவர் க.சதீஸ் தலைமை யில், காலை 9 மணியளவில் ஆரம்பமான நிகழ்வில் விருந் தினர்கள் மேளதாள வாத்தியங் களுடன் மைதானத்திற்கு அழைத்து வரப்பட்டு சம்பிரதாய பூர்வமாக தொடக்க நிகழ்வு ஆரம்பமானது.

முதலாவது போட்டியாக கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுப்பிடி நவஜீவன்ஸ் விளை யாட்டுக்கழகம் மோதியது. இரு அணிகளும் சம நிலையைப் பெற்ற நிலையில் தண்ட உதை வழங்கப்பட்டது. தண்ட உதை யில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் 3 : 2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது

இவ் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் யாவும் வல்வெட் டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக மைதா னத்தில் நடைபெற்று வருகிறது.

# விசேட ஒலிம்பிக் போட்டியில் சிவபூமி மாணவர்களுக்கு பதக்கம்



(யாழ்ப்பாணம்)

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் இடம்பெறும் விசேட ஒலிம்பிக் போட்டியில் யாழ்ப்பாணம் சிவபூமி பாட சாலையில் இருந்து கலந்து கொண்ட ஜெயச்சந்திரன் மனோ ஜன் என்ற மாணவன் 200 மீற்றர் ஓட்டத்தில் 2 ஆம் இடத்தையும், அரசகுலசூரியன் மயூரன் என்ற மாணவன் 100 மீற்றர் ஓட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

விசேட தேவையுடையோ ருக்கான ஒலிம்பிக் போட்டி இம்முறை யூலை 25 தொடக்கம் ஆகஸ்ட் 2 வரை கலிபோனியா மாநிலத்தில் உள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்றது.

165 நாடுகளில் இருந்து 6500 போட்டியாளர்கள் இதில் பங்கேற்றனர். இரண்டாண்டு களுக்கு ஒரு முறை நடை பெறும் இப்போட்டிகள் 1968 ஆம் ஆண்டு முதல் நடை பெறு கின்றன. முதலாவது போட்டி சிக்காக்கோ நகரில் நடைபெற்றது.

இவ்வாண்டில் இலங்கை அணியைப் பிரதிநிதித்துவப் படுத்தி ஜெயச்சந்திரன் மனோ ஜன், அரசகுலசூரியன் மயூரன் ஆகியோர் சுவட்டு நிகழ்வுகளில் கலந்துகொண்டனர். சிவபூமியில் இருந்து கலந்துகொண்ட மாண வர்களுக்கான பயிற்றுவிப்பா ளராக யாழ்பல்கலைக்கழக உடற் கல்வி அலகின் விரிவுரையாளர் ம.இளம்பிறையன் செயற்பட் டுள்ளார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
(தேர்தல் மாவட்டம்-வன்னி)



விஜயரட்ணம் சுரேந்தர்
(சுரேன்)



X

6

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

(நேற்றைய தொடர்ச்சி)

வழமை போல, இந்தத் தேர்தலிலும் எவருக்குமே தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுக் என்ற நம்பிக்கையில் தானே.

இந்தத் தேர்தலில் இலங்கை வாழ் தமிழ் மக்களின் கருத்துக்கள் என்ன என்பதை அறிய விரும்புவோர், முகப்புத்தகத்திலும் இணையத்திலும் வானலைகளிலும் வெளியீடுகளிலும் புழுத்துப் போயிருக்கும் ஊடகவியலாளர்கள் நீட்டி முழக்குவதை மட்டுமே வாசித்தால், இவற்றை பிரசாரங்களுக்காகப்



கஜேந்திரகுமார் தலைமையிலான அணி ஏற்கனவே மண் கவ்விய அணி. பொங்குதமிழ் உணர்வலையில் குதிரையோடலாம் என்ற நினைப்பில் இறங்கி

# இணக்க அரசியலும் பிணக்க அரசியலும் 2

**- பேரறுளர் கல்லாநிதி கியூறியஸ் ஜி கட்டுரையிலிருந்து.**

கொடுப்பதற்கான சரியான வேலைத் திட்டம் எதையும் முன்வைக்க முடியவில்லை. இந்தியா, சர்வதேசம் எல்லாவற்றையும் தங்கள் சாதுரியத்தால் வென்று தீர்வைக் கொண்டு வரப் போவதாக கூட்டமைப்பு சொல்வது எத்தனையாவது தடவை என்று எண்ணுக் கணக்கு வைக்க முடியவில்லை. அதே போல, வெறும் வெற்று வீராப்புக் கோஷங்களுடன் நாடாளுமன்றம் போய் தமிழ் மக்களின் உரிமைகளை மட்டுமல்ல, ஈழத்தைப் பெறப் போவதாகக் கூறுபவர்களின் எண்ணிக்கைக்கும் அளவில்லை.

சிங்களவர்களே பெரும்பான்மையாக உள்ள இலங்கையின் நாடாளுமன்ற அமைப்பு முறையில், இத்தனை பெரும்பான்மை இருந்தும் மகிந்தவை ஊழலுக்காக சிறையில் அடைக்க முடியாமல், அவர் மீண்டெழுவதற்கு எடுக்கும் முயற்சியைத் தடுக்க முடியாதவர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில், இவர்கள் எப்படி தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கப் போகிறார்கள் என்பது இவர்களுக்கே தெரியாவிட்டாலும், அதை நம்புவதற்கு ஆளிருக்கிறது என்ற துணிச்சல் அவர்களுக்கு நிறைய உண்டு.

ஈருடகப் படை, விமானப்படை என்றெல்லாம் வைத்திருந்து, காற்றுப் புகாத இடங்களுக்குள் கூட நுழைந்து சாகசம் காட்டி, இராணுவத்திற்கும் சிங்கள அரசியல் தலைமைகளுக்கும் "சிம்மத்திற்கே சொப்பனமாய்" உயிர்ப் பயத்துடன் வாழ வைத்த ஒரு அமைப்பினால் சாதிக்க முடியாததை, தாங்கள் சாதிக்கப் போவதாக இவர்கள் சொல்வது, கேட்பவர்கள் எல்லாருமே கேனயர்களாக இருப்பார்கள் பயன்படுத்துவோர் அவிழ்த்து விடும் பொய்களை விசுவாசிப்பவர்களாகவே இருப்பார்கள். இணைய வெளியில் வரும் கருத்துக்கள் எல்லாமே, புலன் பெயர்ந்தவர்கள் மிகுந்த, சத்தம் போடும் சிறுபான்மை, (vocal minority) சொல்லும் கருத்துக்கள் தான். மௌனப் பெரும்பான்மை (Silent majority) என்ன நினைக்கிறது என்பது தேர்தல் நாளில் மட்டுமே தெரியும்.

வீடு தேடி வருகின்ற எல்லா வேட்பாளருக்குமே நாங்கள் உங்களோடு தான் என்று உள்ளம் குளிர வைத்து, "உவரை நல்லாச் சுத்தியிட்டன்" என்று சுய இன்பம் கொள்ளும் வித்தையை நீண்ட காலமாகவே கற்றுத் தேர்ந்தவர்கள் ஈழத்தமிழர்கள். அந்தப் பொய்யை நம்பி மனக்கோட்டை கட்டியவர்கள் எத்தனை பேர்?

மொக்கங்கடை கொத்து ரொட்டியும் சம்பளமும் வாங்கி குமார் பொன்னம்பலத்திற்கு 77இல் பிரசாரம் செய்தவர்களைத் தெரியும். மாட்டின் வீட்டில் வந்து ஆயிரக்கணக்கில் சாப்பிட்டு, பத்துக் கணக்கில் வோட் போட்டவர்கள் தமிழர்கள். குமார் பொன்னம்பலம் சத்தியம் வாங்கி, சேலைகளும் கொடுத்து, "நாங்களும் ஈழம் தான்" என்று சொல்லியும், கொடுத்த சேலைகளை விட, விழுந்த வோட்டுகள் குறைவு என்பது சொல்லியா தெரிய வேண்டும்?

பின்னால், குமார் பொன்னம்பலம் தமிழ்த்தேசியத்தின் குரலாக (தேசத்தில் குரல் அல்ல!) வந்து முடிந்து, இப்போது மைந்தன் தேர்தலுக்காக யாழ்ப்பாணம் வந்திறங்கியிருக்கிறார்.

சேலைக்கும் மொக்கங் கடைச் சாப்பாட்டுக்கும் சொந்தப் பணத்தைச் செலவிடப் பயமாக இருந்தாலும், வாரியிறைக்க ரெடியாக ஒரு புலன் பெயர்ந்த கூட்டம் இருக்கிறது.

தமிழ்நாட்டில் கை நீட்டி வாங்கிய பணத்துக்கும், சேலைக்கும், டிவிக்கும் துரோகம் இழைக்காமல், வாக்களித்து அரசுகளை மாற்றும் தமிழனுக்கு இருக்கக் கூடிய அடிப்படை நேர்மை கூட தமிழீழத் தமிழர்களிடம் இருந்ததில்லை. துரோகிகள் என்று சொல்லிக் கொண்டே, வேலைவாய்ப்புக்கும் இராணுவத்திடம் அகப்பட்ட பிள்ளைகளை எடுக்கவும் அரசாங்கத்துடன் சேர்ந்தவர்களிடம் தவம் கிடந்து உதவி பெற தலையையும், தேர்தல் வரும் போது தமிழ்த் தேசியத்திற்கு வாலையும் காட்டும் வித்தை தெரிந்தவர்கள் இவர்கள். தமிழினத்தின் அவலநிலைக்குக் காரணமான ஐ.தே.கட்சியைத் திட்டிக் கொண்டே, அந்தக் கட்சியில் தேர்தலில் நிற்பவர்களுக்கு வாக்களிக்கும் அளவுக்கு ஊர் உணர்வு மிகுந்தவர்கள் இவர்கள்.

ஆனால் உண்மையான போட்டி பாராளுமன்றக் கதிரைகளுக்கானதல்ல, தேசியத் தலைவர் உட்கார்ந்திருந்த கதிரைக்கானதே. தமிழ்த் தேசியத்திற்கான வாக்குகளுக்கு ஏகப்பிரதிநிதிகளாக யார் உரிமை கோருவது என்பது தான் பிரச்சினையே.

அதற்கான மும்முனைப் போட்டி பங்குபிரிப்புத் தான் இந்தத் தேர்தலின் கிளைமாக்ஸ். இந்தக் குடும்பக் குத்து வெட்டுத் தான் தமிழ்த் தேசியத்திற்கு ஏகப்பிரதிநிதித்துவம் கோருவோர் தங்களுக்குள் முட்டி மோதுதலாக உருவெடுத்திருக்கிறது. முகப்புத்தகத்தில் பெரும் பிரசன்னத்தைக் கொண்டிருக்கும் கஜேந்திரகுமார் அணி தங்களது ஒரே எதிரியாக கூட்டமைப்பைத் தான் வரித்துக் கொண்டிருக்கிறது. வித்தியாதரன் அணியின் அசுமாத்தம் எதுவும் முகப்புத்தகத்தில் கண்டதில்லை.

அனந்தி எழிலனுக்கு கிடைத்த விருப்பு வாக்குகள் புலிகளுக்கானது என்று நம்பி, வித்தியாதரன் தலைமையில் முன்னாள் போராளிகள் கட்சிய மைத்து, புலன் பெயர்ந்தவர்களின் இனமான உணர்வையும், பணபலத்தை நம்பி களமிறங்கியிருந்தாலும், அவர்கள் மண் கவ்வப் போவது நிச்சயம்.


யிருக்கிறார்கள். சென்ற தடவை இவர்களின் வாய்ச்சவடால்களில் புல்லரித்துப் போய், புழுதி கிளப்புவார்கள் என்று நம்பி இந்தக் குதிரைகள் மேல் பணம் கட்டிய புலன் பெயர்ந்தவர்கள் கடந்த தேர்தலில் இவர்கள் மக்களால் புறக்கணிக்கப்பட்டதைக் கண்டு கட்சி தாவி விட்டார்கள். இந்த உண்மைகளை அறியாத இன்னொரு கூட்டம் இந்தக் குதிரைகள் மீது கட்ட இங்கே பணம் சேர்க்கிறது.

சுமந்திரனும் சம்பந்தனும் துரோகி என்று புலன் பெயர்ந்தவர்கள் கொடும்பாவி எரித்தாலும், கடைசியில் இவர்கள் கூட்டமைப்புக்குத் தான் வாக்களிப்பார்கள். "எண்டாலும், படிச்சவங்கள் எல்லே" என்றும், "பிரச்சாரப் பீரங்கி" பிரேமச்சந்திரன் போன்ற புதிதாய் தோன்றிய "வால்" நட்சத்திரங்கள் "வாயால் வெட்டி வீழ்த்தி" ஈழம் பெறுவார்கள் என்ற கனவும் வழமை போல "போடு புள்ளடி வீட்டுக்கு நேரே" தான்.

தேர்தல் முடிந்ததும் வழமை போல, எலியின் முதுகில் மலையைச் சுமக்க வைக்க முயன்ற தங்களின் முட்டாள்தனம் பற்றிய வெட்கமின்றி, தாங்கள் தெரிவு செய்தவர்களால் தாங்கள் எதிர்பார்த்ததைச் செய்ய முடியாமல் போனதும், எந்த வித கூச்சமும் இன்றி துரோகம் இழைத்து விட்டார்கள் என்ற பல்லவியைத் தொடங்குவார்கள். இது சேர். பொன்.இராமநாதன் காலத்தில் தொடங்கியது. அங்கஜன் இராமநாதன் காலத்திலும் தொடரும்.

நடக்கும் ஒவ்வொரு தேர்தலும் தமிழினத்தின் அரசியல் நிர்வாணத்தை அம்பலப்படுத்திக் கொண்டே இருக்கிறது. கிட்டத்தட்ட இதில் உள்ள எல்லாருமே ஏதோ ஒரு தரப்பினரால் துரோகி என்று குற்றம் சாட்டப்பட்டவர்களே.

(தொடரும்)



# மஹிந்த - மைத்திரி சேரலாம்

**எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து.**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தமது கட்சிக்குள் இருந்து எழுந்த நெருக்குதலுக்கு வளைந்து கொடுத்து, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆகஸ்ட் 17ஆம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் போட்டியிட இடமளித்துவிட்டார். மஹிந்த ராஜபக்ஷ, குருநாகல் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடுகிறார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதிக்கு இந்த வாய்ப்பை வழங்கியதோடு, அரசியல் நாகரிகத்தைப் பற்றிய அவர் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குகிறார் என்பது சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்களைப் பார்க்கும் போது தெளிவாகிறது. ஏனெனில், ராஜபக்ஷவுக்கு இந்த வாய்ப்பை அளித்தமையினால் தாம் எந்த நோக்கத்துக்காக ஜனாதிபதி பதவியை ஏற்றாரோ அதே நோக்கத்துக்கு எதிராக ஜனாதிபதி செயற்படுகிறார்.


ராஜபக்ஷவின் ஆட்சி இனவாத ஆட்சி, ஜனநாயக விரோத ஆட்சி, ஊழல் மலிந்த ஆட்சி என்று கூறியே கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மைத்திரிபாலவும் அவருக்காக குரல் கொடுத்தவர்களும் அவ்வாட்சியை கவிழ்க்க மக்கள் ஆதரவைக் கோரினர். ஆறு மாதங்கள் செல்லுமுன் மக்கள் வழங்கிய அந்த ஆணைக்கு எதிராக மீண்டும் மஹிந்த ஆட்சிபீடமேற இடமளிக்கும் வகையில் ஜனாதிபதி. செயற்பட்டமை அரசியல் நாகரிகத்தையே குழி தோண்டிப் புதைப்பதற்குச் சமமாகும்.

மைத்திரிபாலவை பதவியில் அமர்த்தப் பாடுபட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சமூக அமைப்புக்கள் இப்போது அவரது இந்த முடிவின் நாகரிகத்தன்மையைப் பற்றியும் ஆபத்தைப் பற்றியும் அவரிடம் கேள்வி எழுப்புகின்றன. வரப் போகும் நாட்களில் ஜனாதிபதித் தேர்தலின் போது மைத்திரிபாலவை ஆதரித்தவர்களே அவருக்கு எதிராகச் செயற்படும் நிலை உருவாகியிருக்கிறது.

இதனால், இந்தத் தேர்தல் காலத்தில் மஹிந்தவுக்கும் மைத்திரிபாலவுக்கும் இடையே நெருக்கம் ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. நாட்டின் அரசியல் நிலைமை அவ்வாறானதாகத் தான் இருக்கிறது. இந்த விடயத்தில் சிறிசேனவுக்கு எதிராக எழும் குற்றச்சாட்டுக்களில் இருந்து அவரைப் பாதுகாக்க தாம் தயார் என மஹிந்தவின் ஆதரவாளர்கள் ஏற்கனவே கூறியிருக்கிறார்கள். அதுவும் இரு தரப்பாரையும் மேலும் நெருங்கச்

# ஏகப் பிரதிநிதித்துவத்துக்கான போர்

- புருஜோத்தமன் தங்கமயில் கட்டுரையிலிருந்து.



தமிழ்த் தேசிய அரசியலும்- ஆயுதப் போராட்டமும் "ஏகப் பிரதிநிதிகள்" என்கிற விடயத்தை தொடர்ச்சியாக முன்னிறுத்தி வந்திருக்கின்றன. பல் கட்சி- அமைப்பு அரசியலின் மீது அதீதமாக நம்பிக்கை கொள்வதற்கான வாய்ப்புக்களை பெருமள வில் தவிர்த்து வந்திருக்கிற தமிழ்த் தேசிய அரசியற்சூழல், தன்னுடைய பொது எதிரி யாக பௌத்த சிங்கள பேரினவாதத்தை கருதி வந்திருக்கின்றது. அதனையே, பின் வந்த ஆயுதப் போராட்டமும் பிரதிபலிக்க ஆரம்பித்தது.

குறிப்பாக, தமிழர் விடுதலைக் கூட்டணியின் உருவாக்கத்துக்குப் (1972 இற்கு) பின்னரான காலம் என்பது ஏகப் பிரதிநிதிகள் என்கிற விடயத்தை தமிழ்த் தேசியப் போராட்டங்களில் பிரதானமாகக் கொள்ள வைத்தது. அதுதான், ஆயுதப் போராட்டக்களம் உச்சம் பெற்றிருந்த நிலை யில் தமிழீழ விடுதலைப் புலிகளையும், அதன் பின்னர் அவர்களினால் ஒருங்கி ணைக்கப்பட்ட அரசியல் சக்தியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் கொள்ள வைத்தது.

தமிழ்த் தேசிய அரசியல் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தை மையப்படுத்தியே முன்னகர்த்தப் படுகின்றது. அது, பல நேரங்களில் பிழையான முன்மாதிரிகளை வழங்கியிருந்தாலும், தேசியத்தை ஒருங்கிணைப்பதற்கான உணர்வு பூர்வமான தளமாக அரசியல் - ஆயுதப் போராட்டங்களில் கொள்ளப்பட்டு வந்திருக்கின்றது. இப்போதும், நிலைமை அப்படியேதான் இருக்கின்றது.

தமிழ் அரசியல்- ஆயுதப் போராட்டங்களில் "துரோகிகள்" என்கிற வார்த்தையின் பாவனை என்பது அதிக நேரங்களில் எந்தவித அடிப்படையு மின்றி கையாளப்பட்டு வந்திருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றுக்கிடையிலான (யாழ்ப்பாணத்துக்கான) களமாடலிலும் துரோகிகள் வாதம் அதிகமாக வைக்கப்படுகின்றது. பல நேரங் களில் கொள்கை - கோட்பாடுகள் பற்றிய உரை யாடல்களைத் தாண்டி துரோகிகள் கோசம் சத்தமாக கேட்கிறது. இது ஆரோக்கியமான அரசியலின் போக்கினைக் காட்டவில்லை. மாறாக, நாம் மீண்டும் மீண்டும் படுகுழியில் வீழ்வதற்கான கோசமாக தெரிகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைப் பொறுத்த வரையில் யாழ்ப்பாணத்தில் மொத்தமுள்ள ஏழு ஆசனங்களில் குறைந்தது ஐந்தை வெற்றி கொள்ள வேண்டும் என்கிற முனைப்போடு செயலாற்றுகின்றது. அதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஓர் ஆசனத்தை வெற்றி கொள் வதையும் அனுமதிப்பதற்கான மனநிலையில் இல்லை.


ஏனெனில், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியோ (ஈ.பி.டி.பி.), ஐக்கிய தேசியக் கட்சியோ ஒவ்வொரு ஆசனங்களை வெற்றி கொள்வதைக் காட்டிலும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஓர் ஆசனத்தை வெற்றி கொள்வ தென்பது தமிழ்த் தேசிய அரசியலில் ஏகப் பிரதி நிதிகள் என்கிற தம் மீதான அடையாளத்தைச் சிதைக்கும் என்று கருதுகின்றது. அதனால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வெற்றி என்பது என்றைக்கும் உவப்பில்லாத ஒன்றாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருக்கப் போகின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தன்னுடைய அரசியலை ஆரம்பித்து 5 வருடங்களைக் கடந்துவிட்டது. ஆனால், மக்களிடம் நம்பிக்கை பெறுவதற்கான வாய்ப்புக்களை பெரிதளவில் உருவாக்கவில்லை. மாறாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விமர்சிப்பதோடு காலத்தைக் கடத்தி விட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இப்போதைய ஒரே இலக்கு யாழ். தேர்தல் மாவட்டத்தில் குறைந்தது 40,000 - 45,000 வாக்குகளைப் பெறுவதுதான். அது, அவ்வளவு இலகுவான காரியமல்ல. ஆனால், அந்த வாக்குகளைப் பெற முடியாது போனால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பெரும் தோல்வியாக அமையும்.

சமூக ஊடகங்களின் ஊடாட்டங்களில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வெற்றி பற்றிய நம்பிக்கை கொள்ளும் தரப்பினரையே அது சோர்ந்து போக வைக்கும். அது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நோக்கி மக்களை ஒருங்கிணைப் பதற்கான வாய்ப்புக்களை எதிர்காலத்தில் இல்லாமற் செய்துவிடும்.

# துஷ்டர்களின் தியாகம்!



அப்படி என்ன நாவலுக்கும் கதைக்கும் ஆபத்து வந்துவிட் டது? நாவல் எழுத முக்கியமாக என்ன வேண்டும்? பேனாவும் காகிதமும்! கதையமைப்பில் எது முக்கியம் என்று கேட்கிறேன். கதாநாயகன், கதாநாயகி என்று சிலர் சொல்லக்கூடும். அது தவறு.

கதாநாயகனும் நாயகியும் அவசியமே இல்லை என்று நான் சொல்லத் தயாராயில்லை. கதைக்கு அவர்களும் தேவை தான். ஆனால் ரொம்பவும் அவசியமான பாத்திரம், கதா நாயக நாயகிகளைப் பல கஷ்டங்களுக்கு உள்ளாக்கி, கதைக்கு சுவாரஸ்யம் கொடுக்கும் துஷ்டன்தான்.

கதாநாயகனும் நாயகியும் - தலைவனும் தலைவியும் என்றே சொல் வோம்; தமிழாயிருக்கட்டுமே - ஒருவரையொ ருவர் காதலிப்பதோடு நின்றுவிட்டால் கதை ஏது? நடுவில் ஒரு துஷ்டன் தோன்றி, அவர்களை இம்சித் தாலன்றி அவர்களுடைய காதல் வளரப் போவதில்லை. ஆனால் கதாசிரியர்கள் அவனுக்கு ஏதாவது நன்றி கின்றி செலுத்துகிறார்களா? கிடையாது; கடைசியில் அவனைக் கொன்று விடுகிறார்கள் அல்லது அவன் செய்த குற்றங்களுக்காக அவனைச் சிறையிலடைத்து விடுகிறார்கள். அவ- னுடைய உதவியால் கதை முடியும் வரை உயிரோடு இருந்த தலைவனும் தலைவியும் ஒரு சொட்டுக் கண்ணீர்கூட அவனுக்காகச் சிந்தாமல் சந்தோஷமாய்க் காலம் கழிக்கிறார்கள். இந்தத் துஷ்டர்கள் கதைப்போக்கில் முக்கிய பாத்திரங்களுக்குக் கஷ்டங்கள் விளைவிக்கிறார்களேயொழிய அவர்களைக் கொல்வதேயில்லை. கடைசியில் தலைவன் தலைவி சந்தோஷத்திற்காக தன் உயிரையும் இந்தத் துஷ்டன் தியாகம் செய்கிறான். இவனை இரக்கமின்றிக் கொலை செய்வதுமல்லாமல் தூஷிப்பதும் நியாயமா?

ராமாயணத்தை எடுத்துக் கொள்வோமே. தாடகை என்ற பெண்மணி இல்லையென்று வைத்துக் கொள்வோம். ராமன் உதவியை விஸ்வாமித்திரர் நாட ஏதாவது தேவை இருந்திருக்குமா? சீதா கல்யாணம்தான் நடந்திருக்குமா? கைகேயியின் பரோபகார சிந்தையினால் அல்லவா ராமன் காட்டுக்குப் போக நேர்ந்தது? கைகேயி அப்படிப்பட்ட வரம் கேட்காவிட்டால் ராமாயணம் மூன்றாவது அத்தியாயத்தோடு நின்றிருக்க வேண்டியதுதான்! வால்மீகியும் கம்பனும் எழுத்துலகில் பெயர் பெறுவது அப்பொழுது தெரியும்!

ஏன் மகாபாரதத்தை எடுத்துக் கொள்ளுங்கள். துரியோதனன் சூதாட்டத்தில் கொஞ்சம் கெட்டிக்காரன் என்றால் அப்படியா அவனை ராட்சசன்போலக் கருதும்படி செய்வது? அவன் மாத்திரம் பாண்டவர்களிடம் அன்பு கொண்டு காட்டுக்கு அனுப்பாமல் இருந்திருந்தால் தெரியும் தற்கால தமிழ்நாட்டுப் பட முதலாளிகள் படும் பாடு! படம் எடுப்பதற்குக் கதை களே இல்லாமல் திண்டாடி அலைய வேண்டியிருக்கும்! நல்ல கதைகளுக்கும் சம்பவங்களுக் கும் வசதி அளித்தார்களே இந்த "துராத்மாக்கள்" இவர்களுக்கு நாம் யாராவது கொஞ்சமாவது நன்றி செலுத்துகிறோமா? "கைகேயி கபே" "ராவணன் டாக்கீஸ்" "துரியோதனன் பிக்சர்ஸ்" என்று ஏதாவது பெயர்கள் வைத்து அவர்களுடைய ஞாபகத்தை நீடித்தோமா? கிடையாது.

இந்த கீதைதான் எப்படி வந்தது என்று கேட்கிறேன். கிருஷ்ணன் தூது சென்றானே அப்பொழுது துரியோதனன் தன்னுடைய ராஜ்யம் முழுவதையும் பாண்டவர்களுக்குக் கொடுத்திருந்தால் - யுத்தம் ஏது? கீதோபதேசம் ஏது? அப்பேர்ப்பட்ட துரியோதனனின் நல்லெண்ணத்தினாலும் தீர்க்க தரிசனத்தினாலும் உற்பத்தியான கீதையில் பகவான் என்ன சொல்கிறார்? துஷ்டர்களைக் கொல்லவும், நல்லவர் களைக் காப்பாற்றவும்தான் இவர் வந்து சேர்ந்தாராம். ரொம்ப வும் அவசியம் பாருங்கள்! "என்னடா துஷ்டர்கள் இல்லா விட்டால் உலகம் நடக்குமா? இதிகாச புராணங்கள் ஏற்படுமா? என்று சிறிதளவாவது இந்த கிருஷ்ண பரமாத்மா நினைத்தாரா? ஏன் நினைக்கிறார்? பாதி பாரதத்திலேயே துரியோதனன் தற்கொலை செய்து கொண்டிருந்தால் அப்போது தெரியும்!

**('இன்னும் சில விஷயங்கள்' நூலில் சிட்டி)**

செய்ய உதவலாம். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் மகிந்த குழு, மைத்திரி குழு என்று குழுக்கள் இல்லை என மகிந்தவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கூறியிருந்தார்.

ஆனால், பொதுத் தேர்தல் முடிவடைந்து ஐ.ம.சு.கூவும் வெற்றி பெற்று மகிந்தவும் தெரிவாகியிருந்தால் நிலைமை மீண்டும் மாற- லாம். அப்போது மகிந்தவை பிரதமராக்க வேண்டும் என்ற நெருக்குதல் வரும். ஜனாதி- பதி அதனை புறக்கணிக்க முடியாமல் போகும். மகிந்த பிரதமரானால் அவருக்கு ஜனாதிபதியாவதற்கு ஒரு ரவை வீச்சின் தூரம் மட்டுமே இருக்கும் என ஜனாதிபதி மைத்திரிபாலவே கடந்த நாட்களில் கூறியிருந்தார்.




ஒரு ஜென் துறவி தனது சீடனுக்குச் சொல்லிக் கொடுக்கும்போது, எதுவோ சந்தேகம் வர அவர் ஒரு புத்தகத்தைக் காண்பித்து இதில் உள்ளதைப் படித்துச் சொல் என்றார்.


அதற்கு மாணவன் படித்துச் சொல்லிய பின், "குருவே உங்களுக்குப் படிக்கத் தெரியாது; ஆனாலும் எப்படி நீங்கள் மற்றவர்களுக்கு சொல்லித் தருகிறீர்கள்?" என்று கேட்டான்.

அதற்கு அவர் அவனை வெளியில் அழைத்துச் சென்று, "அங்கே பார், அது தான் நிலா!" என்று சொன்னார்.

பின் அவர் சொன்னார்,

"புத்தகம் என்பது என் கை போன்றது. கையால் நிலவைச் சுட்டிக் காட்டியதால் என் கை நிலவாக ஆகிவிடாது. என் கை இல்லாமலும் நிலவைப் பார்க்க உன்னால் முடியும். அப்படிப் பார்க்க முடியாத நேரத்தில் ஒரு வழிகாட்டி தேவைப்படுகிறது, கையின் தொடர்பு நில- வைச் சுட்டிக்காட்டிய உடன் முடிந்து விட்டது. அதற்கு மேல் எப்போது வேண்டுமானாலும் என் கை துணையின்றி நிலவைப் பார்க்கலாம்"

# புத்திசாலி கழுதை



ஒரு நாள் ஒரு காட்டுப் பகுதியில் கழுதை ஒன்று புல் மேய்ந்து கொண்டிருந்தது. கழுதையை கவனித்த ஓநாய் ஒன்று அதை அடித்துத் தின்னும் நோக்கத்துடன் அதன் மீது பாய்ந்தது. தனக்கு வந்த ஆபத்தைக் கண்டு பயந்தது கழுதை ஓநாயை எதிர்த்து சண்டை போடுவது கஷ்டம். அதனால் ஏதாவது ஒரு தந்திரம் செய்து தான் சமாளிக்க வேண்டும் என கழுதை தீர்மானித்தது. ஓநாயின் பாய்ச்சலின் போது சற்று விலகிக் கொண்டு, "ஓநாயாரே, உம்முடைய வலிமையின் முன்னால் நான் எம்மாத்திரம்... நான இன்று உமக்கு இரையாகப் போவது உறுதி. இதை யாராலும் தடுக்க. முடியாது நானும் உமக்கு இரையாகத் தயாராக இருக்கிறேன் அதற்கு முன்னால் நான் சொல்லக் கூடிய விஷயத்தைத் தயவு செய்து கேட்க வேண்டும்" என வேண்டிக் கொண்டது.

"நீ என்ன சொல்ல விரும்பினாய். சொல்வதை சீக்கிரம் சொல். எனக்கு பசி அதிகமாக இருக்கிறது," என உறுமியது ஓநாய்.

"ஓநாயாரே என் காலில் பெரிய முள் ஒன்று குத்தி விட்டது. முள்ளை எடுக்க நான் எவ்வளவோ முயற்சி செய்தும் முடியவில்லை. காலில் முள் உள்ள நிலையில் நீர் என்னை அடித்துச் சாப்பிட்டால் அந்த முள் உமது தொண்டையில் மாட்டிக் கொள்ளும் அது உமக்குக் கடுமையான வேதனையைத் தருவதுடன் உமது உயிரை வாங்கி விடவும் கூடும். அதற்கு அருள் கூர்ந்து முதலில் என் காலில் இருக்கும் முள்ளை எடுத்துவிடும். அதற்குப் பிறகு நீர் என்னை அடித்துத் தின்பதில் எனக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை," என கழுதை கூறிற்று. ஏமாந்த ஓநாய் ஒத்துக் கொண்டது.கழுதை தனது பின்னங் கால்களைத் திருப்பிக காண்பித்து, "இடது காலில் தான் முள் இருக்கிறது!" எனக் கூறிற்று.

ஓநாய் கழுதையின் பின்னங்கால்களில் முள் இருக்கிறதா என ஆராய்ச்சி செய்தது. அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு கழுதை பின்னங் கால்களால் ஓநாயைப் பலமாக உதைத்துப் படுகாயப் படுத்தியது.

கழுதையின் உதை தாள மாட்டாது ஓநாய் துடிதுடித்து வீழ்ந்தது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு கழுதை வேகமாக ஓடி தப்பித்துக் கொண்டது.


# கணிதப்புதிர்



சிறுவன் ஒருவன் பத்தி ரிகை அலுவலகத்தில் வேலை பார்த்து வந்தான். அவன 100 சந்தாதாரர் களைச் சேர்த்தால் அவ னுக்கு போனஸ் உண்டு என உயரதிகாரி சொன்னார். அவனும் சந்தாதாரர்க ளைச் சேர்க்கத் தொடங்கி னான். ஒவ்வொரு நாளும் முந் தைய நாளை விட 3 சந்தாதாரர் களை அதிகமாகச் சேர்த் தான். எட்டாவது நாளன்று அவன் 100 சந்தாதாரர் களைச் சேர்த்து முடித்து விட்டான். அப்படியானால் தினந்தோறும் அவன் எத்தனை சந்தாதாரர்களைச் சேர்த் தி ருப் பான் எனக் கணக் கிட்டுச் சொல்லுங்கள் பார்ப்போம்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 5 | | 8 | | | | |
| | | | 4 | | | | | 6 |
| | 9 | | 1 | | 7 | | | 3 |
| | | 8 | | | | | 1 | 7 |
| | | 9 | | 6 | | 4 | | |
| 2 | 4 | | | | | 9 | | |
| 6 | | | 9 | | 2 | | 3 | |
| 7 | | | | | 3 | | | |
| | | | | 1 | | 8 | 4 | |





## சுடோகு

மூளைக்கு வேலை தருவது என்றால் ரொம்பப் பிடிக்கும் இல்லையா? இந்தக் கட்டங்களில் விடுபட்ட எண்களை நிரப்புங்களேன்.

## இந்தவார சிறுவர்க்கான சிந்தனை

மன ஆற்றலுடையவர்க்ள் சாதாரணமான மனங்களிலிருந்து வரும் கடும் எதிர்ப்பை எதிர்கொள்ளும் ஆற்றலுடன் இருப்பார்கள்

# சேமிப்பு



சின்னச் சின்ன உண்டியல்
சிவப்பு நிறம் எனது உண்டியல்
மண்ணில் செய்த உண்டியல்
மகிழ்ச்சி கொடுக்கும் உணடியல !

எண்ணி எண்ணி அதனிலே
எனக்குக் கிடைக்கும் காசுகள்
சிறுகச் சிறுக நானுமே
சேர்த்து வருதல் தெரியுமா?

காசு பணமும் சேர்வதால்
கவலை இல்லை எனக்குமே
ஆசைப்பட்ட பொருள்களை
அதனைக் கொண்டு வாங்குவேன் !

எழுதும் பொருட்கள் வாங்குவேன்
இனிப்பு மிட்டாய் வாங்குவேன்
யாரும் உதவி வேண்டினால்
எடுத்துத் தந்து உதவுவேன்!

சின்னஞ் சிறிய வயதிலே
சேர்க்கும் பண்பு தேவையே
சேர்த்த பணத்தைக் கொண்டு நாம்
சேவை செய்ய வேண்டுமே !

# விடுகதை

01. வேளைக்கு வேளை புது ரோஜா: வேண்டு கின்ற ஒரு மகராஜா அது யார்?
02. தலையில்லாதவன்: சுமபபான் அது யார்?
03. நடக்காத கால்கள் உண்டு: மடக்காத கை கள் உண்டு: வளையாத முதுகு உண்டு அது என்ன?
04. அம்மா பின்னிய நூலை அழித்தா சாப்பிடலாம் அது என்ன?
05. தலையை அழுத்தி னால வாயைத் திறக்கும் அது என்ன?
06. கடமை வீரன்: காக்கிச் சட்டை அணிய மாட் டான் அது யார்?
07. மலையில் பிறக்கும்: அருவி அல்ல, சுவையைக் கொடுக்கும் பருகலாம், ஆனால் பானம் அல்ல, அது என்ன?




# நீங்களே செய்யலாம் தேங்காய் ஓட்டில் அழகான பென்ஹோல்டர்



மேசை மீது வைத்திருக்கும் அழகிய பேனா ஸ்டாண்டைப் பார்த்திருப்பீர்கள். அதைப் போன்ற ஒரு பென் ஸ்டாண்டை தேங்காய் ஓட்டை வைத்து செய்யலாம், தெரியுமா?

**தேவையான பொருள்கள்:**


மூன்று கண்களைக் கொண்ட பாதி தேங்காய் ஓடு (கொட்டாங்கச்சி), வண்ணக் காகிதத் துண்டுகள் சில, சிறிய விலங்குகளின் படங்கள், கத்தரிக்கோல், பசை.

**செய்முறை:**

1. தேங்காய் ஓட்டின் மேல் பகுதியிலுள்ள நார்களை நன்றாக உரித்து, சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள். ஓட்டின் மேல் உள்ள கண்கள் பகுதியில் துளையிட்டுக் கொள்ளுங்கள்.
2. இப்போது தேங்காய் ஓடு முழுவதும் நன்றாகப் பசையைத் தடவிக் கொள்ளுங்கள். பின்னர் வண்ணக் காகிதத் துண்டுகளை ஓட்டின் மீது நன்கு ஒட்டிக் கொள்ளுங்கள்.
3. அடுத்ததாக, வெட்டி வைத்திருக்கும் சிறிய விலங்குகளின் படங்களை தேங்காய் ஓட்டின் மீது ஒட்டிக்கொள்ளுங்கள்.
4. இப்போது தேங்காய் ஓட்டின் வட்ட வடிவமான பகுதியை மேசை மீது வைத்துவிட்டு மேலே தெரி யும் துளைகளில் பேனாக்களை நுழைத்து பேனா ஸ்டாண் டாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இது பார்ப்பதற்கு அழகாகவும் இருக்கும், நீங்களே செய்தது என்ற திருப்தியையும் தரும்.

# பொருத்துங்க பார்க்கலாம்



# குற்றச் செயல்கள் அற்ற வகையில் சமுதாயத்தை உருவாக்க வேண்டும்

## நீதிமன்ற ச.சீ.கா.பரிசோதகர் தெரிவிப்பு

(மல்லாகம்)

குற்றச்செயல்கள் அற்ற சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்புவதே எமது சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் இலட்சியமாக உள்ளது. அதற்காகவே நாட்டிலுள்ள ஒவ்வொரு நீதிமன்றத்திலும் சமுதாயஞ்சார் சீர்திருத்தக் காரியாலயம் அமைக்கப்பட்டுள்ளது என மல்லாகம் நீதிவான் நீதிமன்ற சமுதாயஞ்சார் சீர்திருத்தக் காரியாலயத்தில் வேலைப் பரிசோ தகராகப் பணியாற்றும் வசந்தகுமார் ஸ்ரீகுமார் தெரிவித்தார்.

மேற்படி காரியாலயத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் போதைப் பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சி அண்மையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர் மேலும் கூறுகையில்;

"இன்று எமது நாட்டில் என்றுமில்லாத அளவிற்குப் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளது. இதனால் குற்றச் செயல்களும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன. அத்துடன் குடும்ப வன்முறைகளும் பெருகிச் சென்று குடும்பப் பிறழ்வுகள் அதிகரிக்கின்றன. இப்படிப்பட்ட சூழலில் எமது எதிர்காலச் சந்ததிகள் எவ்வாறு ஆரோக்கியமாக வளர முடியும்?

மேலும் எமது சமுதாய சீர்திருத்தக் கட்டளைக்கு உட்படுவோரில் அநேகமானோர் மது போதை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளிலே வருகின்றனர். இவர்கள் தண்டப்பணம் செலுத்த முடியாத பட்சத்தில் சிறைத்தண்டனைக்கு உட்பட்டுச் சிறையில் அடைக்கப்படுகின்றனர். இதனால், அவர்களது பொருளாதாரம் கேள்விக்குள்ளாக்கப்படுகின்றது.

இந்நிலையில் இவர்களை எமது சமுதாய வேலைக்கு உள்வாங்கி உள ஆற்றுப்படுத்தல் வழங்குவதுடன், அவர்களது பொருளாதாரத்தையும் பார்க்கின்றோம்.

அத்துடன், அவர்களுக்கு ஆன்மீக போதனைகளும் செய்கின்றோம். இவ்வாறு நாம் செய்வதனால் அவர்களது பிள்ளைகளின் கல்வி மற்றும் குடும்பப் பாதுகாப்பு, குற்றச் செயல்களிலிருந்து மீட்சி, நாட்டின் அபிவிருத்திக்கு உதவுதல், சௌபாக்கியம் மிக்க எதிர்காலம் ஆகியன கிடைக்கின்றன. அத்துடன் சிறந்த எதிர்கால சந்ததிகளையும் உருவாக்க முடிகின்றது. அதுபோன்று வீட்டையும் நாட்டையும் காக்கும் சமூகத்திற்கு எமது சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம் உதவுவதற்குத் தயாராகவுள்ளது. இவ்வாறு எமது கட்டளைக்கு உள்வாங்கப்படுவோரை வீட்டிற்கும் நாட்டிற்கும் உகந்த நற்பிரஜைகளாக மாற்றுவதே எமது நோக்கம். அதற்காக நாம் அனைவரும் இணைந்து உழைப்போம் என்று தெரிவித்தார்.

# கடலுணவுகளுக்கு யாழில் தட்டுப்பாடு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள முக்கிய சந்தைகளில் நண்டு, இறால மற்றும் கணவாய் என்பவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் அவற்றின் விலைகள் உயர்வடைந்துள்ளதாக மீன் ஏலம் கூறுபவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரு கிலோ சிவப்பு இறால் 800 ரூபாய் தொடக்கம் 900 ரூபாய் வரையிலும் ஒரு கிலோ கறுப்பு இறால் 1000 ரூபாய் முதல் 1100 ரூபாய் வரையிலும், நண்டு கிலோ 550 ரூபாய் முதல் 600 ரூபாய் வரையிலும், கணவாய் கிலோ 500 ரூபாய் முதல் 600 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்படுகின்றது.

கடந்த காலங்களை விட கிலோவுக்கு 100 முதல் 300 ரூபாய் வரையில் இவற்றின் விலைகள் அதிகரித்துள்ளதாக ஏலம் கூறுபவர்கள் கூறினர்.

விடுமுறையில் வெளிநாடுகள் மற்றும் வெளிமாவட்டங்களில் இருந்து வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன் அவர்களில் பெரும்பாலானவர்கள் நண்டு, இறால் மற்றும் கணவாய் என்பவற்றின் மீது அதிக நாட்டம் கொண்டமையால் அவற்றின் விலைகள் உயர்வடைந்துள்ளதாக ஏலம் கூறுபவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# வட்டு. வாலிப சங்க இளைஞர்களை தமிழ் வானொலி ஜெகநாதன் சந்திப்பு




(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க காரியாலயத்துக்கு வருகை தந்த தமிழ் வானொலி (பிரான்ஸ்) முக்கியஸ்தர் ஒருவரான ஜெகநாதன் (ஜேர்மனி) உடன் ஒரு சந்திப்பு நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் நடைபெற்றது.

இதில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் கல்வி வாழ்வாதாரம் மற்றும் மருத்துவம் சம்பந்தமாக அந்த மக்கள் எதிர்நோக்குகின்ற சவால்கள் பற்றி எடுத்துக் கூறியிருந்தோம். அதற்கு அம்மக்களின் துயரம் நீக்க தங்களால் ஆன மனிதாபிமான உதவிகளை அம்மக்களுக்கு செய்வதாக கூறியிருந்தார்.

# தமிழ்த் தின விழா

(வவுனியா)

வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் தமிழ்த்தின விழா வவுனியா தெற்கு கல்வி வலயத்தின வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊடகவியலாளர் அருணாசெல்லத்துரை கலந்து கொண்டார்

குழு இசையினை இறம்பைக்குள மகளிர் மகாவித்தியாலய மாணவர்களும் பேச்சினை செட்டிக்குளம் மகாவித்தியாலய மாணவர்களும் தனி நடனத்தினை நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய மாணவர்களும் தனியிசையை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவர்களும் இசையிற்கதையை அறபா வித்தியாலய மாணவர்களும் நட்டார் இசையினை சைவப பிரகாச வித்தியாலய மாணவர்களும் விசிறி நடனத்தை இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலய மாணவர்களும் வழங்கினர். வவுனியா தெற்கு கல்வி வலயத்தினால் நடாத்தப்பட்ட தமிழ்த் தினப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

# பதிவிறக்கப் பெட்டகம்

தமிழர் ஒற்றுமையால் இதுவரை வெல்லப்பட்டது என்ன? தமிழ்த் தலைவர்கள் அரசியல் அஞ்ஞாதவாசம் மேற்கொண்ட1989 முதல் அவர்கள் மீண்டு வந்து நாற்காலிகட்கு உரிமை கோரி மக்களால் அடுத்தடுத்து இருமுறை நிராகரிக்கப்பட்ட காலத்தை விட்டால், அவர்களைப் பாராளுமன்றத்துக்கும் மாகாண சபைகளுக்கும் பெருந்தொகையில் அனுப்பியதற்கு மேலாகத் தமிழர் ஒன்றுமை சாதித்தது என்ன? தமிழர் ஒற்றுமை மூலம் வேறெதையும் செய்யுமாறு தலைமைகள் மக்களைக் கேட்டதில்லை. தலைமைகளைக் கேளாமல் மக்கள் ஒன்றுபட்டு எதையாவது செய்ய முயன்றால், அது தலைமைகட்குச் சங்கடமாகும் போது, ஒவ்வொன்றுக்குப் பின்னாலும் ஒரு சூழ்ச்சியையும் அரசியல் நோக்கத்தையும் கண்டுபிடிக்கும் ஆற்றலைத் தமிழ்த் தலைமைகள் சுன்னாகம் எண்ணெய்க் கலப்பின் போதும் புங்குடுதீவுக் கொடுமையின் பின்பும் நன்கு புலப்படுத்தினர்.

புங்குடுதீவுக் கொடுமைக்குப் பின்பு தென்னிலங்கையின் பல்வேறு கட்சிகளும் சமூக நிறுவனங்களும் பெண்களின் பாதுகாப்பை வலியுறுத்திப் போராட்டப் பேரணிகளை நடத்தினர். சில இடதுசாரிகளையும் சமூக அக்கறையுள்ளவர்கள் சிலரையும் விட்டால் தமிழர் எவரையும் குறிப்பாகத் தமிழர்களின் பிரதிநிதி எவரையுமே தேடவுங் கிடைக்கவில்லை.

– கோகர்ணன்

ஈழ விடுதலைப் போராட்டம் நீண்ட வரலாற்றைக் கொண்டது. மிதவாதத் தலைமைகள் தமிழ்க் காங்கிரசில் இருந்து ஆரம்பித்து இவர்கள் வழி சரி இல்லை என்று புறப்பட்ட தமிழரசுக் கட்சியும் பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றி சுகபோக வாழ்வைத் தமதாக்கி கொள்ளும் வழியில் தம்மை சுருக்கிக் கொண்டனர். இளைஞர் அணியினரைத் திருப்திப்படுத்தும் கோஷங்களையும், சிறிய சாத்வீகப் போராட்டங்களையும் நடத்தினர். மறுபுறத்தில் கொழும்பு வாழ்க்கை, தமது பிள்ளைகளின் எதிர்கால நலன்களின் அடிப்படையில் பிள்ளைகளை இலங்கை அரசின் ஆதரவுடன் வெளிநாடுகளுக்கு அனுப்பி அவர்களின் வாழ்கையை வளப்படுத்தியது என்று மட்டும் காலத்தை ஓட்டினர். தமிழ் மக்கள் மத்தியில் இலங்கை அரசுக்கு எதிராக எமது உரிமைகளை வென்றெடுப்போம் என்று மட்டும் பேசிக்கொண்டு மாறி மாறி இலங்கையில் ஆட்சிபீடத்திலிருந்த அரசுகளுடன் கொழும்பில் 'நல்ல' கள்ள உறவில் இருந்ததையே எமது மிதவாதத் தலமைகள் கொண்டிருந்தனர். இன்றும் அப்படியே.

–சாகரன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது சம்பந்தன் ஐயாவும் சுமந்திரனும் தான். ஏனைய எல்லோருமே வெறும் எண்ணிக்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே. பிரபாகரனைப் பாடும் புகழுரைகளுக்கும், சிங்கள–எதிர்ப்பு ஆவேசப் பேச்சுக்களுக்கும், இலக்கற்ற தமிழ்த் தேசிய கோசங்களுக்கும் மயங்கி வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிக்கும் மக்கள் உணர வேண்டியது என்னவெனில் - இந்த வாக்குகளால் உண்மையில் பலம் பெறப் போவது பிரபாகரனின் கோட்பாடுகளோ அல்லது சிங்கள–எதிர்ப்போ அல்லது தமிழ்த் தேசியமோ அல்ல. இவற்றை உரைப்பவர்கள் கூட ஆகக்கூடியது நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆவதற்கு அப்பால் - தமிழ் மக்களின் தேசிய அரசியற் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் ஒரு துரும்பைக் கூட அசைக்க முடியாது. தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பதை - வீட்டுச் சின்னத்திற்கு மக்கள் அளிக்கப்போகும் வாக்குகளின் மூலம் பலம் பெறும் சம்பந்தன் ஐயாவும் சுமந்திரனும் மட்டுமே தீர்மானிக்கப் போகின்றார்கள். ஐயாவாலும் சுமந்திரனாலும் எவ்வளவைக் கொண்டு வர முடியுமோ, அவ்வளவும் தான் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வின் அளவு.

2010ஆம் ஆண்டில் தான் அரசியலுக்கு வந்த விதம் பற்றி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது யாழ்ப்பாண வேலைத் தளத்தில் வைத்து அண்மையில் எனக்குக் கூறிக் கொண்டிருந்தார். அவர் சொன்னார், "ஐ சே, வீட்டுச் சின்னத்தில தும்புத்தடியை நிப்பாட்டினாலும் சனம் வோட்டுப் போட்டு வெல்ல வைக்கும்".

தமிழர்கள் இப்போது தீர்மானித்தே ஆக வேண்டும்.

– தி.பரந்தாமன்

# தெளிவான கொள்கைத்திட்டம் நல்லாட்சி அரசிடம் இல்லை

## கோத்தா விசனம்

(கொழும்பு)

**நாட்டில் தற்போதைய நல்லாட்சி எனக் கூறப்படும் அரசாங்கத்தில் தெளிவான கொள்கைத்திட்டம் எதுவும் இல்லையென முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



கொழும்பு விகாரமாதேவி உள்ளரங்கில் நேற்று முன்தினம் நடை பெற்ற, விமல் வீரவன்சவின் யுத்தம் இல்லாத நாடு- நல்லாட் சியின் பின்னர் இரண்டாகும் நிலை என்ற நூல் வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டார்.

வெள்ளை வான் கடத்தல், பாதாள உலக கொள்ளைக்கூட்டம் அனைத்தும் எம்மிடம் தான் உள்ளதென விமர்சித்தவர்கள் இன்று ஆட்சியை அமைத்துள் ளனர். ஆனால் இவர்களின் ஆட்சியில் என்ன நடக்கின்றது?

இன்று பட்டப்பகலில் துப் பாக்கிச் சூடும், கடத்தல்களும் தாக்குதல் நடவடிக்கைகளும் நடைபெறுகின்றன. நல்லாட்சி என்ற இந்த ஆட்சியில் ஒரு தெளிவான கொள்கைத்திட்டம் இல்லாது போயுள்ளது.

தமது வேலைத் திட்டத்தை தெளிவாக இவர்களால் குறிப்பிட முடியாது. நல்லாட்சி யில் இவர்களின் வேலைத்திட் டங்கள் நாட்டில் முழுமையாக சென்றடையவில்லை.

எமது ஆட்சியில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் வடக்கில் உண்மையான அபிவிருத்திகள் முன்னெடுக் கப்பட்டன. வடக்கு தமிழ் மக்க ளின் உண்மையான ஜனநா யகத்தை நாம் பெற்றுக் கொடுத்தோம்.

அதேபோல் அநாவசிய காணிகளை நாம் தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுத் தோம். ஆனால் எந்த சந்தர்ப்பத் திலும் நாம் நாட்டின் தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்த வில்லை.

இன்று நாட்டின் தேசிய பாதுகாப்பு மிகவும் அச்சுறுத்த லான நிலையில் உள்ளது. அரசியல் சுயநல வேலைத்திட் டங்களை கருத்தில் கொண்டு நாட்டின் தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்தி விட்டனர்.

நாம் புலிகள் இயக்கத்தை அழித்த போதிலும் புலிகளினால் போசனை வழங்கப்பட்ட அரசி யல் புலிகளை நாம் அழிக்க வில்லை.

அதன் விளைவு இன்று ஆட்சிமாற்றத்தின் பின்னர் நாடு மீண்டும் பிரிவினையின் பக்கம் நகர ஆரம்பித்துள்ளது.

எமது கட்டுப்பாட்டின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இருந்தபோது நாடு அமைதியாக இருந்தது. ஆனால் இன்று நாம் இல்லாத நிலையில் மீண்டும் நாட்டில் கிளர்ச்சிகள் உருவாக ஆரம்பித்துள்ளன.

கடந்த பத்து ஆண்டுகளில் நாம் நாட்டை சரியான பாதை யில் கொண்டு சென்றுள்ளோம். தேசிய பாதுகாப்பை சரியான வகையில் பலப்படுத்தியுள் ளோம்.

ஆனால் இந்த ஏழு மாத காலத்தில் நாடு மிகவும் மோ சமான நிலைக்கு தள்ளப்பட்டுள் ளது. நாம் இந்த நாட்டில் ஆயுத கலாசாரத்தை முழுமையாக தடுத்திருந்தோம்.

அனைத்துலக புலிகள் அமைப்புகளை இலங்கை விடயங்களில் தலையிடவிடாது தடுத்திருந்தோம். ஆனால் இப்போது நிலைமை தலை கீழாக மாறியுள்ளது.

மீண்டும் நாட்டில் ஆயுத கலாசாரம் தலைதூக்க ஆரம் பித்துள்ளது. தமிழ்ப் புலிகள் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள ளனர். எமது கட்டுப்பாட்டில் எவ்வாறு நாடு இருந்ததோ அதே நிலைமை மீண்டும் உருவாக வேண்டும். வடக்கை எமது கட்டுபாட்டுக்குள் கொண்டு வந்து புலிகளின் தலையீட்டை முழுமையாக அழிக்க வேண்டும்.

போரின் மூலம் பிரபாகரன் அடைய நினைத்ததை இன்று அரசியல் சாணக்கியத்தின் மூலமாக அடைய முயற்சித்து வருகின்றனர். நாட்டை பிரிக்கும் வேலைத்திட்டத்தில் நெருங்கி விட்டனர்.

அவை அனைத்தையும் கட்டுப்படுத்த வேண்டும். நாட்டில் மீண்டும் ஜனநாயகத்தை உரு வாக்க வேண்டும்.

மக்கள் உண்மையான ஜனநா யகத்தை உருவாக்க வேண்டு மென்றால் நாட்டின் சிங்கள மக்கள் அனைவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

# டிலானின் பாதாள உலககூற்று விசாரணைக்கு ஜோன் உத்தரவு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் ஊடகப் பேச்சாளர் டிலான் பெரேராவின் கூற்று தொடர்பில் விசாரணை நடத்துமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க உத்தரவிட் டுள்ளார்.

அண்மையில் புளூமெண்டல் வீதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் டிலான் பெரேரா கருத்து வெளி யிட்டிருந்தார்.

நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்கவின் தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்தது.

இந்த தாக்குதலில் இரண்டு பேர் கொல்லப்பட்டதுடன் 12 பேர் காயமடைந்திருந்தனர்.

இந்த மோதல் சம்பவம் இரண்டு பாதாள உலகக் குழுக களுக்கு இடையில் இடம்பெற்ற மோதல் என டிலான் பெரேரா தெரிவித்திருந்தார்.

இந்த கூற்று தொடர்பில் டிலானிடம் வாக்கு மூல மொன்றை பதிவு செய்யுமாறு அமைச்சர் ஜோன் அமரதுங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

# ரக்பி வீரரின் சடலம் நாளை தோண்டியெடுப்பு?



பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜு டீனின் சடலம், நாளை புதன் கிழமை தோண்டி எடுக்கப்ப டவுள்ளதாக பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், குறித்த சடலம் புதைக்கப்பட்டுள்ள தெஹிவளை முஸ்லிம் மயானத்துக்கு சிறப்பு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட் டுள்ளது.

வசீம் தஜுடீனின் உயிரிழப்பு விபத்து அல்லவெனவும், அது படுகொலை எனவும் இரகசிய பொலிஸார், கொழும்பு மேல் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித் திருந்தனர்.

இந்நிலைய்யில், விசாரணைக ளுக்காக சடலத்தை தோண்டி எடுக்கவேண்டியுள்ளதால் தெஹி வளை - களுபோவில பள்ளிவா சல் வீதியில் மேற்படி மயானத் துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2012ஆம் ஆண்டு நாரஹென்பிட்டி மைதான வீதியில் தீப்பிடித்து எரிந்த காரொன்றுக்குள் இருந்து வசீமின் சடலம் மீட்கப்பட்டது.

இந்த மரணம், திடீர் விபத் தின் மூலம் ஏற்பட்டதல்ல என பொலிஸார், ஏற்கனவே நீதிமன் றத்தில் அறிவித்திருந்தனர்.

மேலும், வசீமின் பற்கள் மற்றும் விலா எலும்புகள் உடைக் கப்பட்டு சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டே அவர் படு கொலை செய்யப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் அறிவிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
(தேர்தல் மாவட்டம்—வன்னி)




சுந்தரம் குமாரசாமி




ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


# தேர்தல் வன்முறை முன்னாள் எம்.பி.கைது



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் வசந்த பெரேரா, நேற்றுக் காலை மாத்தளை பொலிஸா ரால் கைதுசெய்யப்பட்டார்.

முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட வேட்பாள ருமான மகிந்த ராஜபக்ஷ தலை மையில் அண்மையில் மாத்தளை யில் நடைபெற்ற தேர்தல் பிரசா ரக் கூட்டமொன்றில், ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளரை இவர் தாக்கியதாக குற்றஞ்சாட் டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மாத்தளை பொலிஸில் முறைப்பாடும் பதிவுசெய்யப்பட்டது.

இதனையடுத்து நேற்றுக் காலை மாத்தளை பொலிஸில் லக்ஷ்மன் வசந்த பெரேரா சரண டைந்த நிலையில், பொலி ஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## அரச வைத்தியசாலைகளின்
# கிளினிக்கல் கழிவுகளை அகற்ற அவுஸ்ரேலிய அரசாங்கம் உதவி

அரச வைத்தியசாலைகளில் கிளினிக்கல் கழிவுகளை முறை யாக அகற்றுவதற்கு அவுஸ்ரே லிய அரசாங்கம் முன்வந்துள் ளது.

இவ்வாறு முறையற்ற விதத்தில் அகற்றப்படும் கழிவுகளால் தொற்றுநோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளது.

நாட்டில் உள்ள அரச வைத் தியசாலைகளிலுள்ள கழிவு களை அகற்றுவது அந்தந்த பகுதிகளுக்கு பொறுப்பான தேசிய மாகாண அரசுகளே பொறுப்பாகும். ஆனால் தற் போது வைத்தியசாலைக ளிலிருந்து அகற்றப்படும் கழிவ கற்றல் முறையானது பொதுமக் கள் மத்தியில் தொற்றுநோய் களை ஏற்படுத்தும் வகையில் பாதுகாப்பற்றதாகக் காணப்படு கின்றது.

இதனை நிவர்த்தி செய்து குறித்த கழிவகற்றும் செயன் முறையை அவுஸ்ரேலிய அரசின் உதவியுடன் மேற்கொள்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

03. தென்னை : குரும்பை போல, பனை:
1) பழம் 2) சுளை 3) நுங்கு 4) சதையம்

04. யானை : பிளிறும், ஆந்தை:
1) கத்தும் 2) இரையும் 3) அலரும் 4) கூவும்

(11) 01ஆம், 02ஆம் வினாக்களில் கருத்து பிழையுள்ள வாக்கியங்கள் கொண்ட விடையின் கீழ் கோடிடுக

01. 1) இலங்கையிலுள்ள நதிகளில் மிக நீளமானது மகாவலி கங்கை
2) புராதன இலங்கையின் தலை நகரங்களில் பொலநறுவையும் ஒன்று
3) நாய்,பூனை,காகம் போன்றவை அனைத்துமுண்ணிகளாகும்
4) மண்ணெண்ணை, டீசல், பெற்றோல் போன்றவை இலங்கையில் பெறப்படும்

02. 1) வாழை ஒரு மரமாகும் இது இலங்கையில் பயிரிடப்படுகிறது
2) மனிதனுக்கு கேளாத சில சத்தங்கள் கூட நாய்க்கு கேட்கும் ஆற்றல் உள்ளது
3) வௌவால் ஒரு முலையூட்டி, இவை இரவு வேளையில் உணவு தேடி அலையும்
4) பாகற்காய், குறிஞ்சா இலை, திராய் போன்றவை கசப்பு சுவையுடையவை

(12) கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்க

கடந்த வருடம் நடைபெற்ற தவணைப்பரீட்சையில் கணித பாடத்தில் கலா மாலாவை விட 5 புள்ளிகள் குறைவாகப் பெற்றாள். எனினும் கமலாவை விட 15 புள்ளிகள் கூடுதலாகப் பெற்றாள். கமலா, விமலாவை விட 10 புள்ளிகள் குறைவாகப் பெற்றாள். விமலா கணித பாடத்தில் பெற்ற புள்ளிகள் 75 ஆகும் இத்தகவல்களைப் பயன்படுத்தி 01, 02 ஆகிய வினாக்களுக்கு விடை தருக?

01. கணித பாடத்தில் கலா பெற்ற புள்ளிகள் எத்தனை?
1) 65
2) 70
3) 75
4) 80

02. மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் மாணவர்களை ஏறுவரிசைப்படுத்தினால் சரியான விடை எது?
1) கமலா, மாலா, கலா, விமலா
2) மாலா, விமலா, கமலா, கலா
3) மாலா, கமலா, விமலா, கலா
4) கமலா, கலா, விமலா. மாலா

(13) பின்வரும் உரைப்பந்தியை வாசித்து ஒரு தனிச்சொல்லில் சரியான விடையை எழுதுங்கள்

01. விமலன் ஊரிலுள்ள சகலருக்கும் தன்னாலான் உதவிகளை செய்து வந்தான். இதனால் இவனை .................... என அழைக்கலாம்

02. ரோஜா, நாய், பூனை போன்ற விலங்குகளின் மீது அளவற்ற அன்பு காட்டுவாள். அத்தோடு தெருவிலுள்ள அநாதரவான விலங்குகள், பறவைகள் போன்றவற்றை பாதுகாக்க உதவுவாள். இவள் வாயில்லாத ஜீவன்கள் மீது காட்டும் பரிவை .................... என அழைப்போம்

நேற்று பிரசுரமாகிய வினாக்களுக்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (01) 01. 3 | | 02. 2 | 03. 2 | (02) 01. 3 | 02. 3 | (03) 01. 2 |
| 02. 2 | 03. 1 | 04. 2 | 05. 3 | 06. 2 | 07. 3 | 08. 1 |
| 09. 3 | 10. 2 | 11. 1 | 12. 3 | 13. 2 | 14. 1 | (04) 01. 1 |
| 02. 2 | 03. 1 | 04. 2 | 05. 3 | 06. 3 | 07. 2 | 08. 3 |
| 09. 2 | 10. 1 | (05) 01. உபாயம் | | 02. மணியோசை | | 03. ஓநாயோ |
| (06) 01. II | | 02. I | 03. I | (07) 01. 1 | | 02. 3 |
| 03. 1 | | | | | | |

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - II
1 மணி 15 நிமிடம்



# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

(01) பின்வரும் பாடலை வாசித்து விடை எழுதுக

கண்ணே எழுந்திடுவாய்
கண்மணியே கண்மலர்வாய்
சின்னஞ்சிறு மலரே
துயில் நீங்கி நீ எழுவாய்
கிழக்கு வெளுக்குது பார்
கீழ்வானம் சிவக்குது பார்
காகம் கரையுது பார்
பூக்கள் மலர்ந்தன பார்
காலையும் ஆனது பார்
புது மணம் வீசுது பார்
சேவல் கூவுது பார்
சின்னக்குயில் பாடுது பார்

இப்பாடலைக் கொண்டு 01 இலிருந்து 10 வரையான வினாக்களுக்கு விடை தருக

01. காலை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக? ....................
02. மலர்ந்தன என்பதன் ஒருமைச்சொல்லை எழுதுக? ....................
03. புதுமணம் வீசுது பார் என்ற வசனத்தில் எதனால் புதுமணம் வீசியது? ....................
04. இப்பாடலிலுள்ள எழுவாய் அடைமொழிகள் இரண்டை தருக? ....................
05. இப்பாடலில் அஃறிணை, படர்க்கைப்பெயர்ச்சொற்கள் மூன்றை எழுதுக? ....................
06. துயில் என்பதற்கு பதிலாக பயன்படுத்தக்கூடிய சொல் ஒன்றை தருக? ....................
07. அஃறிணை, பன்மைப்பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக? ....................
08. கவிஞர் இப்பாடலில் விபரிக்கும் நிகழ்ச்சி எது? ....................
09. பூக்கள் மலர்ந்தன பார் என்பதனை ஒருமையில் எழுதுக? ....................

(02) சொற்களை ஒழுங்காக்கி கருத்துள்ள வசனம் ஒன்றினை ஆக்குக

01. வள்ளல் / கொடுக்கும் / பாரி / இல்லையொன்னாது / இரப்போர்க்கு
....................

02. வெள்ளப்பெருக்கு ; பெய்த ; மின்னலுடன் ; ஏற்பட்டது ; மழையினால்
....................

(03) பின்வரும் தொடர்களினால் வெளிப்படுத்தும் கருத்தை ஒரு சொல்லில் எழுதுக

01. எதிர்கால நிகழ்வுகளை அறியும் ஆற்றலுடையவன்
02. தானும் உண்ணாது பிறருக்கு கொடுக்காது சேர்த்து வைப்பவன்

(04) வெற்றிடத்திற்குப் பொருத்தமான மிகச்சரியான சொல்லின் கீழ் கோடிடுக

01. மத்திய மலைநாட்டில் தேயிலை .................... வளரும்
( செலித்து / செளித்த / செழித்து)

02. .................... உலகில் பலரால் விரும்பிப் பருகும் பானம்
( தேனீர் / தேநீர் / தேணீர் / தேயிலை நீர்)

03. .................... ஊருக்கு இலுப்பைப்பூ சக்கரையாம்
( ஆலையில்லாத / ஆளையில்லாத / ஆழையில்லாத

**(05) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பிற்குள் இருந்து தெரிவு செய்க**

01. We buy .................................... from the market
(medicine, Books,stamps, Vegetable)

**(06) கருத்தை தமிழில் எழுதுக**

01. Good night
..............................................................................

02. Thank you very much
..............................................................................

03. Plese be silent
..............................................................................

**(07) 01 தொடக்கம் 12 வரையுள்ள வினாக்களின் சரியான விடையின் கீழ் கோடிடுக**

01. மார்கழி மாதத்தில் பூக்கும் பூ எது?
1) சூரியகாந்தி 2) திருக்கொன்றை 3) ரோசா 4) தாழம்பூ

02. மாலை வேளையில் இலைகள் சுருங்கிக் காணப்படும் தாவரம் எது?
1) பலா 2) கொய்யா 3) அகத்தி 4) திராட்சை

03. வீட்டுத்தோட்டப் பயிருக்கு தீங்குவிளைவிக்கும் பூச்சிகளை பிடித்து உண்ணும் பிராணி எது?
1) லேடிபோட்வண்டு 2) தேனீ 3) தண்டுகோதி 4) நத்தை

04. இலங்கைக்கு மட்டுமே உரித்தான விலங்கு எது?
1) யானை 2) சருகுமான் 3) காட்டுக்கோழி 4) ஆமை

05. கிராமப்புறங்களில் வாழும் மக்கள் நுளம்புகளை விரட்டுவதற்கு புகையூட்டும் பொருள் எது?
1) உரிமட்டை 2) வேம்புஇலை 3) மரத்தூள் 4) நுளம்புச்சுருள்

06. கரைவலை மூலம் மீன் பிடிக்கும் போது மீன்கள் வலையில் சேரும் இடம் எவ்வாறு அழைக்கப்படும்?
1) அத்தாங்கு 2) மீன்மூலை 3) மடி 4) கொல்லா

07. பாடசாலை பரிசளிப்பு வைபவத்தின் போது தேசியக்கொடியை ஏற்றிய பின் இசைக்கப்படும் பாடல்
1) பாடசாலை கீதம் 2) தேசிய கீதம்
3) தமிழ்மொழி வாழ்த்து 4) கடவுள்வாழ்த்து

08. உலோக பாத்திரங்களை துப்புரவாக்கி மினுக்குவதற்கு உதவும் பதார்த்தம் எது?
1) சவர்க்காரம் 2) தேயிலை சக்கை
3) பிழிந்த தேங்காய்ப்பூ 4) புளியம்பழம்

09. கடைகளில் விற்கும் ஈ மொய்த்த தின்பண்டங்களை வாங்கி உண்பதால் ஏற்படும் நோய்?
1) குடற்புழு 2) டெங்கு 3) வயிற்றுளைவு 4) அம்மைநோய்

10. பாம்பு தீண்டிய ஒருவருக்கு உடனடியாக செய்ய வேண்டிய முதலுதவி எது?
1) உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லல்
2) காயத்தை சவர்க்காரத்தினால் நன்றாகக் கழுவுதல்
3) காயத்திற்கு உடனே மருந்து கட்டுதல்
4) மிளகை கடிக்கக் கொடுத்தல்

11. இலங்கையில் முதன் முதலில் தேசியகீதம் இசைத்த வருடம் எது?
1) 1945 2) 1947 3) 1972 4) 1978

12. இலங்கையை முதன்முதலில் கைப்பற்றி ஆட்சிபுரிந்த அன்னியதேசத்தவர் யார்?
1) இந்தியர் 2) போர்த்துக்கீசர் 3) ஒல்லாந்தர் 4) ஆங்கிலேயர்

**(08) பொருத்தமான விடையை எழுதுக**

01. 3 லீற்றர் பாத்திரமொன்றை 125மில்லிலீற்றர் பாத்திரத்தின் மூலம் நிரப்புவதற்கு எத்தனை தடவை நீரை ஊற்ற வேண்டும்?
..............................................................................



02. ஒரு ஆடை தைக்கும் தொழிலாளி 60 நிமிடங்களில் 12 ஆடைகள் தைப்பான். இத்தொழிலாளி $2\frac{1}{2}$ மணித்தியாலத்தில் எத்தனை ஆடைகளைத் தைப்பான்?
..............................................................................

03. 4m நீளமுள்ள கம்பியிலிருந்து 20cm நீளமுடைய எத்தனை துண்டுகள் வெட்டலாம்?
..............................................................................

04. ஒரு போத்தல் 2L 250ml திரவத்தைக் கொண்டது. இவ்வாறான 4 போத்தல்களின் கனவளவு எவ்வளவு?
..............................................................................

05. ஒவ்வொன்றும் 100g நிறையுடைய 25 தேயிலைப் பைக்கற்றுக்களை 500g நிறையுடைய அட்டைப் பெட்டியினுள் அடைக்கப்பட்டிருப்பின் பெட்டியின் மொத்த நிறை எவ்வளவு?
..............................................................................

06. அனுலா 1000 ரூபா பணத்தை வைத்துள்ளாள் அதில் 75.00 ரூபாவை தம்பிக்கு கொடுத்தாள் இருவரிடமுள்ள பணத்தொகை சமமாகும் எனின் தம்பியிடம் இருந்த பணத்தொகை எவ்வளவு?
..............................................................................

07. சனுஜனிடமுள்ள பணத்தொகை 500ரூபா ஆகும் அவன் 1/2 பங்கை சிற்றுண்டிக்காகவும், மீதியைப் புத்தகம் வாங்கவும் செலவிட்டான். அவன் புத்தகம் வாங்க செலவிட்ட பணம் எவ்வளவு?
..............................................................................

08. வீட்டுத்தோட்டத்திலுள்ள செடிகள் பற்றிய தகவல்கள்
பூஞ்செடிகள் - 22 பூஞ்செடிகள் அல்லாதவை - 12
ரோசாச் செடிகள் - 08 மிளகாய்ச் செடிகள் - 06
வீட்டுத்தோட்டத்திலுள்ள செடிகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு? ..............................

**(09) பின்வரும் பந்தியை வாசிக்க**

மாகாண மட்டத்தில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் நீங்கள் முதலாமிடத்தை பெற்றுக்கொண்ட போது உங்கள் ஆசிரியர், அதிபர், மாகாண மட்டக்கல்வி அதிகாரிகள், வாழ்த்துக்களை தெரிவித்த வேளை உங்கள் மனதில் ஏற்படும் உணர்வுகளை வெளிக்காட்டும் ஆக்கபூர்வமான ஆறு வாக்கியங்கள் எழுதுக (ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களேனும் இடம்பெற வேண்டும் இவ்வாக்கியங்களின் இலக்கணத்தொடர்பு சரியாக இருக்க வேண்டும்)

01. ..............................................................................
02. ..............................................................................
03. ..............................................................................
04. ..............................................................................
05. ..............................................................................
06. ..............................................................................

**(10) சரியான விடையின் கீழ் கோடிடுக**

01. இலங்கையில் அண்மைக்காலமாக நீண்ட காலம் வறட்சி ஏற்படுகின்றது சில காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது இவ்வாறான பருவகால மாற்றங்களுக்கு பிரதானமான காரணம் எதுவாக இருக்கக்கூடும்?
1) உலகளாவிய ரீதியில் மாற்றம் ஏற்பட்டமை
2) உரிய காலத்தில் மழை பெய்யாது விடுதல்
3) மனிதன் காடுகளை கண்மூடித்தனமாக அழித்தமை
4) அடிக்கடி இயற்கை அனர்த்தங்களை ஏற்பட்டமை

02. "தினை விதைத்தவன் தினை அறுப்பான் வினை விதைத்தவனின் வினை அறுப்பான்"என்பதன் கருத்தை விளக்கும் கூற்று
1) ஒருவர் முயற்சி செய்தால் நற்பயனை அடையலாம்
2) ஒருவர் எந்த விதையை விதைக்கின்றாரோ, அந்த விதையின் பயனே கிடைக்கும்
3) ஒருவர் தான் செய்த செயலின் பயனை அனுபவிப்பார்
4) ஒருவர் பாவம் செய்தால், அவர் தண்டனை அனுபவிப்பார்

# தேர்தல் களம் 2015

## தம் குடும்பங்களை வெளிநாட்டுக்கு அனுப்பி உள்ளூரில் ஏழை மக்கள் மீது சவாரி!

### தமிழ்க் கூட்டமைப்பு மீது வலி.கிழக்கு அமைப்பாளர் சாடல்



வெளிநாடுகளுக்கு தமது குடும்பங்களை அனுப்பி வைத்திருக்கும் தமிழ் கூட்டமைப்பு தமக்கு வாக்களிக்கும் ஏழைகள் முதுகில் சவாரி செய்வதாக ஈ.பி.டி.பி.யின் வலி.கிழக்கு அமைப்பாளர் இ.ஐங்கரன் தெரிவித்தார்.

இம்முறை பொதுத்தேர்தலில வேட்பாளராகக் களமிறங்கியுள்ள அமைப்பாளர் ஐங்கரன் புத்தூர், நவக்கிரி, சரஸ்வதி. முன்பள்ளி மழலைகளின் வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த காலங்களில் இடம் பெற்ற யுத்த சூழ் நிலையில் எமது தமிழ் மக்கள் உணவின்றி தவித்த பொழுது அம்மக்களிற்கு உணவுப்பொருட்கள் கிடைப்பதற்கு உதவி செய்தவாகள் யார்? எமது தலைவர் டக்ளஸ் தேவானந்தா தான் என்பதுடன், வடக்கில் இடம் பெற்ற பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியதும் எமது தலைவர் டக்ளஸ் தேவானந்தா தான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, வேறு கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி கடந்த கால யுத்த சூழ்நிலையில் மக்களாகிய நீங்கள் உங்களுடைய உயிர்களை கையில் பிடித்துக் கொண்டு வாழ்ந்த பொழுது உங்களுடன் இருந்து உங்களுடைய துன்ப துயரங்களில் பங்கெடுத்தவர்கள் யார்? ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ,பி.டி.பி)யினராகிய நாங்களும், அதன் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும் தான். ஏனையவர்கள் வெளிநாடுகளிற்கு சென்று விட்டு யுத்தம் நிறைவடைந்தவுடன் இங்கு வந்து அரசியல் பேசுகின்றார்கள் எந்த நிமிடமும் எங்களுடைய உயிர்கள் போகலாம் என்ற சூழ்நிலையிலும் மக்களிற்காக உழைத்தவர்கள் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ,பி.டி.பி) யினராகிய நாங்களும் அதன் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும் தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. தங்களுடைய குடும்பங்களை வெளிநாடுகளில் வாழ அனுப்பி வைத்து விட்டு இங்கு வந்து எமது துன்பப்பட்ட மக்கள மீது ஏறிச்சவாரி விடுவதற்கு எத்தனிக்கின்றார்கள் இவர்கள் தங்களுடைய குடும்பங்களை ஏன் வெளிநாடுகளில் தங்க வைத்திருக்கின்றார்கள்? அவர்களை ஏன் இங்கு அழைத்து வரவில்லை? என்ற கேள்வியினை நீங்கள் அவர்களிடம் கேட்க வேண்டும் ஆனாலும் அவர்கள் தங்களுடைய குடும்பங்களை இங்கு அழைத்து வரமாட்டார்கள் ஏன் என்றால் அவர்கள் இங்கு வந்து துன்பப் படுவதை இவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் ஆனால் எங்களுடைய தலைவர் டக்ளஸ் தேவானந்தா மக்களுடைய பலத்தில் மக்கள் மீது உள்ள நம்பிக்கையில் மக்களோடு மக்களாக மக்கள் மத்தியில் வாழ்ந்து கொணடிருக்கின்றார். ஏனைய அரசியல் வாதிகளைப் போல சர்வதேசத்தையும், புலம் பெயர்ந்தவர்களையும் நம்பி இருக்க வில்லை. அவர் எமது தமிழ் மக்கள் மீது வைத்திருக்கும் உணர்வு பூர்வ நம்பிக்கையுடனான எதிர்பார்ப்புடனே நாம் இத்தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

ஆகவே நீங்கள் அனைவரும் இம்முறை மாற்றத்திற்காக அணிதிரண்டு வீணைச் சின்னத்திற்கு வாக்களித்து உங்களுடைய முதலாவது விருப்பு வாக்கினை எமது தலைவரும்,டக்ளஸ் தேவானந்தா விருப்பு இலக்கமான 4 இற்கும், இரண்டாவது விருப்பு வாக்கினை முன்னாள், நாடாளுமன்ற உறுப்பினரும், வலிகாமம் கிழக்கு பிரதேசத்தின் முன்னாள் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமாகிய சில்வேஸ்திரி அலன்றின(உதயன்) இலக்கமான 8, இற்கும், மூன்றாவது விருப்பு வாக்கினை உங்கள் ஐங்கரன் ஆகிய எனது இலக்கம் 2 இற்கும், புள்ளடி இட்டு அதி கூடிய விருப்பு வாக்குக்களால் எம்மை வெற்றி பெற வைத்து உங்களுடைய எதிர் கால வாழ்க்கையினை ஒரு சந்தோசமான வாழ்க்கையாக மாற்றுவதற்கு அனைவரையும் அணி திரண்டு வருமாறும் அவர் மேலும் கேட்டுக் கொண்டார்.

## ஆட்சிகள் மாறியும் உழைப்பாளிகள் வாழ்வில் மாற்றங்கள் உருவாகவில்லை

### உரும்பிராய் வடக்கில் பசுபதி சீவரத்தினம்



மக்கள் மனங்களில் மாற்றங்கள் உருவாகி ஆட்சிகள் மாறிய போதிலும் உழைக்கும் மக்களின் வாழ்வில் மாற்றங்களை காண முடியாதிருப்பதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பசுபதி சீவரத்தினம் (கி.பி) தெரிவித்தார்.

இம் முறை பொதுத் தேர்தலை முன்னிட்டு உரும்பிராய் வடக்கில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போர்ச் சூழலுக்கு முன்னரும் அதன் பின்னரும் சரி நடைபெறும தேர்தல்களின் போதெல்லாம் ஏழை மக்கள் எப்பொழுதுமே ஏமாற்றப்பட்டு வரும் நிலமைகளை கவனத்தில் எடுத்து உரையாற்றிய வேட்பாளர் பசுபதி சீவரத்தினம் மேலும் தனது உரையில்,

பணம் படைத்தவன் தான் பதவிக்கதிரைகளில் அமர்வதும் மாற்றங்களூடாக கிடைக்கும் நற்பயன்களை அனுபவிப்பதையுமே காணக்கூடியதாகவுள்ளது.

இந்த நாட்டிலுள்ள அனைவரும் உண்பதற்கு உணவையும் குடிப்பதற்கு நீரையும் பெற்றுத் தருபவர்கள் விவசாயிகள், கிராமிய உழைப்பாளர்கள் ஆவார்கள். இது மட்டுமல்லாது, இந் நாட்டின் உயர் அரசியல் பீடமான நாடாளுமன்றத்தின் ஆசனங்களை தீர்மானிப்பவர்களில் முக்கிய பங்கை வகிப்பவர்களும் இவர்களே.


ஆனால் இவர்கள் தேர்தல் காலத்தில் ஆளும் வர்க்கத்தின் ஆசை வார்த்தைகளுக்கு மயங்கியும், உணர்ச்சி வசப்படும் பேச்சுக்களில் தம்மை மறந்தும், தம்மை ஆளும் எஜமானர்களையே நாடாளுமன்றத்திற்கு அனுப்புகின்றனர். இதனால் தான் தமது வாழ்க்கையில் துன்பங்களை மட்டும் அனுபவிக்கின்றனர்.

எனவே கடந்த காலங்களில் விட்ட தவறுகளை மீண்டும் மீண்டும் செய்யாமல், தற்போது கிடைததுள்ள அரிய சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உறவுக்கு கைகொடுத்து உரிமைக்கு குரல் கொடுக்கும் மக்கள் நாயகன் டக்ளஸ் தேவானந்தா உழைக்கும் மக்களுக்கு அளித்த உயர் கௌரவத்தை மதித்து வீணைச் சின்னத்திற்கும், தேவாவின் இலக்கம் 4 இற்கும் எனது இலக்கம் 6 இற்கும் வாக்களிக்குமாறு வேண்டுவதுடன் தமிழ்த் தேசியம் பேசிப் பேசி தங்கள் குடும்ப நலன்களையே கவனிக்கும் கூட்டமைப்பினரின் போலி வேடங்களுக்கும், கபடத் தனங்களுக்கும் அடிபணிந்து போகாமல் நிதானமாகச் செயற்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## எதையாவது உருப்படியாக செய்ய தமிழ்க் கூட்டமைப்புக்கு முடிந்ததா?

### வேட்பாளர் சொல்லின் செல்வர் கேள்வி



வடக்கு மாகாண சபையை கைப்பற்றியதிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் உருப்படியாக எதையாவது தமிழ் மக்களுக்காக செய்ய முடிந்ததா என சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்.விளான் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய சொல்லின் செல்வர் மேலும் தனது உரையில் கூறியதாவது,

தமிழ்க் கூட்டமைப்பினரும் இதர தமிழ் உதிரிக் கட்சிகளும் எங்களுக்கு நாடாளுமன்ற ஆசனங்களைத் தாருங்கள் நாங்கள் அப்படிச் செய்வோம். இப்படிச் செய்வோம் என ஊளையிடுகின்றார்கள்.

நான் கேட்கிறேன் எதிர்ப்பு அரசியல் என்பது உங்களின் இரத்தத்தில் ஊறியது. உங்கள் துண்டுப்பிரசுரத்தில் விடப்பட்ட வெற்றுவேட்டு வசனங்களை எல்லாம் எப்படி மக்களுக்கு செய்வீர்கள் அரசாங்கம் மக்களுக்காகக் கொடுத்த நிதியையே சுருட்டியவர்கள் நீங்கள் அதனை விட மத்திய அரசாங்கத்துடன் இணைய மாட்டோம் என்று வேறு சொல்கின்றீர்கள். ஆகவே மக்கள நலன் சார்ந்த திட்டங்களை அமுல் படுத்த யாரைப் பிடித்து நிதி எடுப்பீர்கள்? உங்கள் சொத்துக்களை விற்பீர்களா? கொழும்பு வீடுகளை விற்பீர்களா? கோடிக் கணக்கான பெறுமதி வாய்ந்த உங்கள் சொந்த வாகனங்களை அடகு வைப்பீர்களா? தமிழ் பேசும் ஏழை மக்களின் சார்பாகக் கேட்கிறேன் சொல்லுங்கள் உங்கள் வாக்குறுதிகள் எல்லாம் வெறும் துண் டுப்பிரசுர கதை வசனங்கள் எப்படி உங்கள் துண்டுப்பிரசுரங்கள் யாழ். மாவட்டத்தில் தெருத்தெருவாகக் கிடக்கின்றதோ அதே போல மக்கள் யாவரும் உங்களுக்கு ஆகஸ்ட் 17 ஆம் திகதி பாடம் புகட்டுவார்கள் மக்களுக்குத் தெரியும் தமக்காக வாழ்பவர்கள் யார் தம்மை வைத்து அரசியல் கடை நடாத்துபவர்கள் யார் என்று. மத்தியில் பல அரசுகளை மாறி மாறிகண்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அரசியல் இலக்கு என்பது ஆல விருட்சம் போன்றது அது எப்பொழுதும் பலமாக வளர்ச்சி பெற்று மக்களுக்கு நிழல் தரும் அபூர்வ விருட்சம்.

எனது இரத்த உறவுகளே! ஏழை மக்களாகிய உங்களை வளமாக வாழ வைக்க நாங்கள் இருக்கின்றோம். எங்கள் தலைவன் டக்ளஸ் தேவானந்தா மீட்டும் வீணை உங்கள் வாழ்வில் புதிய அத்தியாயத்தினை எழுதும் என்பதில் மாற்றமில்லை.

எமக்கு உங்கள் ஆதரவினை வீணைச் சின்னத்திற்கு வாக்களிப்பதன் மூலம் தந்து உங்கள் வாழ்வை வளமாக்குங்கள்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
(தேர்தல் மாவட்டம் - வன்னி)






X | 8

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
யாழ்.கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில்
போட்டியிடும் ஈ.பி.டி.பி. வேட்பாளர்களை
வெற்றி பெறச் செய்வோம்!
X 4
சில்வேஸ்திரி அலென்றின்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
8
ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்
(வடமராட்சி ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)
1
டக்ளஸ் தேவானந்தா
(செயலாளர் நாயகம் - ஈ.பி.டி.பி.)
முதன்மை வேட்பாளர்
இராமநாதன் ஐங்கரன்
(வலிகாமம் கிழக்கு ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)
2
முருகேசு சந்திரகுமார்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
7
பசுபதி சீவரத்தினம்
(ஈ.பி.டி.பி. தேசிய அமைப்பாளர்)
6
'சொல்லின் செல்வர்'
இரா.செல்வவடிவேல்
3
திருமதி.யோகேஸ்வரி பற்குணராஜா
(யாழ்.மாநகர முன்னாள் முதல்வர்)
5
சிவகுரு பாலகிருஸ்ணன்
(வலிகாமம் மேற்கு ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)
9
(தென்மராட்சி ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)
10
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

# ஆயுதங்களுடன் தெற்கில் 6 பேர் கைது

(கொழும்பு)

மாளிகாவத்தை இந்ரம் சந்திக்கு அருகில் சந்தேகத்திற்கு இடமான டிபென்டர் வாகனத்துடன் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பிற்குள் வரும் வாகனங்கள் நேற்று அதிகாலை மாளிகாவத்தை பொலிஸாரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

சந்தேகத்திற்கு இடமான டிபென்டர் வாகனத்தில் கத்தி உள்ளிட்ட ஆயுதங்கள் சில மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்கள் ராகம, அங்குருவாதொட்ட, நாகொல்லாகம, காலி, மற்றும் தெஹியத்தகண்டிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் தொடர்பில் மாளிகாவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பொருளாதார...

காலப்பகுதியில் ஆனையிறவு உப்ப ளத்தை மீள இயக்கும் வகையிலான செயற்திட் டங்களை முன்னெடுத்திருந்த அதேவேளை, பரந்தன் இரசாயன தொழிற்சாலையையும் இயங்க வைப்பதற் கான திட்டங்களையும் வகுத்திருந்தோம்.

இந்நிலையில், ஆட்சிமாற்றத்தினால் குறித்த செயற்திட்டங்களை என்னால் தொடர்ச்சியாக முன் னெடுக்க முடியாமல் போனமை துரதிஸ்டவசமே. இவ்வாறாக இத்தொழிற்சாலைகள் இயங்கும் பட்சத் தில் வேலைவாய்ப்பற்றிருக்கும் பெருமளவிலான இளைஞர், யுவதிகள் உள்ளிட்டோருக்கு வேலை வாய்ப்பினை பெற்றுக் கொடுக்கக் கூடியதாக அமைந்திருக்கும்.

இருந்தபோதிலும் மக்கள் எமக்கான அரசியல் பலத்தை வழங்கும் பட்சத்தில் ஆனையிறவு உப்பளம் மற்றும் பரந்தன் இரசாயன தொழிற்சாலை ஆகியவற்றை புதுப்பொலிவுடன் மீளமைத்து இயங்க வைக்க உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும். கடந்த காலங்களில் கோர யுத்தத்தினால் எமது மக்கள் பல்வேறுபட்ட அழிவுகளுக்கும் துயரங்களுக்கும் முகம் கொடுத்தது மட்டுமன்றி தமது இயல்பு வாழ்வையும் தொலைத்திருந்தனர். ஆனாலும் மக்களை ஏமாற்றியும் உசுப்பேற்றியும் வாக்குகளை அபகரிக்கும் சுயலாப அரசியல்வாதிகள் தமது சுயலாபங்களுக்காக தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் தான் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் மக்களைப் பாதுகாத்துக் கொள்ளும் அதேவேளை, அபிவிருத்தியில் மட்டுமல்லாது வாழ்வாதாரத்திலும், பொருளாதாரத்திலும் முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வதே எமது நிலைப்பாடர்குமென்றும் சுட்டிக்காட்டினார்.

## படை.....

இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார். பிரிகேடியர் மற்றும் அதற்கு மேற்பட்ட பதவி நிலைகளில் உள்ள அதிகாரிகள் தமது அதிகாரபூர்வ வாகனங்களிலோ. வாகனத்தொடரணியிலோ பொதுமக்கள் பயன்படுத்தும் இலக்கத்தகடுகளைப் பயன்படுத்தக் கூடாது.

குறிப்பிட்ட அதிகாரிகள் தமது வதிவிடத்தை அடைந்த பின்னர், தமது வாகனத்தை அருகிலுள்ள இராணுவ முகாமுக்கு திருப்பி அனுப்ப வேண்டும். அருகில் இராணுவ முகாம் எதுவும் இல்லாது போனால், பொலிஸ் நிலையத்தில் குறிப்பிட்ட வாகனத்தை நிறுத்த வேண்டும் என்றும் இராணுவத் தளபதி உத்தரவிட்டுள்ளார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



செ.ஸ்ரீராமச்சந்திரதாஸ்



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெளியுறவுக் கொள்ளை என்ன?

## தயான் தருகிறார் விளக்கம்

17ஆம் திகதி நடக்கவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்று ஆட்சியமைத்தால், அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கையில் முக்கியமானதொரு மைல் கல்லாக இந்தியாவுடனான உறவுகள் அமைந்திருக்கும் என்று கலாநிதி தயான் ஜெயதிலக தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெளிவீவகாரக் கொள்கை ஆலோசகராக அண்மையில் பொறுப்பேற்றுள்ள கலாநிதி தயான் ஜெயத்திலக, வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சந்திப்பு ஒன்றிலேயே இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

ஜனவரி 8 ஆம் திகதி நடந்த ஜனாதிபதித் தேரதலில் எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிடம் தோல்வியுற்ற மகிந்த ராஜபக்ஷ, தனது படிப்பினைகளில் இருந்து பாடம் கற்றுக் கொண்டிருக்கிறார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெளிவிவகாரக் கொள்கை மையத்தில் இருந்து விரியும் தொடர் வட்டங்களாக இருக்கும். மையத்துக்கு நெருக்கமாக உள்ள வட்டம், உடனடி அயல்நாட்டைப் பற்றியது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் அறிக்கையில், இந்தியா பற்றி சிறப்பாக குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. இந்தியாவுடனான நல்லுறவு கேள்விக்கிடமற்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெளிவிவகாரக் கொள்கையின் மைல்கல்லாக இந்தியாவுடனான நல்லுறவுகள் அமைந்திருக்கும்.

அதையடுத்த வட்டம், தெற்காசியா, அதையடுத்து ஆசியா, அதற்கடுத்து, ஈரோ ஆசியா, அதையடுத்து, பூகோளத்தின் தென்பகுதி, கடைசியாக உலகம் என்று தொடர்வட்டங்கள் அமைந்திருக்கும். அதேவேளை, பொருளாதாரத் தேவைகளுக்காக சீனா, இந்தியா, மற்றும் ஏனைய நாடுகளுடன் இலங்கை உறவுகளை வளர்த்துக் கொள்ளும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கட்சி தாவும் மு.கா.தொண்டர்கள்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் காத்தான்குடி பெண் தொண்டர்கள் 500 இற்கும் அதிகமானோர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உறுப்புரிமை பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இக்குழுவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மகளிர் அமைப்பின் தலைவி உட்பட அரசியல் குழு உறுப்பினர் சல்மா அமீர் ஹம்ஸா ஆகியோரும் உள்ளதாகவும் சிங்கள ஊடகமொன்று அறிவித்துள்ளது.

## அரச...

பிரிய பணித்துள்ளார். அவ்வாறு ஒப்படைக்காவிட்டால் பொலிஸார் அதனை கைப் பற்றுவர் என தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். அதற்கு பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கட்சி செயலாளர்கள் மற்றும் பொலிஸ் மா அதிபருடன் நேற்று நடத்தப்பட்ட சந்திப்பின் போது தேர்தல்கள் ஆணையாளர் இவ்வாறு கூறியுள்ளார்.

## தபால்...

தபால் மூல வாக்களிப்பு நிலை யங்கள் அமைக்கப்பட்டிருந்தன. தபால் மூல வாக்காளர்களின் அடையாளம் இடப்பட்ட வாக்குச் சீட்டை எவரும் பார்க்க முடியாத வகையில் சுதந்திரமாகவும் இரகசியமாகவும் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் வாக்காளர்கள் தமக்குரிய வாக்களிப்பு நிலையத்திற்கு அலுவலக நேரத்திற்குள் சென்று அச்சமின்றி வாக்களித்தார்கள்.

இத் தபால் மூல வாக்களிப்பினைக் கண்காணிப்பதற்கு 50 இற்கும் மேற்பட்ட தேர்தல் திணைக்கள கண்காணிப்பாளர்கள் களத்தில் இறக்கப்பட்டிருந்ததோடு இவர்களுடன் ஏனைய கண்காணிப்பு அமைப்பினைச் சேர்ந்தவர்களும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்

இதேவேளை தபால்மூல வாக்களிப்பு சுமூகமாக நடைபெறுவதற்கு தடைகளை ஏற்படுத்துவதற்கோ அல்லது வாக்காளர்களை வற்புறுத்தவோ முயற்சித்தால் அவ்விடத்தில் வாக்கெடுப்பு உடனடியாக இரத்துச் செய்யப்படுமெனவும் தேர்தல்கள் ஆணையாளர் எச்சரித்திருந்தார்.யாழ்.மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்த 15 ஆயிரத்து 13 பேர் தகுதி பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## வடக்கில்...

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற கொடூ ரங்கள் பற்றிய விடயங்கள் ஐ.நா. மனித உரிமைகள் கவுன் ஸிலின் முன்பாக வந்துள்ள நிலையில், இலங்கைத் தமிழர்களின் சார்பில் அவர்களினால் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் என்ற வகையில் தாங்களே அவ்விடயங்களை ஊடாடிக் கையாண்டு வருகின்றனர் எனத் தமிழ்க் கூட்டமைப்பின் உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறுகின்றார்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தில் இலங்கை தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களை, அவை பிரேரணை நகல் வடிவத்தில் இருக்கும்போதே தங்களிடம் காட்டித்தான் அமெரிக்கா மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தது என்று கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஐயா, வவுனியாவில் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பிரதிநிதிகளுடன் பேசும்போது சொல்கிறார்.

முள்ளிவாய்க்கால் வரை நடந்து முடிந்த அந்தக் கொடூரம் இனவழிப்புப் படுகொலைகள் (Genocide) என்பதே தமிழர்களின் ஒரே நிலைப்பாடு. 1983 இல் தென்னிலங்கையில் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனக் கலவரத்தையே அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி பெரும் இனப் படுகொலை (Genocide) செயற்பாடு என்றே இந்திய நாடாளுமன்றத்தில் வகைப்படுத்தியிருந்தார். ஆனால், இந்த இனவழிப்புக் கொடூரக் குற்றச்சாட்டிலிருந்து சர்வதேச மட்டத்தில் கொழும்பு ஆட்சிப் பீடத்தைக் காப்பாற்றுவதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரட்டை வேடம் போடுவதாக அதன் செயற்பாடுகள் காட்டுகின்றன.

முள்ளிவாய்க்கால் வரை இடம்பெற்றவை இனவழிப்புக் கொடூரங்கள் அல்லது இனப் படுகொலை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிற தலைவர்கள் ஆங்காங்கே கூறி வருகையில், இந்த விடயங்களை சர்வதேச மட்டத்தில் கையாண்டு வரும் சுமந்திரன் மட்டும் அதை அமுக்கி வாசிக்கின்றார்.

அங்கு இடம்பெற்றவை இனப் படுகொலைக் கொடூரங்கள் அல்ல, வெறும் யுத்தக் குற்றங்கள் மட்டுமே என்று கூறி இலங்கைப் படைகளையும் ஆட்சித் தரப்பையும் காப்பாற்ற முயல்கின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தேர்தலை ஒட்டி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சர்வதேச விசாரணை குறித்தெல்லாம் பிரஸ்தாபிக்கப்படுகின்றதே தவிர அங்கு இடம்பெற்றவை இனவழிப்புப் படுகொலைக் கொடூரங்கள் என்று குறிப்பிடப்படவேயில்லை.

அந்த விஞ்ஞாபனத்தில் 1983 கலவரங்கள் குறித்து குறிப்பிடுகையில் மட்டும் இனப்படுகொலை (Pogram) என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. Genocide என்ற சொல் ஓரிடத்திலும் இல்லை.

1983 இல் இடம்பெற்ற கலவரம் இனப்படுகொலை என்றால் 2009 இல் அரங்கேறிய கொடூரங்கள் அதைவிட மிகமிக மோசமானவையல்லவா? அவற்றை இனவழிப்புப் படுகொலைகள் என்று சர்வதேசத்திடம் இடித்துரைக்க கூட்டமைப்பு பின் நிற்பது ஏன்? முள்ளிவாய்க்கால் வரை அரங்கேறியவற்றை இலங்கைப் படைகளால் முன்னெடுக்கப்பட்ட மோசமான கொடூரங்களை இனப் படுகொலை என்ற வகைக்குள் அடக்கியே வடக்கு மாகாண சபையும் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அப்படியான வாசகத்தைத்தான் அதில் பயன்படுத்தியிருக்கிறார். தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் சர்வதேச மட்டத்தில் இவ்விடயங்களைக் கையாளும் சுமந்திரனும் சம்பந்தர் ஐயாவும் அங்கு அரங்கேறியவற்றை இனப் படுகொலை என்றே நிலைநாட்டுவதில் இதயசுத்தியுடன் இருக்கின்றார்களா? அதனை அவர்கள் பகிரங்கப்படுத்துவார்களா? பொதுமக்கள் முன்னால் வாக்குக் கேட்டு வரும் இச்சமயத்தில் அதனை வெளிப்படுத்துவது அவர்களது கடமையாகும்.இப்படித் தெரிவித்துள்ளார். வித்தியாதரன்.

# சமுர்த்தி கொடுப்பனவு நிறுத்தம் பயனாளிகள் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த சமுர்த்தி நிவாரணம், கொடுப்பனவு என்பன யாழ். பிரதேச செயலகத்தினால் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்து 20இற்கும் அதிகமான பயனாளிகளின் முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ரி. கனகராஜ் தெரிவித்துள்ளார்.

யாழ். பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து சுமார் 20 பேர் வரையில் தமக்கு இதுவரை காலமாக வழங்கப்பட்ட சமுர்த்தி நிவாரணம் மற்றும் சமுர்த்திக் கொடுப்பனவு என்பன இந்த மாதத்துடன் நிறுத்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கமைய சமுர்த்தி மீளாய்வு செய்யப்பட்டு யாழ். பிரதேச செயலகத்தினால் பலரது சமுர்த்தி கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் தமக்கான சமுர்த்திக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டது உரிமை மீறும் செயல் என தெரிவித்ததுடன் இது தொடர்பில் விரைவில் முறைப்பாடுகளுக்கான விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## ரயில் மோதி ஒருவர் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் கடமையாற்றும் குடா வஸ்கமுவை வசிப்பிடமாக கொண்ட 30 வயதான நபரொருவர், பாணந்துறையில் வைத்து ரயில் மோதி படுகாயமடைந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பாணந்துறை ரயில் நிலையத்தில் வைத்து அவர், தண்டவாளத்தில் நேற்று மாலை தவறி விழுந்துவிட்டார்.

இதன்போது பின்னால் வந்துகொண்டிருந்த ரயிலே மோதியுள்ளது. சம்பவத்தில் காயமடைந்த அவரை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் புத்தளம் மாவட்ட வேட்பாளர் சமந்த கொரளேஆராச்சி, மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

கடந்த வாரம் தன்னை கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்ததன் மூலம் தனது மனித உரிமை மீறப்பட்டுள்ளதாக சமந்த முறையிட்டுள்ளார்.

மனுவின் பிரதிவாதிகளாக சிலாபம் வைத்தியசாலைப் பணிப்பாளர் தினுஷா பெனாண்டோ, சிலாபம் பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்ட நால்வர் பெயரிடப்பட்டுள்ளனர்.

சிலாபம் வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்து சட்ட விரோத தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த 30ஆம் திகதி சமந்த கொரளே ஆராச்சி மற்றும் பெண் ஒருவர் சிலாபம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

# என்னை பின் தொடர்வது யார்? கடும் சீற்றத்தில் ரிஷாட்

(வன்னி)

வன்னிப் பிரதேச தேர்தல் நடவடிக்கைகளின் போது தனது தேர்தல் பிரசார மேடைகளுக்கு தான் செல்வதற்கு முன்னர் தேர்தல் காரியாலய பிரதிநிதிகளும், இரகசியப் பொலிஸாரும் ஆஜராகி விடுவதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரிஷாட் பதியுத்தீன் குற்றம் சாட்டியுள்ளார்.

வடக்கு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றாததன் காரணமாகவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை விட்டும் விலகி வந்தோம். மகிந்த ராஜபக்ஷவின் தோல்விக்கான பிரதான காரணம் பொதுபல சேனாவும் அதனைச் சுற்றி ஒன்று சேர்ந்த இனவாத அமைப்புக்களுமே ஆகும்.

பொதுபலசேனா அமைப்பு இனவாதக் கருத்துக்களைக் கக்கும் போது மகிந்த ராஜபக்ஷ எதுவித சட்ட நடவடிக்கையையும் எடுக்க முன்வரவில்லை. இதனால், வடக்கு கிழக்கில் வாழ்ந்த முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் தங்களுக்கு அந்த அரசாங்கத்தில் பாதுகாப்பு இல்லை என்பதைப் புரிந்து கொண்டனர் எனவும் வவுனியா தேக்கவத்தைக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

# தேசிய பட்டியலில் பிள்ளையானுக்கு ஆசனம்



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உடன்படிக்கை ஒன்று உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாதம் நடக்கவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தோல்வி அடைந்தால் தேசியப் பட்டியலில் இடம்வழங்குவது என்பதே அந்த ஒப்பந்தம் என அக்கட்சியின் பேச்சாளர் ஒருவர் கூறினார். இந்த உடன்படிக்கையின் பின்னரே தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டியிட சம்மதித்தாகவும் அவர் சொன்னார்.

பிள்ளையான் என அழைக்கப்படும் சந்திரகாந்தன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் பிரிந்த போது அவருடன் இணைந்தார். பின்னர் கிழக்கு மாகாண முதலமைச்சராகவும் இருந்தார். இம்முறை தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கருணா அம்மானுக்கு தேசியப் பட்டியலில் இடம்வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மனு ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன சார்பில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு, ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தன்னைக் கைது செய்தமை மற்றும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை அடிப்படை உரிமை மீறல் என அறிவிக்குமாறு கோரி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன சார்ப்பில் மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி செயலக வாகனங்களை முறைகேடாக பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட சஜின் வாஸ் குணவர்தன, நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இது தொடர்பிலான விசாரணை நேற்று எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சந்தேகநபரை பிணையில் விடுதலை செய்யவதற்கு சட்டமா அதிபர் ஆட்சேபனை தெரிவித்திருந்தார்.

## மினி சூறாவளி அம்பாறையில்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம், அடடாளைச்சேனை பிரதேசத்தில் நேற்று மாலை ஏற்பட்ட மினிசூறாவளியால், பிரதேசத்தில் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்த பலத்த சூறாவளியினால், அட்டாளைச் சேனையில் பல வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதுடன் வாகனங்களும் சேதங்களுக்குள்ளாகியது.

இதனால் அட்டாளைச் சேனை - கல்முனை பிரதான வீதியின் போக்குவரத்து சற்று நேரம் தடைப்பட்டுக்காணப்பட்டது. மேலும் அட்டாளைச்சேனை பகுதிப்யில் மின்சாரமும் தடைப்பட்டுள்ளது.



ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் விருது வழங்கும் விழா 'நேற்று முன்தினம் கல்லூரியின் தலைவர் லயன் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் தலைமையில் யாழ். இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றபோது..




# மகிந்த கேட்ட கேள்வி; கலங்கிப்போன ஹிருணிகா

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இனி இணைந்து கொள்ளப் போவதில்லை என மேல் மாகாண சபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார். எதிர்காலத்தில் சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டு வாக்காளர்களுக்கு துரோகம் இழைக்கப் போவதில்லை.

மகிந்த ராஜபக்ஷவின் பக்கத்தில் இனி எந்தக் காலத்திலும் நிற்கப் போவதில்லை.

2013ஆம் ஆண்டில் மேல் மாகாணசபைத் தேர்தலில் வெற்றியீட்டி கொலன்னாவ பிரதம அமைப்பாளர் பதவியை மகிந்த ராஜபக்ஷவிடம் கோரியிருந்தேன்.

தந்தையைப் போன்று மரணிக்க விருப்பமா என மஹிந்த என்னிடம் கேள்வி எழுப்பினார்.

மகிந்தவின் இந்தக் கேள்வி என்னை பெரிதும் அதிருப்தி அடையச் செய்தது. தந்தையைக் கொலை செய்த அடுத்த நாளே ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளத் தீர்மானித்தேன்.

எனினும் அப்போதைய ஆளும் கட்சி அமைச்சர்கள் சிலர் அதனைத் தடுத்தனர் என ஹிருணிகா பிரேமசந்திர தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஆகஸ்ட் 04ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை ரூ. 2.00

# மாலை முரசு

தேர்தல் கால மாலைப் பதிப்பு

04.08.2015 | செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் – 4

அழிவா!–ஆக்கமா!!
மக்கள் தீர்ப்புக்கு
இன்னமும்
**13**
நாட்கள் மட்டுமே!

## தேர்தல் பரப்புரையில் மாணவர்கள்

# அடாவடி அரசியலில் அங்கஜன் கூடவே அம்மையார் விஜயகலா




எதிர்வரும் 17ம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான பரப்புரைகள் நாடு பூராகவும் படிப்பபடியாக சூடு பிடித்து வருகின்றது. யாழ் மாவட்டத்தில் இரண்டு தேசியக் கட்சிகள் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழ்த்தேசிய மக்கள் காங்கிரஸ் ஆகிய பிராந்தியக் கட்சிகள், ஆறு சுயேட்சைக்குழுக்கள் ஆகியன களத்தில் உள்ளன.

இந்த நிலையில் தேசியக் கட்சிகளில் ஒன்றான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் அங்கஜன் இராமநாதன் அவர்களது அடாவடித்தனங்கள் அதிகரித்து வருவதாக பல மட்டங்களில் இருந்தும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக யாழ் மாவட்டத்தில் உள்ள பல பாடசாலை மாணவ மாணவிகளை தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுத்தியுள்ளதாக, அங்கஜன் இராமநாதனின் மீது சமூக ஆர்வலர்கள் பலர் குற்றம் சுமத்துகின்றனர்.

தமது அராசங்கம் ஆட்சிக்கு வரும் எனவும், தான் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டால் தனக்கு மந்திரி பதவி கிடைக்குமெனவும், இதன் ஊடாக பல இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புக்கள் பெற்றுத்தருவதாக அளிக்கப்படும் வாக்குறுதிகளை நம்பி இந்த மாணவ மாணவிகள் அவருக்கான தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளதாக



அறியமுடிகின்றது.

மற்றுமொரு தேசியக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடும் அம்மையார் விஜயகலா அவர்களும், அவரின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக இதேபோல மாணவ, மாணவிகளை களம் இறக்கியுள்ளதை யாழ் வீதிகளில் அவதானிக்க முடிகின்றது.

அம்மையார் விஜயகலாவுக்கு ஆதரவாக காரைநகர் பகுதியைச் சேர்ந்த

03 பக்கம் பார்க்க

## இனவாத அரசியல் வேண்டவே வேண்டாம்

### – சந்திரிக்காவின் பேத்தியார்



ஜாதி, மத, இன, பேதமற்ற நாட்டையே பிரபல்ய நடிகரும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவின் கணவருமான விஜயகுமாரதுங்கா அவர்கள் நேசித்தார். அவர்களது வழித்தோன்றல்களான நாமும் அவரது சிந்தனைகளையே பின்பற்றுகின்றோம்.

03 பக்கம் பார்க்க

# என்னையும் விட்டு வைக்கவில்லை சுரேசின் மண்டையன் குழு



இந்திய அமைதிப்படை யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த காலத்தில் அவர்களுடன் சேர்ந்து செயல்பட்ட மண்டையன் குழுவின் அராஜகத் தாக்குதலுக்கு தானும் தப்பவில்லை என புலம்பியுள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன்.

நேற்று முன்தினம் நல்லூர் பகுதியில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த சிறிதரன். பல அப்பாவி மக்கள் மீது மண்டையன் குழுவால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் தானும் சிக்குண்டு பலத்த காயம் அடைந்ததாகவும் பொதுமக்கள் முன்னிலையில் வேதனையுடன் தெரிவித்தார்.

### – குமுறுகிறார் சிறிதரன்



இந்திய அமைதிப்படை யாழில் நிலை கொண்ட காலப் பகுதியில் ஒருநாள் காலை முடமாவடிச் சந்தியில் சென்று கொண்டிருந்த என்னை இந்திய படையினர் பிடித்து அவர்களது முகாமில் தடுத்து வைத்திருந்தனர்.

அன்று மாலை அங்கே வந்த சுரேஸ். பிரேச்சந்திரனும், அவரது ஆட்களும் காரணம் எதுவுமின்றி எனக்கு அடித்த அடியையும், செய்த சித்திரவஷதகளையும் என்னால் என்றும் மறக்க முடியாது. நான் ஏன் தடுத்து வைக்கப்பட்டேன். எதற்காக என்மீது தாக்குதல்கள் மேற்கொண்டார்கள் எதனையும் தெரிவிக்காமல் என்மீது


03 பக்கம் பார்க்க

# உரிமம் இல்லையேல் வீடு இல்லை இங்கிலாந்தில் புதிய சட்டம் அமூல்


இங்கிலாந்தில் புதிதாக கொண்டு வரப்படும் குடிவரவு சட்டமூலம் ஒன்றின் அடிப்படையில், அங்கு உள்ள வீட்டு உரிமையாளர்கள், வாடகைக்கு வருபவர்கள் இங்கிலாந்தில் வசிக்கும் உரிமைய இழக்கும் பட்சத்தில் அவர்களை வீட்டில் இருந்து உடன் வெளியேற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது..

வாடகைக்கு குடியிருப்போரின் அரசியல் தங்சக் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும் இடத்து, சில நேரங்களில் நீதிமன்றங்களின் உத்தரவின்றியே அவர்களுடைய வாடகைக்கான ஒப்பந்தத்தை வீட்டு உரிமையாளர் ரத்துச் செய்யவும் முடியும்.

வாடகை ஒப்பந்தங்களை செய்து கொள்வதற்கு முன்னதாக வாடகைக்கு வருவோரின் குடியியல் அந்தஸ்தை வீட்டு உரிமையாளர் சோதனை செய்யவும் வேண்டும். இப்படியான விடயங்களில் திரும்பத்திரும்ப தவறிழைப்போருக்கு 5 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும் விதிக்கப்படலாம்.



# பொங்கிப்பாயும் ஜனநாயகம் காரணகர்த்தாக்கள் யார்?



அவுஸ்திரேலியாவிலிருந்து Dr.நடேசன்....

ஐயா எலக்சன் கேட்கிறார்.இது மாவை நித்தியானந்தனின் நாடகமொன்றின் பெயர். பல தடைவ மெல்பேனில மேடையேறியது. தேர்தலே நாடகமாக தமிழர் மத்தியில் ஒவ்வொரு முறையும் அரங்கேறுகிறது. மக்களும் தாங்கள் தேர்ந்தெடுத்த தலைவர்கள் வெட்டியள்ளிக்கொண்டு வருவாவார்கள் என ஆவலாக பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

நான் சமீபத்தில் உருத்திரகுமாரன் கதை என இலங்கைத் தமிழரை படிமமாக்கினேன். ஐந்து வருட கோமாவின் பின்பும் விடுதலைப்புலிகள் இருப்பதாக விடாது மறுத்து ஆயுதப் போராட்டதிற்கு தயாராக இருக்கும் கால் ஊன்மான போராளி கடைசியில் அங்கொடை வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்படுகிறான். அவன் மட்டுமல்ல அவனோடு ஐந்து வருடம் காவலுக்கு இருந்த ஜெயசிங்காவும் பைத்தியமாகி வைத்தியசாலைக் குள்ளே அனுமதிக்க அனுமதிக்கப்படுவதாக கதை முடிகிறது. இங்கே யார் உருத்திரகுமாரன் யார் ஜெயசிங்கா என்பது கதையில் சொல்லப்படாவிடிலும் சாதாரணமான இலக்கிய அறிவு உள்ளவர்களுக்கு விலங்குப்பண்ணையில் சினோபோல்,நெப்போலியனை புரிந்து கொள்வதிலும் இலகுவானது.

நகைச்சுவை இலக்கியத்தை விட நமது அரசியல்,பல நடிகர்களைக் கொண்டது. சிவாஜிலிங்கம் குருணாகலையில் போட்டியிடுவதும் தேர்தல் அபேடசகர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளமன்ற உறுப்பினர்களையும் தேர்தலில் நின்ற ஒருகாரணத்திற்காகவே விண்ணிற்கு தோட்டாவால் அனுப்பிய போராளிகள் தேர்தலில் நிற்பதைவிட நகைச்சுவையாக நாங்கள் எதை எழுதமுடியும்...?

நான் வித்தியதரன் குழுவில் உளள போராளிகளை மட்டும் சொல்லவில்லை. உடுவில் தர்மலிங்கம் யாருக்கும் கனவில் கூட தீமை செய்யாத மனிதர். அவர் சேர்த்த நல்ல பெயரில்த்தான் இனனமும் சித்தார்த்தன் வாக்கெடுப்பது. அவர் ஏன் கொல்லப்பட்டார்?

தமிழர் வரலாறு எங்கள் ஊரில் ஒரு பேச்சுவழக்கை நினைக்கப் பண்ணுகிறது.வயிற்றுக்குள் இருக்கும் மலத்தை கொழுப்பென நினைப்பது,

நமது தலைவர்கள் பல அணிகளில் திரண்டு போட்டியிடுகிறார்கள். வாள் வீச்சுப்போல் வீரவசனங்கள், மயிர்கூச்செறியும் அறிக்கைகள். அதைக்கேட்டு மக்கள் திகைத்தபடி பார்த்துக் கொண்டிருக்கிறாரகள். ஒருவிதத்தில் கடந்த முப்பது வருடங்களில் நினைத்துப்பார்க்க முடியாத விடயம்தான். ஐம்பதினாயிரம் ரூபாயிருந்தால் எவரும் எங்கும் கேட்கலாம். அதாவது குருநாகலில் போட்டியிடும் சிவாஜிலிங்கம்போல். குருநாகலில் பஸ் நிலையத்திற்கு போகவே தமிழர்கள் பயந்தகாலம், நாங்கள் பேராதனையில் படிக்கிற காலம்.

காலம் மாறிவிட்டது. தமிழர்கள் இந்த ஜனநாயகத் தேர்தலில் கலந்து கொள்வதற்கு சிங்களவர்களே வழிசமைத்தார்கள். இது ஒரு அழகிய முரண்பாடு இல்லையா....? அதிலும் தேர்தலில் வாக்கு கேட்டவர்களை கொலை செய்தவர்களும் இந்தத் தேர்தலில் இறங்கியிருப்பது மிகவும் சந்தோசம்.

ஒட்டுமொத்தமாக நமது தமிழர்களிடம் ஜனநாயகம் ஆடிக் காவேரிபோல் பொங்கிப் பாய்வது மகிழ்ச்சியே இதற்குக் காரணமானவர்களை நினைப்பார்களா நம் மக்கள் நினைப்பது நடந்தால் மிகவும் மகிழ்ச்சி.



# பிரபாகரனின் பெருமைகள், புலிகளின் செழுமைகள்

# சூறையாட முனையும் கூட்டமைப்பு

- தி.பரந்தாமன்

(நேற்றைய தொடர்ச்சி)

அதே நேரத்தில் புலிகளின் போராளிகளை உள்ளே கொண்டுவருவது தமது தனிப்பட்ட அரசியல் முன்னேற்றங்களுக்கு இடையூறாகி விடும் என்றும் அவர்கள் கருதக்கூடும். இந்தக் காரணங்களுக்காக உயிரோடு வாழும் புலிகளைத் தமது பயணத்தோடு இணைத்துக் கொள்வதை இன்றைய தலைவர்கள் வெறுக்கக்கூடும். அப்படிப் பார்த்தால் பிரபாகரனின் பெருமைகளையும் செத்துப் போன புலிகளின் செழுமைகளையும் பற்றி வாக்கு வேட்டைக்காகப் பேசித்திரிவது எத்தகைய மனச்சாட்சிக்கு நியாயமானது?

விடுதலைப் புலிகளின் போரராளிகளைத் தம்மோடு இணைத்துக் கொள்ளுவதற்கு கஜேந்திரகுமார் தயங்கினால், அது ஓரளவுக்கு நியாயமானது. ஏனெனில், தமிழர் ஒரு தேசிய இனம் எனவும், பாரம்பரியத் தமிழர் வாழ்நிலம் தமிழர் தேசம் எனவும் பிரகடனம் செய்யும் கஜேந்திரகுமாரின் கோட்பாட்டினை விடுதலைப் புலிகளின் போராளிகள் பரப்பினால், சிங்கள இனவாத சக்திகள் அதனைப் பிரிவினைவாதமாகச் சித்திரித்துவிடவே வாய்ப்புண்டு. ஏற்கனவே அதிதீவிரமாக அர்த்தப்படுத்தப்படும் கஜேந்திரகுமாரின் அரசியலுக்கும் அது பங்கமாக அமைவதோடு, அவரது கொள்கையைப் பேசித் திரிவது தற்கால சூழலில் புலிப் போராளிகளுக்கும் ஆபத்தாக அமையக்கூடும். அவ்வாறான போதும் கூட, ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலுமே விடுதலைப் புலிப் போராளிகளைத் தமது வேட்பாளர்களாகக் கஜேந்திரகுமர் துணிந்து நிறுத்தியுள்ளார் தானே? அவர்களுள் பெண் போராளிகள் கூட அடங்குகின்றனர் தானே?

ஆனால், தமிழ் தேசிய கூட்டமைப்பில் இணைய ஒரு விடுதலைப் புலிப் போராளி வாய்ப்பு.கோருகின்றார் எனின் ஐயாவும் சுமந்திரனும் முன்வைக்கும் இணக்க–அரசியல் வழிமுறையைத் தானும் முன்னெடுக்க அவர் தயாராக இருக்கின்றார் என்பது தானே அர்த்தம்? அவ்வாறு ஒரு புலிப் போராளி முன்வருவாரெனின், அவரைக் கொண்டே அதனைச் செய்விப்பதில் என்ன பிரச்சினை வந்துவிடப் போகின்றது? உண்மையில் புலிகளின் போராளி ஒருவரைக் கொண்டே தமது இணக்க–அரசியலை முன்னெடுப்பது தானே ஐயாவுக்கும் சுமந்திரனுக்கும் பலம்? அவ்வாறு இருந்தபோதும் அதனைச் செய்வதற்கு வீட்டுச் சின்னத்தின் தலைமை ஏன் முன்வரவில்லை?


விடுதலைப் புலிகளின் போராளிகளைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களாக நிறுத்தி, ஜனநாயக அரசியலில் பங்களிக்க அவர்களுக்கு வாய்ப்பு வழங்க இது பொருத்தமான தருணம் அல்ல என்றும் ஐயா அங்கு குறிப்பிட்டிருக்கிறார். தெற்கிலே மஹிந்த ராஜபக்ஷ எழுச்சி பெற்றுவரும் இந்த நேரத்திலே, புலிகளைத் தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் தேர்தல் களத்தில் இறக்குவது அவரது எழுச்சிக்கு உந்துவிசை ஆகிவிடும் என்றும் ஐயா வாதிட்டிருக்கிறார். ஆனால், அது வெறும் சாட்டு. விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கத்தக்கதான ஒரு வாதமாக அது எனக்குப் படவில்லை. உண்மையில், மஹிந்தவை முறியடிப்பதற்குச் சிறந்த வழி புலிகளை மறைத்துப் பதுக்கி வைப்பது அல்ல. மாறாக, வெள்ளை வேட்டிகளைக் கட்டி அவர்களை வீதியிலே இறக்குவதுதான். துல்லியமாகச் சொல்லுவதெனில் ஐயாவும் சுமந்திரனும் செய்ய முனையும் 'மென் சக்தி' அரசியலுக்கு வலுச்சேர்க்கத்தக்க அதியுச்ச வழியே புலிகளின் போராளிகளைத் தேர்தல் அரசியலுக்குள் கொண்டு வருவதுதானே? திரும்பி வாய்திறக்க முடியாத வாதத்தை சிங்கள இனவாதிகளுக்கு முன்பாக அப்போது தானே வைக்க முடியும்?

(தொடரும்)

# மொக்கனின் முனகல் - 02

# பிறேமச்சந்திரனுக்கு பார்ளிமென்ற் தம்பி சர்வேசுக்கு மாகாணசபை

## இதுதான் EPRLF இன் புரட்சி அரசியல்



எலக்ஸன் திருவிழா கொடியேறி அஞ்சாறு நாளாப் போச்சு. செத்துப் போன போராளிகளை விட்டு,இப்ப புதுப்புதுப் போராளிகளென கொஞ்சப் பேர் வந்திருக்கினம். 'உதயன்" முதலாளி சரவணபவனும் தானும் ஒரு ஊடகப்போராளியாம். அவருக்கு மேலால அவற்ற மச்சான் வித்தியாதரன் தானுமொரு போராளி எண்டு வெளிக்கிட்டிருக்கிறார். எலக்சன் கிட்டக்கிட்ட போராளிகளுக்கு உணவு சமைச்சுக் குடுத்தபடியால சமையல் போராளிகள் எண்டும். சாப்பாடு கொண்டுபோய் குடுத்ததால சாப்பாட்டுப் போராளிகள் எண்டு சொல்லிக்கொண்டும் வேற ஆக்களும் வெளிக்கிட்டாலும் வெளிக்கிடுவினம்குறை சொல்லுறதுக்கு இல்லை. உதயன் முதலாளியும் ஒரு ஊடகப் போராளி எண்டால் உதை என்னெண்டு ஒரு கதையெண்டு எடுக்கிறது. அவரொரு போராட்ட இலட்சியம் படைச்சவரோ. அல்லது போரைப் பற்றி கதை ஏதும் எழுதினவரோ எண்டால் அது ஒண்டும் இல்லை. இப்பிடி பாத்தால் உலகத்தில உள்ள முதலாளிமாரெல்லாம் எல்லாரும் ஒரு வகைப் போராளிதான் எண்டு வந்திடும்.

மேலும் கொஞ்சப்பேர் சண்டையில தோக்கும் மட்டும் ஜனநாயகத்துக்கு விரோதமா செயற்பட்டுவிட்டு இண்டைக்கு ஜன நாயகப் போராளிகள் எண்டு சொல்லிக்கொண்டு வந்திருக்கினம். காந்திஜி, அமெரிக்கான்ர கறுப்பினத் தலைவர் மார்டின் லூதர் கிங் எண்டவைதான் உலகத்தில ஜனநாயகப் போராளிகள் எண்டு அறியப்பட்டவை. இவை பதவி வகிக்கவும் இல்ல. ஆன இங்க பார்லிமந்துக்கு போய்த்தான் போராடப் போறம் எண்டு சொல்லியினம். உதக் கேக்கத்தான் மொக்கனுக்கும், மொக்கிக்கும் சிரிப்புவருகுது.

முள்ளிவாய்க்கால்ல முடிவாய்த் தோக்கும் மட்டும் மூர்க்கத்தனமான போராளிகள், இண்டைக்கு பசுப்போராளிகளா வந்திட்டினம். இப்பிடி மாறினது பிழை எண்டு மொக்கன் சொல்ல வரேல்ல. ஆனா எலக்சன் கேக்க வெளிக்கிடுறதுதான் மொக்கனுக்கு பிழை எண்டு படுகுது. தெற்கில ஜே.வி.பி பெடியன்கள் பிறகு பிறகு ஜனநாயக போராளிகளா மாறினாங்கள். ஆனால் அவனுகளுக்கு ஓரளவு அரசியல் ஞானம் இருந்திச்சுது.

ஆனா இவைக்கோ, இவையின்ர தலைவருக்கோ ஜனநாயக அரசியலில் ஒரு ஞானமும் இருக்கேல்ல. ஒரு துளி நம்பிக்கையும் இருக்கேல்ல. இவையின்ர முன்னணி வேட்பாளரப் பாத்தால் பெரிய சந்தேகம் கிளம்புது. அவர் கதிரைக்காண்டி கொஞ்சப் போராளிப் பொடியன்களையும் தன்னோட சேத்துக்கொண்டு அவைக்கு தலைவரெண்டு எலக்சனில நிக்கிறாராம். இவருக்கு போன எலக்சன் காலத்திலேயே கதிரை ஆசை இருந்திச்சுது. ஆனா கூட்டமைப்புக்காரர் குடுக்கேல்ல. அவை பசையுள்ள பத்திரிகை முதலாளியும் இவற்ற மச்சானுமான சரவணபவனுக்கே சீற்றுக் குடுத்தினம். இவற்ற ஆசை நிராசையாப் போச்சுது. ஆளாலும் ஆசை இவரை விடயில்ல.இண்டைக்கு ஜனநாயக போராளி எண்ட பெயரில எலக்சனுக்கு நிக்கிறார். அப்ப இவர பெரிய கதிரைக்கு ஆசைப்படுற பேராசைப் போராளி எண்டு ஏன் சொல்லக் கூடாதெண்டு மொக்கன் கேக்கிறான். அவங்களுக்குத் தலைமை தாங்க இவர் ஆர் எண்டு மொக்கியும் கேக்கிறாள். இந்தக் கேள்வியெல்லாம் சரியா...? பிழையா...? எண்டு மொக்கன் சனங்களையும் கேக்கிறான்.

தங்கத்துரை,குட்டிமணி செத்தது பிரபாகரனுக்கு தலைமையைக் குடுத்துது. திருகோணமலையில தங்கத்துரை செத்தது சம்மந்தருக்கு வாய்ப்பாய்ப் போச்சுது. அந்த மாதிரி கிட்டத்தட்ட 25 வரியத்துக்கு முந்தி நாபாத் தம்பியும் மற்றும் தோழமைப் பெடியங்களும் சென்னையில புலிகளால சுட்டுக்கொல்லப்பட்டது சுரேஸ் பெடியனுக்கு வாய்ப்பாப் போச்சுது. அவங்கள் சுட்டுக்கொல்லபடேக்க அங்க நிண்டிருக்கவேண்டிய சுரேஸ் பெடியன் அங்க நில்லாதது இண்டைக்கும் ஒரு சந்தேகமாத்தான் கிடக்குது. பிறகு அவர் தலைமையைத் தன்ர கையில எடுத்துக்கொண்டு சுரேஸ் ஈ.பி.ஆர்.எல்.எவ் எண்டு எலக்சன் கேக்க வெளிக்கிட்டார். சந்திரிக்கான்ர அரசாங்கத்தில மீன்பிடி ஆலோசகராகவும் பதவி வகிச்ச பெருமை அவருக்கு உண்டு. பிறகு புலிகள் பெரிசாய் வந்தாப் போல புலிகளின்ர கூட்டமைப்பில தன்னையும் வலியச் சேத்துக் கொண்டார்.

இப்பிடிப் போய் ஒட்டிக்கொண்ட சுரேஸ் பொடியன்,இண்டைக்கு கூட்டமைப்புக்கு தானே மூலகாரன், மூளைகாரன் எண்டு பெருமையடிக்கிறத பார்த்தால் மொக்கனுக்கு சிரிப்பும் வருகுது. அழுகையும் வருகுது. தோழர்களை வஞ்சகத்தனமா கொண்ட புலிகளிடம் போய் தஞ்சமடைந்தபோதே அவற்ற பதவி ஆசைக்குணமும்,



நரித்தந்திரமும் நல்லா வெளிப்பட்டுது. புரட்சி அரசியல்ல இறங்கின சுரேஸ் பெடியன் தனக்கு பார்லிமந்து பதவி, தம்பி சர்வேஸ்வரனுக்கு மாகாணசபைப் பதவி எண்டு பெற்று ஒரு குடும்ப அரசியல் புரட்சியையே செய்துபோட்டார். ஊடகப் போராளி எண்டு தம்பட்டம் அடிக்கிறதையும், புரட்சிப்போராளி எண்டு இண்டைக்கும் பெருமையடிக்கும் சுரேஸ் பெடியனும் ஆவணி பதினெட்டு மக்களட்ட அடி வேண்டி அரசியல் அநாதைகளாப் போடுவினம் எண்டு மொக்கன் நல்லா நம்புறான். புலி விழுந்தது நரிக்குத் தாயம் எண்டாப் போல, இருந்தவனுகளெல்லாம் இப்பத்தான் முழுசத் தொடங்ககினம்.

தெற்கில மகிந்தவுடன் குருநாகலில் களத்தில் குதிசசிருக்கிறார் எங்கண்ட வல்வெட்டித் துறை சூரன் சிவாஜிலிங்கம். மகிந்தவைத் தோற்கடிக்கிறதுக்காக களத்தில இவற்ற சகோதரன் விநோதலிங்கம் ஒரு ரொலோ ஆரம்ப ஆள். அவற்ற செல்வாக்கில தான் இவரும் கிளம்பினவர் ஆரம்பத்தில.இப்ப அவரையும் மறந்து போட்டார் இந்த சிவாஜிலிங்கம். அவர் வல்வெட்டித் துறை சேர்மனா இருந்தவர். இப்ப லண்டனில சீவிக்கிறார். சிவாஜிலிங்கம் இஞ்ச இருந்துகொண்டு அடிக்கடி மலிவான முறையில் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வார்.இந்த மலிவு விளம்பர அரசியல் இவருக்கு எத்தின காலம் நீடிக்கப் போகுதெண்டு மொக்கன் கேக்கிறான். மொக்கியும் கேக்கிறாள்.

மொக்கன் இப்பவும் கேக்கிறான் இனிமேலும் கேப்பான்.

---

## அடாவடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படித்த, வேலையற்ற இளைஞர், யுவதிகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதையும் காண முடிகிறது. படித்து விட்டு வேலையற்று இருக்கும்இந்தஇளைஞர்களும்,மாணவர்களும் இவர்களது வேலைவாய்ப்பு வாக்குறுதிகளை நம்பி கொளுத்தும் வெயிலிலும் இவர்களது துண்டுப்பிரசுரங்களுடன் தெருக்களில் திரிவது வேதனையளிக்கிறது.

உண்மை நிலையை சரியாகப் புரிந்து கொள்ள முடியாத பருவத்திலிருக்கும் இந்த மாணவ மாணவிகளை தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுத்துவது தேர்தல் விதிமுறைகளை மீறுவது மட்டுமல்லாது மனித உரிமைகள் மீறல் என்பதும் இவர்களுக்கு புரியாததல்ல.

இந்த விடயம் தொடர்பில் யாழ் மாவட்டத் தேர்தல் உதவி ஆணையாளருக்கு புகார் அனுப்பப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான நடவடிக்கைக்காக காத்திருப்பதாகவும் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

---

## இனவாத...

இவ்வாறு தெரிவித்துள்ளார் மறைந்த நடிகர் விஜயகுமாரதுங்காவின் பேத்தியும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கொழும்பு மாவட்ட வேட்பாளரான மல்கூஷா குமாரதுங்க அவர்கள்

மறைந்த விஜயகுமாரதுங்காவின் பேரப்பிள்ளையான நானும் எனது தந்தையான ஜீவன் குமாரதுங்காவும் முன்னாள் ஜனாதிபதியும் எனது பாட்டியுமான சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கா போன்றோரும் இந்த நாட்டில் இனவாதம், மதவாதம் எப்பொழுதும் இருக்கக் கூடாதென்பதையை விரும்பினோம், விரும்புகின்றோம்.

கடும் யுத்தம் நிலவிய காலத்தில் கூட விஜயகுமாரதுங்கா யாழ்ப்பாணம் சென்று இந்த யுத்தம் வேண்டாம், பிரச்சினைகளை பேசித் தீர்த்துக் கொள்ளலாம் எனத் தெரிவித்திருந்தார்.

அவர் வெறுத்து ஒதுக்கிய இனவாத அரசியலை நானும் வெறுக்கிறேன். நாட்டில் அமைதியும், சமாதானமும் என்றும் நிலவ வேண்டுமென்றால் இனவாதம் என்பது இந்த நாட்டில் உள்ள இரண்டு இனங்களுக்கிடையே இருந்து முற்றாக அகற்றப்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பின் நாளிதழ் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே மல்கூஷா குமாரதுங்கா இக்கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

---

## என்னையும்...

மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை ஒரு அராஜகத்தின் வெளிப்பாடாகவே நான் பார்க்கிறேன்.

இந்திய அமைதிப்படைக் காலத்தில் சுரேஸ். பிரேமச்சந்திரனின் மண்டையன் குழு மேற்கொண்ட கொடூரச் செயல்களினால் பல இளைஞர்கள் கொல்லப்பட்டதும், பலர் கைது செய்யப்பட்டு காரணமின்றி கொடூரப்படுத்தப்பட்டதும் யாவரும் அறிந்த விடயமே.

அதே வேளை இன்று ஒரேயணியில் இருந்து செயற்படும் இருவருமே இப்படியான அராஜகச் செயல்களில் முன்னைய காலத்தில் செயற்பட்டவர்களே.

கிளிநொச்சி பாடசாலையொன்றில் அதிபராக இருந்த சிறிதரன் அவரது பாடசாலை மாணவர்கள் உட்பட சிறுவர்களை புலிகள் அமைப்புக்கு சேர்த்துக் கொடுத்த துரோகத் தனத்தைச் செய்தவர்.

தனது தலைவர் தோழர் பத்மநாபாவை கொலைசெய்த புலிகள் அமைப்புடனேயே சமரசம் செய்து கொண்டு மண்டையன் குழுகாலத்தில் தான் செய்த கொலைகளையும் மறந்து பதவி சுகங்களை அனுபவித்து வருபவர் சுரேஸ்.பிரேமச்சந்திரன்.

இந்த இருவரும் இன்று ஒரே அணியிலே இருந்தும் கூட எதிரும், புதிருமாக செயற்படுவது மக்களின் விருப்பு வாக்குகளை பெற்று அதனூடான அரச சுகங்களை அனுபவிப்பதற்காக மட்டுமே என்பது அனைவரும் அறிந்ததே.

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பை நிராகரிக்க பாமரன் ஒருவனின் பதினாறு காரணங்கள்

1) போரானது 2009 ஆண்டு இறுதிக்கட்டத்தினை அடைந்த போதும் கூட அதைத் தடுத்து நிறுத்து வதற்கும், ஆயிரக்கணக்கான தமிழர்களின் இறப்பை தடுத்து நிறுத்துவதற்கும் எவ் வித முயற்சிகளும் போராட்டங்களும் செய்யாமல்

வெளிநாடுகளிலும், இந்தியாவிலும் ஒளித்திருந்தமைக்காக

2)போர் முடிவுக்கு வந்ததும் சம்பந் தன் பாராளுமன்றில் உரையாற்றும் போது பயங்கரவாதத்தினை ஒழித் தமைக்காக மகிந்த இராஜபக்சவுக்கு நன்றி தெரிவித்தது மட்டுமல்ல புலி கள் மனித உரிமைகளை மதிக்க வில்லை என்றும் தெரிவித்த துரேதகத் தனத்திற்காக...

3) கட்சியின் முடிவை மீறி சுமந்தி ரன் தம்பதியினருடன் சுதந்திரதின விழா வில் கலந்து கொண்டார் சம்பந்தர். ஆனால் எந்தப் பொழுதிலும் முள்ளி வாய்க்கால் மக்கள் நினைவு தினத்தில பங்கெடுக்காத ஈனத்தனத்திற்காக.

4)யாழில் நடை பெற்ற மேதினக் கூட்டத்தில் ரணிலுடன் இணைந்து தேசியக்கொடியினை தூக்கிப்பிடித்த துடன் மட்டுமல்ல, அதனை நியாயப் படுத்தி கருத்தும் வெளியிட்ட சம்பந் தன் தேஉதல் காலத்தில் சிங்கள் தலைமைகளுக்கு எதிராக கருத்து வெளியிடாமைக்காக.

5)நாமல் இராஜபக்ஷவுடன் இணைந்து கிரிக்கட் விளையாடும் சுமந் திரன். எமது இளம் சமூகத்தினை சந் தித்து பேசுவதைக் கூட தவிப்பமைக் காக



6) சர்வதேச விசாரணை அறிக்கை பிற்போடப்பட்டதை வரவேற்று தென்னிலங்கையிலும் ஜெனீவாவிலும் கருத்து வெளியிடும் சுமந்திரனும் சம் பந்தனும் தமிழ் மக்களிடையே பேசும் போது மட்டும், சர்வதேச விசாரணை வேண்டும் என்று பொய் முழக்கம் இடுகின்றனரே இந்த நடிப்புக்காக.

7) தங்களின் கொடும்பாவிகளை படங்களை எரித்தவர்களை புலிகளின் வால் எனவும் துரோகிகள் எனவும் தெரி வித்து இவர்களின் பிழைகளை சுட்டிக்காட்டாது மக்கள் மௌனியாக இருந்து பார்த்துக்கொண்டு மட் டுமே இருக்க வேண்டும் என்று நினைக் கின்றனரே அதற்காக.

8)சுமந்திரன். புலிகளின் கொள்கைகளை நாங்கள் ஏற்கவில்லை நாம் பயங்கரவாதத்தினை எதிர்க்கின் றோம் என புலிகளை பயங்கரவாதி களாக சித்தரிக்கும் வகையில் பேட்டி வழங்கி வருகின்றாரே அதற்காக.

9)பிரிட்டன் பிரதமர் டேவிட் கம ரூன் யாழ் வந்தபோது போராட்டம் நடாத்தியவர்களின்எண்ணங்களை மதிக் காமல் தப்பி ஓடினார்களே அதற்காக..

10) வடமாகாணசபையின் இனப் படுகொலைத்தீர்மானம் தேவையற்றது என அறிக்கை வெளியிட்டு, தமக்கு முதுகு எலும்பு இல்லை என்பதை வெளிப்படுத்தினார்களே அதற்காக

11)வாக்கு கேட்கும் போது மட்டும் மாவீரகள் மற்றும் புலிகள் பற்றி பேசுவ தும் பின்னர் புறக்கணிப்பதுமான கபட நாடகத்தை அரங்கேற்றி தமிழ் மக் களை தொடர்ந்தும் முட்டாள்களாக்க முனைகிறாஉகளே அதற்காக.

12)முன்னைய மகிந்த அரசுடனான பல பேச்சுவார்தைகளில் தீர்வுத்திட்டம் தொடர்பில் எதுவும் சமர்ப்பிக்காமல் மக் களை ஏமாற்றியமைக்காக.

13) மைத்திரி அரசுடன் காணா மல் போனோர், சரணடைந்தோர் அரசி யல்கைதிகள் தொடர்பில் சரியான பேச்சுவார்த்தை செய்யாமல், தமக்கு சொகுசு வீடுகள், பெருந்தொகைப் பணம் ஆகியவற்றை பெற்றுக் கொண்டு, 100 நாட்களில் தமிழ் மக்களுக்கு முன்னேற்றம் எதனையும் பெற்றுத் தராததற்காக...

14) கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் இருக்கும் உள்ளூராட்சிமன்றங்க்ள் பலவற்றில் முறையற்ற நிர்வாகம். பாரபட்சமான அணுகுமுறைகள்.பிழை யாக நடப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்காததற்காக.

15)தமது வேட்பு மனுக் களில் புதியவர்களுக்கான இளைஞர் களுக்கான இடத்தினை உறுதிசெய்ய தவறியமைக்காக.

16) போர்க்குற்றவாளி சரத்பொன் சேகாவுக்கு முன்னைய ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு தெரிவித்தமைக்காக.



# கூரையேறி கோரச்சுரக்காய் அறுக்கத் தெரியாத கஜேந்திரகுமார் வானத்தைக் கீறி வைகுண்டம் காட்டப்போறாராம்....!

தமிழ் மக்கள் பற்றியோ மக்களின் உரிமைப் பிரச்சினை பற்றியோ எதுவும் தெரியாத அறியாத வரலாறு தெரியாத ஒரு சிறுவன்தான் கஜேந்திரகுமாஉ பொன்னம்பலம்.இவருடைய அப்பன் யார்? இவருடைய பேரன் யார்? என்றெல்லாம் மக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இவருடைய பேரன் பு.பு.(கா.க்.) பொன்னம்பலம் பணத்துக்காக கள்ளன், காடையனை வெளியேற்றுவதற்கும், பாலியல் துஷ்பிரயோகம் செய்தவனை வெளியேற்றுவதற்கும்தான் பெரிதும் பாடுபட்டார். அவர் தமிழ் மக்களின் உரிமை தொடர்பிலோ எமது பண்பாடு; கலாசாரம் தொடர்பிலோ சிறிதளவும் அக்கறைகொள்ளவில்லை. இவ்வாறு வடமராட்சிப் பகுதியில் பர்வலாக விநியோகிப்பட்டு வரும் துண்டுப் பிரசுரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு பெண்ணை ஒருவன் பாலியல் பலாத்காரம் செய்துவிட்டான். நீதிமன்றில் பெண்தரப்பால் நீதிவேண்டி வழக்கு தொடரப்பட்டது. காரசாரமான வாதாட்டம். குறுக்கு மூளை நிரம்பப் பெற்ற ஜி.ஜி. ஒரு தையல் ஊசியைத் தான் வைத்துக்கொண்டு நூலை அதற்குள் கோக்குமாறு பெண்ணிடம் கூறினார். அந்தப் பெண் நூலை கோக்க இவர் ஊசியை தன் கையால் அசைத்து கோர்க்கவிடாது செய்தார். இறுதியில் நீதிபதியை விழித்து! கனம் கோட்டார் அவர்களே ஊசி இடம்கொடுத்தால் தான் நூலைக் கோர்க்கலாம். எனவே, இந்தப் பெண் இடங் கொடுத்தமையால் தான் – ஒத்துப்போனமையால்தான் – எனது கட்சிக் காரர் அவருடன் பாலியலில் ஈடுபட்டார்.இது பலாத்காரம் அல்ல. ஆகவே, அவரை விடுதலை செய்யும்படி கனம் கோட்டார் அவர்களைத் தாழ்மையுடன் வேண்டுகின்றேன் என்று கூறி குற்றவாளிக்கு விடுதலை பெற்றுக்கொடுத்தார். இதனால் தன் வாழ்வைத் தொலைத்த அந்தப் பெண் தற்கொலை செய்து உயிரை மாய்த்தார். பேரன் அவ்வாறென்றால் அவரது வித்தும் அவ்வாறேதான் இருக்கும். தேர்தல் நாள் நெருங்க நெருங்க கஜேந்திரகுமார் தடித்த வார்த்தைகளை பயன்படுததி சபை நாகரிகமற்ற ஒருவராக மாறிவருகின்றார். துரோகம் துரோகி பற்றி அவர் பேசுவது நகைப்புக்கிடமானது. அந்த வசனங்களைப் பாவிப்பதற்கு அவருக்கு என்ன அருகதை இருக்கின்றது. என்றுதான் புரியவில்லை. அந்த வார்த்தைகள் அவரது அப்புவுக்கும் அப்புவின் அப்புவுக்கும்தான் பொருத்தமாக இருக்கும். அப்புவின் அப்பு 10 ஆயிரம் இலட்சம் மலையகத் தமிழர்களுக்கு துரோகம் செய்தவர். அவர்களது வாக்குரிமை, குடியுரிமை இரண்டையும் பறித்த சட்டங்களுக்கு ஆதரவாக வாக்களித்தவர். குமார் பொன்னம்பலம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக தீவிர பரப்புரையில் ஈடுபட்ட ஒரு தென்னிலங்கை சட்டத்தரணி. சிறிமாவோ பண்டார நாயக்க அவரை எனது கறுப்பு மகன் என்று மேடையில் வைத்துப் பத்துவருடங்களுக்கு முன்னர் பாராட்டியவர்.

முன்னஉ விடுதலைப் புலிகளின் தயவால் நாடாளமன்னறத்திற்கு தெரிவான கஜேந்திர குமார் நாடாளுமன்றத்தில் இருந்து எதைக் சாதித்தார் என்று சொல்ல முடியுமா? எனவும் அந்த துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப் வடமராட்சிப் பகுதியில் பரவலாக இப்படியான துண்டுப் பிரசுரங்கள் விநியோகிப்பட்டு வருவதாக தெரியவருகின்றது.

இல. 372, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அற்புதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.